# செம்மணி

நிலம் 2 துகள் 101 வள்ளுவர் ஆண்டு 2052, 25 ஆனி -01 ஆடி 2022 வாரமலர் பக்கங்கள் 35




# பெற்றோல் கப்பல் மேலும் தாமதம்

40 ஆயிரம் மெற்றிக்தொண் பெற்றோலுடன் இலங்கைக்கு வரவிருந்ததாகத் தெரிவிக்கப்பட்ட கப்பல் கொழும்பை வந்தடைவது மேலும் தாமதமாகின்றது. கடந்த வியாழக்கிழமை வந்தடையும் என்று தெரிவிக்கப்பட்ட இந்தக் கப்பல் ஒரு நாள் தாமதமாக வெள்ளிக்கிழமையே வந்தடையும் என்று எரிசக்தித்துறை அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்திருந்தார்.

அறிவிக்கப்பட்டபடி கப்பல் வெள்ளிக்கிழமை கொழும்பை வந்தடையவில்லை. அது வருவது மேலும் தாமதமாகும் என்று கப்பல் நிறுவனத்தால் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் காஞ்சன வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

கப்பல் வருகைக்கான புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று அவர் தெரிவித்தார். வெள்ளிக்கிழமை கப்பல் வந்து சேரும் என்ற தனது அறிவிப்பிற்காக

பக்கம் 02

### எதிர்காலத்தில் செலவினங்களைக் குறைக்க

# கடைசியில் அரச சேவையில் கை வைக்கிறது இந்த ஆட்சி

## பணியாளர்களுக்கு 5 வருட சம்பளமற்ற விடுமுறை வழங்க முடிவு

அதிகரித்துவரும் பொருளாதார நெருக்கடிகளைச் சமாளிக்கும் வகையில் அரச செலவினங்களைக் குறைப்பதற்கான வழி வகைகள் குறித்து ஆட்சியாளர்கள் ஆராயத் தொடங்கியுள்ளனர். அதன் ஒரு கட்டமாக அரச பணியாளர்கள் வெளிநாடு சென்று பணியாற்ற அல்லது உள்நாட்டிலேயே தனியார் நிறுவனங்ககளில் பணியாற்ற அனுமதிக்கும் வகையில் அவர்களுக்கு விடுமுறை வழங்குவது குறித்தும் ஆராயப்பட்டிருக்கிறது.

நாடு அதன் வரலாற்றிலேயே மிக மோசமான பொருளாதார நெருக்கடியைச் சந்

பக்கம் 03

# மண்ணெண்ணெய் வாங்க 10 நாள்களாக வரிசையில்

## மஸ்கெலியாவில் தொடரும் அவலம்





மலையக பெருந்தோட்டப் பகுதியான மஸ்கெலியாவில் தாம் மண்ணெண்ணெய்க்காக 10 நாள்களாகவும் பெற்றோலுக்காக 7 நாள்களாகவும் நீண்ட வரிசையில் காத்திருக்கிறார்கள் என்று

பக்கம் 19

# அவசர தேவைக்கான 200 மருந்துகள் ஒருசொட்டுகூட கையிருப்பில் இல்லை

## *முழு அளவிலான அவசர உதவி இலங்கைக்கு தேவை என்கிறது ஐ.நா.*

இலங்கைக்கு முழு அளவிலான மனிதாபிமான உதவி தேவைப்படுவதாக மனிதாபிமான விவகாரங்களை ஒருங்கிணைப்பதற்கான ஐக்கிய நாடுகள் அமைப்பு (ஓச்சா) அறிவித்துள்ளது.

தற்போது அவசர தேவைக்கான 200 மருந்துகள் இருப்பில் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது என்று ஓச்சாவின் அண்மைய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இன்னும் 163 மருந்துகளுக்கு இன்னும் இரண்டு மூன்று மாதங்களில் கடும் தட்டுப்பாடு


பக்கம் 19

செம்மணி
வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்
**ஆசிரியர்: தே.பிரேமானந்த்**

# பதவி விலகட்டும் ரணில் விக்கிரமசிங்க

1. 2019க்கு முந்திய வரி அறவீட்டு முறைக்கு நாடு திரும்பும்,
2. 2023க்கான நிதி நிலை அறிக்கையை கார்த்திகை மாதம் முன்வைப்பதற்கு முன்பாக புரட்டாதி மாதம் ஒரு இடைக்கால நிதி நிலை அறிக்கை முன்வைக் கப்படும்,
3. வரி மற்றும் வருமானம் தொடர்பாக பன்னாட்டு நாணய நிதிய அதிகாரிகளு டனான கலந்துரையாடல்கள் முடிவுக்கு வந்திருக்கின்றன அதேநேரம் பொது நிர்வாக நிதி கடன் நீடித்ததன்மை வங்கிகளின் நிலைத்தன்மை சமூக பாதுகாப்பு வலையமைப்பு என்பன பற்றிய கலந்துரையாடல்கள் நிதித்துடன் நீடிக்கின்றன,
4. நாணய நிதியத்துடனான உடன்படிக்கை அடுத்த மாத இறுதியில் முடிவுக்கு வரும் ஆனால் மிக முக்கியவிடயமான கடனைத் திருப்பிச் செலுத்துதலை மீள் கட்டமைப்புச் செய்வது தொடர்பான பருமட்டான விடயங்கள் அடுத்த மாதமே கலந்துரையாடப்படும்,
5. கடனை எப்படி மீளச் செலுத்துவது என்பது தொடர்பில் உதவ டலார்ட் மற்றும் கிளிபோர்ட் சான்ஸ் நிறுவனங்களின் பிரதிநிதிகள் தற்போது இலங்கையில் உள்ளன அவற்றின் துணையுடன் கடன் மீள்செலுத்துகைக்கான திட்டம் வகுக் கப்பட்டு வருகின்றது,
6. நிலையான பொருளாதாரத்திற்கான திட்டங்கள் மற்றும் ஏற்றுமதி வருமா னத்தை உடனடியாக அதிகரிப்பதற்கான வழிகள் குறித்து திறைசேரி அலுவ லர்கள் மத்திய வங்கி அலுவலர்கள் சுயாதீனமான தொழில்நிபுணர்கள் மற்றும் துறைசார் வல்லுநர்கள் சேர்ந்து தயாரித்து வருகிறார்கள்,
7. அரசுக்கு உதவுவதற்காக அமெரிக்க திறைசேரி அலுவலர்கள் திங்களன்று வருகிறார்கள் அரசால் மேற்கொள்ளப்பட்ட தொடக்க நடவடிக்கைகளை சாத்தி யமாக்குவதற்கான உதவிகளை இந்தக் குழுக்கள் வழங்கும்,
8. இந்தியா ஜப்பான் சீனா ஆகிய நாடுகளை இணைத் தலைமைகளாகக் கொண்ட கடன் உதவி மாநாட்டை நடத்துவது தொட ர்பான பேச்சுக்கள் நடந்து வருகின்றன என்பதுடன் பல நாடுகளுடன் முறிந்துபோயுள்ள உறவுகளை மீண் டும் ஒட்டவைப்பதிலும் கவனம் செலுத்தப்படுகிறது,
9. இலங்கைக்கு பன்னாட்டு நாணய நிதியத்தின் உதவி கிடைக்கும் வரை குறுகி காலக் கடன்களைப் பெறுவதற்காக உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, அமெரிக்கா மற்றும் நட்பு நாடுகளுடன் பேச்சுக்கள் இடம்பெறுகின்றன,
10. அடுத்த அறுவடைக் காலத்திற்கான உரத்தை இறக்குமதி செய்வதற்கு நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதேநேரம் சந்தையில் விலையைக் கட்டுப்ப டுத்தும் நோக்கத்துடனும் மக்களுக்கு போதிய அரிசியைக் கிடைக்கச் செய்யும் நோக்கத்துடனும் இந்தியாவில் இருந்து அரிசி இறக்குமதிக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது,
11. ஐக்கிய மக்கள் சக்தி (சஜித்) மற்றும் தேசிய மக்கள் சக்தி (ஜேவிபி) ஆகிய விவ சாயப் பண்ணைகளை உருவாக்க எடுத்திருக்கும் நடவடிக்கைகளுக்கு அரசின் முழு உதவி வழங்கப்படும்,
12. புதிய நாடாளுமன்றக் குழுக்களின் செயற்பாடு தொடர்பான முன்மொழி வொன்றை முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய முன்வைப்பார். அது விரை வில் கட்சித் தலைவர்களுக்கு வழங்கப்படும்,
13. சமையல் எரிவாயுவுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை நீக்கும் வகையில் உலக வங்கியின் 70 மில்லியன் டொலர் கடனில் 70 லட்சம் சிலிண்டர்கள் எரி வாயு கொள்வனவு செய்யப்படும்,

நாட்டின் தற்போதைய பிரச்சினைக்கு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்கவால் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட தீர்வுகள். ;இதில் மக்கள் எதிர்கொள்ளும் பெற்றோல், டீசல் பிரச்சினைக்கோ, பொருள்களின் விலை உயர்வைக் குறைக்கவோ, அல்லது விலை உயர்வை எதிர்கொள்வதற்கேற்ற வகையில் வருமான அதிகரிப்புக்கான வழிகள் பற்றியோ, குறைந்தபட்சம் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகள் குறித்தோ எந்தவித அறிவிப்பும் இந்தத் திட்டங்களில் இல்லை.
அரிசியை இறக்குமதி செய்தாலும் அதைப் பணம் கொடுத்த வாங்க மக்களுக்கு வருமானம் இல்லாத நிலையில் அரிசி இறக்குமதியால் என்ன பயன்? இவற்றில் எந்தவிடயம் குறித்தும் உடனடி நடவடிக்கையை எடுக்காத ரணில் விக்கிரமசிங்க தலைமை அமைச்சராகப் பதவியேற்றதில் எந்தப் பொருளும் இல்லை. நாட்டில் அரசியல் உறுதிப்பாடொன்று ஏற்படாமல் பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கப்போவதில்லை என்கிற நிலையில் ரணில் அதற்கான வாய்ப்பையும் தட்டிப் பறித்து மக்களையும் துன்பத்துக்குள் ஆழ்த்தியுள்ளார்.
மொத்தத்தில் ரணில் தலைமை அமைச்சரானதன் மூலம் ராஜபக்ச குடும்பம் காப்பற்றப்பட்டதேயன்றி மக்களுக்கு எந்தவித நன்மையும் கிடைக்கவில்லை. இந்த நிலையில் ரணில் பதவி விலகி நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மையளிக் கக்கூடிய தீர்வு ஒன்றை நோக்கி நாடு முன்னேறுவதற்கு இடமளிப்பதே அவர் இப்போது செய்யவேண்டிய பணி.




# நாணய நிதியத்தின் உதவி ஊழல் அரசியல்வாதிகளை பிணை எடுக்கக் கூடாது

*மூத்த இராஜதந்திரி எச்சசரிக்கை*

பன்னாட்டு நாணய நிதியத்துடன் இலங்கை ஆட்சியாளர்கள் பேச்சுக்களை நடத்திவரும் நிலையில் நிதியத்தின் கடனு தவி தேவை உள்ள மக்களுக்குப் பதிலாக ஊழல் அரசியல் வாதிகளைப் பிணையெடுக்கும் நடவடிக்கையாக அமை யக் கூடாது என்று எச்சரித்துள்ளார் மார்க் மல்லோக் - பிர வுன்.
மூத்த இராஜதந்திரியும் ஓபன் சொசைட்டி அறக்கட்டளைகள் அமைப்பின் தலைவரான மார்க் மல்லோக், கடந்த காலங் களிலும் தனக்குக் கிடைத்த உதவிகளைத் திசை திருப்பிய வரலாறு இலங்கைக்கு உண்டு என்றும் தெரிவித்தார்.
நாட்டின் தற்போதைய நெருக்கடிக்கு ஊழல் அரசியல் வாதிகள்தான் காரணம் என்பதை ஒப்புக்கொண்டே பன் னாட்டு நாணய நிதியம் தனது உதவி நிகழ்ச்சித் திட்டத்தை முன்வைக்கவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.
"இல்லையெனில், தேவை உள்ள மக்களுக்குப் பதிலாக ஊழல் அரசியல்வாதிகளை பிணையில் எடுப்பார்கள்" என்று மல்லோக்-பிரவுன் எச்சரித்தார்.
ஊழலற்ற ஆட்சியே நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு முக்கிய காரணம் என இலங்கையின் பொருளாதார நிபு ணர் நிஷான் டி மெல் கூறியதையொட்டி கருத்துத் தெரி வித்தபோதே பிரவுண் இந்த எச்சரிக்கையை விடுத்திருக்கி றார்.
இலங்கையில் நடைமுறையில் உள்ள முறைப்படுத்தப்பட்டு இயங்கும் ஊழலே தற்போதைய கடன் மற்றும் பொருளாதார நெருக்கடிக்குப் பெரும் பங்களிப்பைச் செய்துள்ளது என்று பொருளாதார நிபுணரர் நிஷான் டி மெல் தனது கீச்சகப் (ருவிற்றர்) பக்கத்தில் தெரிவித்திருந்தார்.
சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகளுக்கும் இலங்கை அதிகாரிகளுக்கும் இடையில் பேச்சுக்கள் இடம்பெற்றுவரும் நிலையில், அதில் எட்டப்படவுள்ள தீர்வு தொடர்பான நிகழ்ச்சி நிரலில் அரசியல்வாதிகளின் ஊழல் ஒழிப்பும் இடம்பெறுமா என்றும் பிரவுண் கேள்வி எழுப்பியுள்ளார்.

## பெற்றோல்...

அமைச்சர் மன்னிப்பும் கேட்டார்.
இந்தக் கப்பல் தாமதமாவதன் காரணத்தால் நாட்டில் பெற் றோலுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு மேலும் சில நாட்க ளுக்கு நீடிக்கும்.

## 13 வருடங்களுக்கு முன்னர் நடந்த கொலை வழக்கில்

# காவல் அதிகாரிகள் மூன்று பேர் மறியலில்

நீதிமன்றத்தால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தபோது 13 வருடங்களுக்கு முன்னர் சுட்டுக் கொல்லப்பட்ட ஒருவர் தொடர்பான வழக்கில் காவல் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட மூன்று காவல் அதிகாரிகளை விளக்கமறியலில் வைக்கும்படி கொழும்பு நீதிவான் மன்று உத்தரவிட்டது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களில் விலாச்சியா என்ற இடத்தைச் சேர்ந்த காவல் நிலையப் பொறுப்பதிகாரியும் அடங்குவார். மூத்த காவல் ஆய்வாளரும் (சீனியர் இன்ஸ்பெக்டர்) சார்ஜன்ட் ஒருவரும் ஏனைய இருவருமாவர். மூவரையும் இந்த மாதம் 28ஆம் நாள் வரையில் மறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

சதுன் லசித்த குமார விதான என்ற சந்தேகநபர் நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டிருந்த சமயம் அவரைச் சுட்டுக்கொன்றார்கள் என்று இந்த மூன்று காவல் அதிகாரிகள் மீதும் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.

13 வருடங்களுக்கு முன்னர் கெசல்வத்த காவல் நிலையத்திற்குட்பட்ட மாளிகாவத்தை தொடருந்து வீடமைப்புத் தொகுதிக்குள் வைத்து சந்தேகநபர் சுட்டுக்கொல்லப்பட்டார். இந்த வழக்கில் சட்ட மா அதிபரின் அறிவுறுத்தலுக்கமைய காவல் அதிகாரிகள் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# இலங்கையில் மின் இருட்டை அனுபவித்த ஆஸி வீரர்கள்

கிரிக்கெட் சுற்றுப்போட்டிக்காக இலங்கைக்கு வருகை தந்திருக்கும் ஆஸ்திரேலிய வீரர்கள் நாட்டில் நிலவும் மின்வெட்டு நேர இருளையும் அனுபவித்தனர்.

இரவுணவுக்காக உணவகம் ஒன்றுக்கு அவர்கள் சென்றிருந்த சமயம் மின்சாரம் தடைப்பட்டது. மின் பிறப்பாக்கிகள் இயக்கப்பட்டு மீண்டும் மின் கிடைக்கும் இருளில் இருந்த அவர்களுக்கு ஆறுதலாக உணவக ஊழியர்களால் ஒரு மெழுகுதிரி கொளுத்தி வைக்கப்பட்டது.

இது தொடர்பில் தனது கீச்சக (ருவிற்றர்) பக்கத்தில் பதிவிட்டிருக்கிறார் ஆஸ்திரேலிய வீரர் பற் குமின்ஸ். இந்த வாரத் தொடக்கத்தில் உணவகத்தில் மின்சாரம் வரும் வரை காத்திருக்கிறோம், அதன் பின்தான் இரவுணவைத் தொடங்க முடியும் என்று தன்படம் (செல்பி) ஒன்றைப் பதிவிட்டுள்ளார்.

"இலங்கை மிகவும் கடினமான காலத்தை எதிர்கொண்டுள்ளது. ஆனாலும் இங்குள்ள மக்கள் எங்களை ஆச்சரியப்படுத்தியுள்ளனர். நாங்கள் இங்கு இருப்பதற்காக நன்றியுள்ளவர்களாக இருக்கின்றோம்" என்று தெரிவித்தார்.

## கடைசியில்...

கடைசியில்...

தித்து வருகின்றது. அதனால் அரச செலவினங்களைக் குறைக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் ஆட்சியாளர்கள் உள்ளனர். அரச செலவினங்களில் கணிசமானதாக உள்ள அரச பணியாளர்களின் சம்பளத்தைக் குறைப்பதன் மூலம் இதற்கான வழிவகைகளைத் தேடிக்கொள்ள ஆட்சியாளர்கள் முற்பட்டுள்ளனர்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு பன்னாட்டு நாணய நிதியத்தின் நிதி உதவிகளை ஆட்சியாளர்கள் எதிர்பார்த்துள்ள நிலையில் அரச பணியாளர்களை ஆட்குறைப்புச் செய்வது குறித்த திட்டத்தை ஆட்சியாளர்கள் முன்வைத்துள்ளனர்.

இலங்கையில் தற்போது 15 லட்சம் பேர் அரச சேவையில் பணியாற்றி வருகின்றனர். கடந்த 15 வருடங்களில்தான் அரச பணியாளர்களின் எண்ணிக்கை இரண்டு மடங்காகியது என்கின்றன உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள். நாட்டின் மக்கள் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது ஒவ்வொரு 14 பேருக்கும் ஒருவர் அரச சேவையாளராக இருக்கிறார். இருந்தாலும் அரச சேவையின் வினைத்திறன் என்பது ஆசியாவிலேயே மிகக் குறைவானதாகவே உள்ளது.

பெரும்பாலான அரச சார்பு நிறுவனங்கள் அரசியல்வாதிகளின் ஆதரவாளர்களுக்கு பணியிடம் வழங்குவதற்கான அமைப்புக்களாகவே இருக்கின்றன. இதனால் அவர்களுக்கு வழங்கப்படும் மாதச் சம்பளம் மற்றும் ஓய்வூதியம் என்பன அரசுக்கு பெரும் சுமையாக மாறியுள்ளது. சக்தி வலுத்துறை அமைச்சர் காஞ்சனா விஜயசேகர அண்மையில் இதற்கான உதாரணம் ஒன்றைத் தெரிவித்திருந்தார். அரசின் இலங்கை மின்சார சபையில் 26 ஆயிரம் பேர் பணியாற்றுகிறார்கள். ஆனால் 5 ஆயிரம் பேர் பணியாற்றினால் போதுமானது என்று அவர் தெரிவித்தார்.

2021ஆம் ஆண்டில்0 அரசு வரிகள் மூலம் சேகரித்த ஒவ்வொரு ரூபாயிலும் 86 சதம் அரச பணியாளர்களின் சம்பளம் மற்றும் ஓய்வூதியமாகச் செலவிடப்பட்டுள்ளது. இதனால் சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற துறைகளுக்கு மிகச் சொற்பமாகவே நிதி ஒதுக்க முடிந்திருக்கிறது.

பெரு வீக்கமாகிவிட்ட அரச பணியாளர்களை உடனடியாகக் குறைக்கவேண்டும் என்று பன்னாட்டு நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியன வலியுறுத்தி வந்திருக்கின்றன. அரச சேவையை மறுசீரமைத்து அதனை செயல் திறனுள்ளதாக்கவேண்டும் என்றும் அவை அறிவுறுத்தியிருக்கின்றன.

எது எப்படியிருப்பினும் தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக அரச செலவினங்களைக் குறைப்பதற்காக மாற்றுத் திட்டங்கள் குறித்துச் சிந்திக்கவேண்டிய தேவை அரசுக்கு ஏற்பட்டிருப்பதுடன் முதற்கட்டமாக 30 சதவீதம் அரச ஊழியர்களை ஆட்குறைப்புச் செய்யத் திட்டமிடப்படுவதாகவும் தெிவிக்கப்படுகின்றது.

இதையடுத்து இந்த வாரம் பொது நிர்வாக அமைச்சு ஒரு திட்டத்தை முன்வைத்தது. அரச பணியாளர்கள் 5 வருடங்களுக்கு வெளிநாட்டில் பணியாற்ற சம்பளமற்ற விடுமுறையைப் பெற முடியும் அல்லது அதே காலப்பகுதிக்கு உள்நாட்டில் தனியார் நிறுவனங்களில் பணியாற்ற முடியும். 13.06.2022 அன்று நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் இது தொடர்பான முடிவும் எட்டப்பட்டது.

அமைச்சரவையின் இந்த முடிவு தொடர்பில் கடந்த 22ஆம் நாள் இது தொடர்பான சுற்றறிக்கை ஒன்று அமைச்சின் செயலாளரினால் அரச திணைக்களங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அரச பணியாளர்கள் விடுமுறை பெற்றுக்கொள்ளும் இந்தக் காலப்பகுதிக்கான அவர்களின் சேவை மூப்பு மற்றும் ஓய்வூதியம் என்பன தடையின்றி வழங்கப்படும் என்றும் அந்த அறிக்கை கூறுகின்றது.

இலங்கையில் அரச பணியாளர்களின் எண்ணிக்கை 5 லட்சமாக இருந்தாலே போதுமானது. தற்போது அது மூன்று மடங்காக இருக்கையில் உடனடியாக முழுமையாக ஆட்குறைப்புச் செய்வதென்பது நடக்கக்கூடிய காரியமல்ல என்று தெரிவிக்கிறார் மூத்த நிர்வாக சேவை அதிகாரி ஒருவர்.



# சிறைக்குள்...

## 62

## அரசியல் கைதிகளுக்கு வெளிநாட்டுப் பண உதவி என்பது பொய்

தர்மராசா

முதற் தடவையாகச் சிறைக்குள் கொண்டுவரப்படுகின்ற கைதியை அங்குள்ள தீங்கியல் கைதிகளுடன் சேர்த்து அடைக்கக் கூடாது என்பதில் கவனம் செலுத்தினாலே சம்பந்தப்பட்ட குற்றத்துக்கான தண்டனையுடன் நற்பிரசையாக மீண்டும் அவரைச் சமூகத்துக்கு வழங்கும் காரியத்தைச் சிறை நிர்வாகம் திறம்படச் செய்ய முடியும். ஒரு மனிதனின் குணாம்சம் என்பது அவனது குடும்பச் சூழலையும் அவன் வாழ்ந்த சமூகத்தையும் அடிப்படையாகக் கொண்டமைகிறது. அதுவே அவனது இயல்பாகிறது. வெளியிலுள்ளவர்கள் எந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கிறார்கள் எனத் தன்னைப் பற்றியும் தனது சூழலைப் பற்றியும் அவன் என்ன நினைக்கிறான் என்ற விளைவே அவனது எதிர்காலத்தைத் தீர்மானிக்கும்.

**8.1.2001** அன்று மட்டக்களப்புச் சிறையிலிருந்த சகல கைதிகளையும் புதிய கட்டடத்தின் மேல் மண்டபத்துக்கு அழைத்தார்கள். இந்தியாவிலிருந்து காணான் கிறிஸ்தவ சபையைச் சேர்ந்த போதகர் ஒருவர் வந்து போதனை செய்தார். அவரை ஒரு நீதிபதி அங்கு அழைத்து வந்திருந்தார். நீதிபதி சிறைச்சாலைக்கு வந்தால் அவருக்குக் கைதிகள் மத்தியில் மரியாதை இருக்கும்.

இயேசு நல்லவர், அற்புதங்கள் செய்வார் என்று தொடங்குகின்ற ஒரு பாடலைப் போதகர் எல்லோரையும் பாடச் சொன்னார். எம்மைப் பாலர் பாடசாலை மாணவர்கள் என்று நினைத்துப் போதனை செய்தார். விஜய், அஜித், ஜோதிகா, ரம்பா ஆகியோர் உங்கள் முன்னால் வந்து நின்றால் எவ்வளவு சந்தோசப்படுவீர்கள்? என்றார். தமிழ் நாட்டுச் சனத்தைப்போல எங்களையும் நினைத்து அவர் கதைத்ததற்கு ஏற்கனவே அவருடன் பழகிய இலங்கையர் கொடுத்த மனப்பதிவுதான் காரணம் என நினைக்கிறேன். நீதிபதி அவரைக் கூட்டி வராவிட்டால் இடையிலேயே போதகர் கலைக்கப்பட்டிருப்பார். அந்தச் சூழலிலும் சில கைதிகள் நிகழ்

வைக் குழப்ப முயற்சித்தனர். ஆனா லும் அவர் ஏதோ சொல்லிவிட்டுப்போகட்டும் குழம்ப வேண்டாம் என்று அவர்களைத் தடுத் தோம். போதகருக்குக் காட்டமான பதில் ஒன்றை அனுப்பவதற்காக அவரது முகவரி யையும் வாங்கி வைத்தோம். பின் னர் எழுதுவதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

பிரிட்டனிலிருந்து சிலர் அரசியல் கைதிகளின் குடும்பங்களுக்குப் பண உதவி செய்வதாக அறிந்த சாந்த குணவடிவேல் என்பவர் நடத்துகிற அமைப்புக்கு 17.1.2001 அன்று கடிதம் அனுப்பினேன். சிலருக்கு அவர் பணம் அனுப்பினார் என்று அறிந்தேன். அவ்வாறு பணம் கிடைத்தால் ஏதோ ஒரு ஆறுதலாக இருக்கும் என மட்டக்களப்புச் சிறையிலிருந்த பலர் கடிதம் அனுப்பினார் கள். எனக்கோ வேறு நண்பர்களுக்கோ பண உதவி கிடைக்கவில்லை. சிலருக்கு உதவி கிடைத்ததாகக் கூறப்பட்டபோதிலும் நான் விடுதலையாகும்வரை அதை உறுதிப்படுத்த முடியவில்லை.

18.1.2002 அன்று பன்னாட்டுச் செஞ் சிலுவைச் சங்க ஊழியர் தோமஸ் எம்மை வந்து பார்த்தார். அந்த ஆண்டுக்குரிய செஞ் சிலுவைச் சங்கத்தின் குறிப்புப் புத்தகம் ஒன் றைத் தந்துபோனார். பல மூத்த கைதிகள் பன்னாட்டுச் செஞ்சிலுவைச் சங்கத்தின் பல வருடக் குறிப்புப் புத்தகங்களைச் சேர்த்து வைத்திருந்தார்கள். அவர்களைப் பொறுத் தவரை ஒவ்வொரு வருடங்களும் கழிந்து போயினவே தவிர அவர்கள் விடுவிக்கப்பட வில்லை என்பதற்கு அதுவே நல்ல எடுத்துக் காட்டாகும்.

21.1.2002 அன்று வீரகேசரிப் பத்திரி கையில் ஒரு செய்தி வெளிவந்தது. நோர் வேக் குழு கேட்டுக்கொண்டதற்கிணங்க குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை மட்டும் ஆதார மாக வைத்து சிறைச்சாலையில் தடுத்து வைக் கப்பட்ட கைதிகளை விடுதலை செய்யவிருப் பதாக. பின்னர் அவ்வாறான விடயங்கள் எவையும் நடைமுறைக்கு வரவில்லை.

21.1.2002 அன்று நீதிமன்றம் போய்வந்த ஒரு தீங்கியல் கைதியின் காற்சாட்டையைக் கழற்றி உள்ளாடையையும் கழற்றி அவனது குதத்துக்குள் பணம், கஞ்சா என எதையாவது மறைத்து வைத்திருக்கிறானா? என்று சிறைச் சாலை ஊழியர்கள் பரிசீலித்தனர். அவன் அவ்வாறான விடயங்களில் ஈடுபட்டதால் நீதி மன்றத்துக்கு அவன் போய்வரும்போதெல் லாம் அவ்வாறு பரிசோதிப்பது வழக்கம் என்று சிறைச்சாலை ஊழியர் ஒருவர் என்னிடம் கூறினார். மனிதன் நம்பகத் தன்மையை இழந்துவிட்டால் மிக மோசமாகவே நடந்து கொள்வான். அதை அவன் சகித்துக்கொள் ளும் பட்சத்தில் மேலும் குற்றமிழைக்கவும் எதிர்பார்ப்பு இல்லாமலும் வாழத் தொடங்கி விடுகிறான். அவமானம் என்பது தொடக்கத் தில் சங்கடமானதாக இருந்தாலும் பழக்கப் பட்ட பின்பு அதுவொரு பிரச்சினையாகவே இல்லாது போய்விடுகிறது.

(தொடரும்)

# பயனில்லா சுவாமி அறை...!

**சாருஷன்**

மனை அமைக்கும் நம்ம வர்கள் தமது மனையில் பெரிய அறையைச் சாமிக்கு ஒதுக்குகிறார்கள். சாமி வசிப்ப தாகக் கருதும் அந்த அறையின் வாசல் வடக்கு அல்லது கிழக்குத் திசையில் இருக்கவேண்டும் என் றும், அந்த அறையின் அகல - நீளம் குறிப்பிட்டளவில் இருக்க வேண்டும் என்றும், கதவு - நிலை - யன்னல்கள் என்பனவும் குறிப்பிட்ட அளவில், இந்த இடத் தில் இன்ன மரத்தில் செய்யப் பட்டவையாக அமைக்கப்பட வேண்டும் என்றும் வாஸ்து பார்த்துச் சாத்திர சம்பிரதாயங் களைக் கடைப்பிடித்துக் கட்டிய மைக்கிறார்கள்.

சாமி குடிகொள்வதற்காக அவர்களால் பெருமெடுப்பில் கட்டப்படுகின்ற அந்த அறை அந்த வீட்டுக்கு ஏதாவது பய னைக் கொடுக்கிறதா? என்றால் நம்பிக்கை என்பதற்கப்பால் எதையும் நிரூபிக்க முடியாமல் காரண - காரியம் சொல்வதே அதிகமாகவுள்ளது. ஆனால் வெளிப்படையாகவே பயனற்ற ஓர் அறையாக அந்த வீட்டில் சுவாமி அறை இடத்தைப் பிடித்த பகுதியாக இருப்பதைக் காண முடியும்.

**இந்திய - இலங்கை வழக்கம்**

இந்திய, இலங்கைப் பூர்வீகத் தினர் அவர்தம் பாரம்பரியத்தின் படி கொட்டில் வீடுகளிலேயே வாழ்க்கை நடத்தினர். இந்தக் கொட்டில் வீடுகள் இலுக்கு, வைக் கோல் ஆகியவற்றால் வேயப் பட்டவையாக இருந்தன. இந்தச் சிறிய வீடு முற்றிலும் ஓர் அறை யாக மாத்திரமே இருந்தது. அதில் சாமி அறை என்ற ஒன்று இருக்கவில்லை. அதன் பின்னர் கிடுகு, பனையோலை ஆகிய வற்றால் வேயப்பட்ட வீடுகள் அமைக்கப்பட்டன. அவையும் ஓர் அறையாகவே இருந்தன. இதன் பின்னர் சுண்ணாம்புக்கல், செங்கல், சீமெந்துக் கல் ஆகி யன பயன்படுத்தி வீடுகள் அமைக்கப்பட்டன. அத்திபாரம் அமைக்கப்பட்டு அதன் மேல் சுவர் எழுப்பப்பட்ட இந்த வீடு கள் 18ஆம் நாற்றாண்டுக்குப் பின்னர் ஏற்பட்ட மாற்றம். அத ற்கு முன்னர் ஆலயங்கள், அரண் மனைகள் ஆகியனவே கல்லால் கட்டப்பட்டன. மக்களின் வீடு கள் அவ்வாறு கட்டப்படவில்லை. அதற்கான வசதியும் அவர்க ளிடம் இருக்கவில்லை. மக்க ளின் பூர்வீக வணக்கத்திலும், வீடு அமைக்கும் விடயத்திலும் சாமி அறை என்ற ஒன்று இருக்க வில்லை. கி.பி 10ஆம் நூற்றாண்





இந்த வார சமையல்

# உள்ளிக் குழம்பு

வெந்தயத்தையும் வெங்காயத்தையும் அதிகம் சேர்த்து ஆக்கும் வெந்தயக் குழம்பைப்போல உள்ளிக் குழம்பும் வித்தியாசமானது. மரக்கறி, மாமிச வகைகள் சேர்க்காமல் வெறுமனே உள்ளியை மாத்திரம் முதன்மையாகக் கொண்டு ஆக்கப்படும் உள்ளிக் குழம்பு சுவையிலும் வேறுபட்டது. வாய்வு, மற்றும் வயிற்றுக்கோளாறு ஆகிய பல உடற்பிரச் சினைகளுக்கு உள்ளியை மூலிகைபோல பயன்படுத்தும் நம்மவர்கள் கறி வகைகளுடன் சிறிதளவில் சேர்த்தே உள் ளியை உணவுடன் உள்ளெடுக்கின்றனர். பழங்காலத்தில் பாட்டிகளின் பரிந்துரையாகப் பல வைத்தியங்களில் உள்ளி பயன்பட்டது. ஆனால், இந்த உள்ளிக் குழம்போ உள்ளியை மாத்திரம் முதன்மைப்படுத்திச் செய்யப்படுவது. அத்தகைய உள்ளிக் குழம்பு பற்றி இந்த வாரம் பார்ப்போம்.

**தேவையான பொருள்கள்**

உள்ளி - 25துண்டுகள், வெந்தயம் - ஒரு தேக்கரண்டி, சின்னவெங்காயம் - 50கிராம், தக்காளிப்பழங்கள் - 2, மிள காய்த்தூள், மல்லித்தூள், தேவைக்கேற்ப, கடுகு, உழுத்தம் பருப்பு, சீரகம் - சிறிதளவு, உப்பு - தேவைக்கு, புளி - சிறி தளவு, கறிவேப்பிலை, மஞ்சள்தூள் - சிறிதளவு. நல் லெண்ணை - ஒரு மேசைக்கரண்டியளவு.

**எப்படிச் செய்வது...?**

சட்டி ஒன்றுக்குள் நல்லெண்ணெயை ஊற்றிஅ து சூடாகி யதும் கடுகு, உழுந்து, வெந்தயம், சீரகம், கறிவேப்பிலை ஆகியவற்றை இட்டுத் தாழித்துக்கொள்ளுங்கள். அதற்க டுத்து நறுக்கிய உள்ளித்துண்டுகள், வெங்காயம் ஆகிய வற்றைப்போட்டு நன்கு தாழித்துக்கொள்ளுங்கள். பின்னர் தக்காளியை அரைத்து அதனுள்போட்டு நன்கு வேகவி டுங்கள். இதனுடன் புளிக்கரைசல், உப்பு, மிளகாய்த்தூள், மல்லித்தூள் ஆகியவற்றை இட்டு தேவைக்கேற்ப நீர் விட்டு நன்கு கொதிக்க விடுங்கள். குழம்புப் பதம் வந்ததும் இறக் கிப்பரிமாறலாம்.

டில் சோழர்கள் தஞ்சைப் பெருங்கோவிலைக் கட் டியபோதும் சாதாரண மக்கள் கல்வீடுகளைக் கட்டி வாழவில்லை. குடிசைகளே அதிகம் இருந் தன. அதனால்தான் அவை பிற்காலத்தில் அழிந்து போயின.

**பிற்கால வீடுகளில் சாமிக்கு இடம்**

சிங்கப்பூர், மலேசியா நாடுகளுக்குச் சென்று தொழில் புரிந்த யாழ்ப்பாணத்தவர்கள் சுண்ணாம் புக்கல் 19, 20ஆம் வீடுகளை அமைத்தார்கள். அப்போது சாமி அறையும் கட்டப்பட்டது. இது கி.பி 18ஆம் நூற்றாண்டுடக்குப் பிற்பட்ட மாற்றம்.

தற்போது வீடுகட்ட வசதியில்லாத மக்களுக்கு அரசின் வீடமைப்புத் திட்டம் மூலம் 2 அறைக ளைக்கொண்ட சிறிய வீடொன்று அமைத்துக் கொடுக்கப்படுகிறது. அந்தக் குடும்பங்களில் 5க்கு மேற்பட்ட அங்கத்தவர்கள் இருந்தாலும் 2 அறைகளைக் கொண்ட அந்த வீட்டில் பெரிய அறை சாமிக்கு ஒதுக்கப்படுகிறது. அந்த அறைக் குள் யாரும் படுத்துறங்கக்கூடாது, பெண்கள் படுத்தால் தீட்டு என்கிற நம்பிக்கையும் இருக்கி றது. வீட்டின் ஏனைய பகுதியைப்போலன்றி பாவ னைக்குதவாமல் அல்லது பாவனை - புழக்கம் குறைந்த பகுதியாக அந்த இடம் இருக்கிறது.

**மனித மாற்றம்**

வீட்டில் சுவாமி அறைக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற யாழ்ப்பாணத்தவர்கள் கொழும்பு போன்ற பகுதிகளுக்குச் சென்று வாழும்போது அங் குள்ள நிலத்தின் வடிவத்துக்கு ஏற்ப கட் டப்பட்ட மாடிவீட்டுத் தொகுதியில் சாமி அறை இருக்கிறதா? இருந்தால் அது வடக்கு வாசலா, கிழக்கு வாசலா? பெரிய அறை சாமிக்கு ஒதுக் கப்பட்டிருக்கிறதா என்றெல்லாம் அலட்டிக்கொள் வதில்லை. தமது ஊரில் இறப்பு வீட்டுக்குப்போய் வந்ததும் வீட்டுக்கு வெளியே நின்று நீரை வாங்கி உடல் நனைத்துவிட்டு உள்ளே சென்று நீராடும் இவர்கள் அங்கு இறப்பு வீட்டுக்குப் போய் வந்தால் அந்த யாரோ கட்டிய வீட்டுக்கு வெளி யில் இருப்பதோ, வெளியே நின்று குளிக்கவோ செய்வதில்லை. மாடித் தொகுதியில் தாம் தற் காலிகமாக வைத்திருக்கும் சாமி அறையையும் தாண்டிப்போய் குளியல் அறையில் குளிப்பார்கள். ஒரு வீட்டில் ஒவ்வொரு சதுர அடியும் பயன்ப டுத்தப்படல் வேண்டும். தேவைகள் அதிகமுள்ள இந்தக் காலத்தில் ஓர் அறையை அதுவும் பெரிய அறையைச் சாமிக்கு ஒதுக்குவது புத்திபூர்வமான விடயம் அல்ல.

இந்துக் கடவுளரை ஓவியமாக வரைந்தவர் இந்திய ஓவியர் ரவிவர்மா. அவரது ஓவியங்க ளைக் காட்சிப்படுத்துவதற்காகப் புது மனைப் புகு விழாவின்போது படம் வைக்கும் சடங்கும் அதற்கு வேறாகப் பணம் செலவிடுவதும் அவசிய மில்லை. யாழ்ப்பாணத்தில் அழிந்துபோயுள்ள, கைவிடப்பட்டுள்ள வீடுகளில் பல வடக்கு வாசல் பார்த்து சாமிக்குப் பெரிய அறை ஒதுக்கப்பட்டு ரவிவர்மாவின் ஓவியங்கள் வைத்துச் சடங்குகள் செய்த வீடுகளே. சாமி அறை என்பது தமிழரின் பூர்வீகப் பண்பாட்டில் இல்லாத ஒன்று. பிராம ணியச் செல்வாக்கின் பின்னர் சைவர்கள் இந்துக் களாக மதம் மாற்றப்பட்டபோது கொண்டுவரப் பட்டதே.

# திருத்தி எழுத ஒன்றுமில்லை என்று உணரும்போது எழுதி முடிந்துவிட்டதாக அர்த்தம்



தமிழில்
எஸ்.அப்துல் மஜீத்

## ஜேம்ஸ் பால்ட்வின் நேர்காணல்

சென்ற நூற்றாண்டில் வெளியான சிறந்த நாவல்களின் பட்டியல்களில் ஜேம்ஸ் பால்ட்வினின் (James Baldwin) நாவலான 'கோ டெல் இட் ஆன் தி மவுன்டைன்' (Go Tell It On The Mountain) தவறாமல் இடம்பெறும். ஆப்ரிக்க - அமெரிக்கரான ஜேம்ஸ் பால்ட்வின் சென்ற நூற்றாண்டின் மிகச் சிறந்த எழுத்தாளர்களில் ஒருவராக அடையாளப் படுத்தப்படுபவர். அவரது படைப்புகள் கறுப்பின மக்கள் எதிர்கொள்ளும் சமூக நெருக்கடி, உளவியல் நெருக்கடி, தனிமனித பாலியல் நெருக்கடி ஆகியவற்றைப் பேசுபவை. 'வெள்ளையின உலகில் கறுப்புத் தோல் உடையவனாக இருப்பது எப்படியானதாக இருக்கும் என்பதை உணரச் செய்யும்' என்று பால்ட்வினின் படைப்புகள் குறித்து விமர்சகர்கள் குறிப்பிடுவது உண்டு.

2020இல் அமெரிக்காவில் ஜார்ஜ் பிளாய்ட், வெள்ளையினக் காவல் துறை அதிகாரியால் கொடூரமாக கொல்லப்பட்ட பிறகான விவாதங்களில், ஜேம்ஸ் பால்ட்வினும், அவரது படைப்புகளும் நினைவுகூரப் பட்டன. அமெரிக்காவின் நிறவெறியின் கொடூர முகத்துக்கு ஜேம்ஸ் பால்ட்வின் வாழ்க்கையும் ஒரு சாட்சி.

பால்ட்வின் 1924இல் நியூயார்க் நகரில் உள்ள ஹார்லெம் பகுதியில் பிறந்தார். அவரது உயிரியல் தந்தை யாரென்று அவருக்குத் தெரியாது. பால்ட்வினின் தாயும் இறுதிவரை அதை அவரிடம் சொல்லவில்லை. 1927இல் பால்ட்வினின் தாய் எம்மா பெர்டிஸ் ஜோன்ஸ், டேவிட் பால்ட்வின் என்பவரை மறுமணம் செய்துகொள்கிறார். டேவிட் பால்ட்வின் ஒரு தொழிலாளி. கூடவே, தேவாலயத்தில் பரப்புரை செய்பவர். அவர்களுக்கு எட்டு குழந்தைகள் பிறக்கின்றன. டேவிட் பால்வின் குடும்பத்தைக் கவனித்துக் கொள்பவராக இல்லை. தவிர, பிள்ளைகளிடம் மூர்க்கமாக நடந்துகொள்பவராகவும் இருந்தார். இதனால், வீட்டுச் சூழல் ஜேம்ஸ் பால்ட்வினுக்கு மகிழ்ச்சிகரமானதாக இல்லை. கூடவே ஏழ்மை வேறு.


பால்ட்வினின் வீட்டுச்சூழல் மட்டுமல்ல; புறச்சூழலும் மிகவும் கொடுமையானதாக இருந்தது. ஆப்ரிக்க பூர்வீகம் கொண்ட மக்கள் அதிகம் வாழும் பகுதிகளில் ஒன்று ஹார்லெம். அப்போது அமெரிக்காவில் கறுப்பினத்தவர்களின் மீதான ஒடுக்குமுறை தீவிரமாக நிலவியது. கறுப்பினத்தவர்களுக்கு வேலை மறுக்கப் பட்டது. வீடு மறுக்கப்பட்டது. பால்ட்வின் அவரது இளமைப் பருவம் முழுவதும் மிக மோசமாக நிற ஒடுக்குமுறையை எதிர்கொண்டுவந்துள்ளார். இந்தச் சமூக ஒடுக்குமுறை காரணமாக அவரது கறுப்பின நண்பர்கள் பலர் போதை, விபச்சாரம், வன்முறை என்ற பாதையில் சென்றனர். ஆனால், பால்ட்வினின் முன்னால் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு இருந்தது.

பால்ட்வின் பள்ளியில் நன்றாகப் படிக்கக்கூடிய மாணவர். பள்ளி வயதிலேயே இலக்கிய நூல்கள் அவருக்கு அறிமுகமாகிவிட்டன. குடும்பச் சூழலிலிருந்தும், சமூக நெருக்கடியிலிருந்து வாசிப்பு அவ

ருக்கு சற்று விடுதலை அளிக்கக் கூடியதாக இருந்தது. பால்ட்வின் தன்னுடைய 14 வயது 17 வயது வரையில் மூன்று ஆண்டுகாலம் பள்ளி நேரம் போக, தேவால யத்தில் பரப்புரை செய்பவராகவும் இருந்துள்ளார்.

பால்ட்வினின் 19ஆம் வயதில் அவரது தந்தை இறந்துபோகிறார். குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு பால்ட்வினின் மேல் விழுகிறது. இரவு - பக லாக வேலை செய்கிறார். விடுதியில் பாத்திரம் கழுவு வது, இறைச்சியை பார்சல் செய்யும் வேலை எனப் பல வேலைகளையும் பால்ட்வின் செய்தார். ஆனால், உள்ளுக்குள் எழுத்தாளராக வேண்டும் என்று தீராத வேட்கை அவரிடம் இருந்தது. அதன் நீட்சியாக அவர் மேற்கொண்ட முயற்சிகளில், புத்தகங்களுக்கு மதிப் புரை எழுதும் வேலையை உருவாக்கிக்கொண்டார். படிப்படியாக எழுத்து வட்டம் அறிமுகம் அவருக்கு நிகழ்கிறது. அப்படியாகக் கலைத் துறை சார்ந்து ஒரு பணிக்காக அவருக்கு நல்கை கிடைக்கிறது.

பால்ட்வினுக்கு அமெரிக்கச் சூழல் சிறிதும் வாழ முடியாதாக இருந்தது. அங்கு நிற ரீதியாக மிக மிக மோசமான ஒடுக்குமுறையை அன்றாடம் எதிர்கொள்ள வேண்டியதாக இருந்தது. கூடவே, அவர் தன்பால் ஈர்ப்பாளர். அவருள் ஒரு பயம் இருந்துகொண்டிருந்தது. அமெரிக்காவில் தொடர்ந்து தான் இருக்கும்பட்சத்தில் ஒன்று, தான் யாரையாவது கொல்ல நேரிடும்; இல்லை யென்றால், தன்னை யாராவது கொலைசெய்வதுவிடு வார்கள் என்று அஞ்சுகிறார். எனில், அமெரிக்காவிலிருந்து வெளியேறுவதான், தான் பிழைத்திருப்பதற்கான ஒரே வழி என்கிற முடிவுக்கு வருகிறார். நல்கை மூலம் கிடைத்த பணத்தில் நாற்பது டொலரை மட்டும் எடுத் துக்கொண்டு மீதத்தை வீட்டுக்குக் கொடுத்துவிட்டு, தன்னுடைய 24ஆம் வயதில் ஒரேடியாக வீட்டிலிருந்து விடைபெற்றுச் செல்கிறார் - அமெரிக்காவிலிருந்து பிரான்ஸுக்கு.




அப்போது பிரான்ஸின் கலாசாரச் சூழல், அறிவுச் சூழல் உலக நாடுகளுக்கு ஒரு முன்மாதிரியாக இருந்து. பால்ட்வி னின் வாழ்க்கையில் பிரான்ஸ் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. ஜான் பால் சார்த்தர், சிமோன் தி பூவார், மார்க்ஸ் எர்ன்ஸ்ட், ட்ரூமன் கபோட் உட்பட பல முக்கிய ஆளுமைகளின் அறி முகம் பால்ட்வினுக்கு கிடைத்தது. அறி வுச் சூழலில் புழங்கும் வாய்ப்பை பிரான்ஸ் அவருக்கு ஏற்படுத்தித் தந்தது. எழுத்துலகில் முழு வீச்சில் செயல்படுகி றார். அவருடைய கட்டுரைகள் கவனம் ஈர்க்கத் தொடங்கின. பிரான்ஸில் இருந்த முதல் எட்டு ஆண்டுகளில் அவரது முக் கியமான மூன்று படைப்புகள் - 'கோ டெல் இட் ஆன் மவுன்டைன்' (Go Tell It On The Mountain, 1953), 'நோட்ஸ் ஆஃப் ஏ நேட்டிவ் சன்' (Notes of a Native Son, 1955) 'ஜியோவன்னிஸ் ரூம்' (Giovanni's Room) வெளிவந்தன. அவ ரது எழுத்துச் சூழல் பெரும் தாக்கம் செலுத் தியது. அவற்றின் வழியாக ஜேம்ஸ் பால்ட்வின் கவனிக்கத்தக்க சர்வதேச எழுத்தாளராக கவனம் பெறலானார்.

இந்நிலையில், 1957இல் பால்ட்வின் மீண்டும் அமெரிக்காவுக்குத் திரும்பினார். அங்கு மனித உரிமைச் செயல்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டார். அந்த வகையில் பால்விட்ன் எழுத்தாளராக மட்டுமல்ல தீவிர களச் செயல்பாட்டாளராகவும் அறி யப்படுபவர்.

பால்ட்வின் மொத்தமாக ஆறு நாவல் கள் எழுதியுள்ளார். நான்குக்கு மேற்பட்ட கட்டுரைத் தொகுப்புகளும், நாடகங்க ளும், வெளியாகியுள்ளன. அவரது நாவல் கள் பேசப்படும் அளவுக்கு அவரது கட் டுரைகளும் இன்றளவும் பேசப்படுகிறது. 1987இல் தன்னுடைய 63ஆம் வயதில் வயிற்றுப் புற்றுநோய் காரணமாக பிரான் ஸில் உள்ள அவரது இல்லத்தில் காலமா னார்.

ஜேம்ஸ் பால்ட்வின் 1984இல் 'பாரிஸ் ரிவ்யூ' இதழுக்கு வழங்கிய முக்கியமான நேர்காணலின் சுருக்கப்பட்ட வடிவத்தை இங்கே தனது வாசகர்களுக்காகத் தருகிறது.

**நீங்கள் அமெரிக்காவிலிருந்து வெளியேறும் முடிவுக்கு வந்ததைப் பற்றி பகிர்ந்துகொள்ள முடியுமா?**

நான் உடைந்துபோயிருந்தேன். பாரிஸுக்குச் செல்ல என் பையில் வெறும் நாற்பது டொலர்கள்தான் இருந்தன. ஆனால், எப்படியும் நியூயார்க்கை விட்டு வெளியேறியாக வேண்டிய நிலையில் நான் இருந்தேன். நியூயார்க்கில் மற்றவர்களின் அவலநிலையும் என்னை வேதனைப்படுத்தின. வாசிப்பு என்னைத் தனி உலகத்துக்கு அழைத்துச் சென்றது என்றாலும், நியூயார்க்கின் தெருக்கள், அதிகாரிகள், குளிர் ஆகியவற்றை நான் எதிர்கொண்டாக வேண்டி இருந்தது. அமெரிக்காவில் ஒரு வெள்ளையினத்தவராக இருப்பது என்றால் என்னவென்பதும் எனக்குத் தெரியும். அங்கு ஒரு கறுப்பினத்தவராக இருப்பது என்றால் என்னவென்பதும் எனக்குத் தெரியும். அங்கு எனக்கு என்ன நடக்கும் என்பதும் எனக்குத் தெரியும்.

என்னுடைய அதிர்ஷ்டம் தீர்ந்துவிட்டது. நான் தொடர்ந்து நியூயார்க்கில் இருந்தால் நான் ஜெயிலுக்குப் போக வேண்டியதாக இருக்கும். நான் யாரைவது கொல்லக்கூடும் அல்லது யாராவது என்னை கொல்லக்கூடும். இரண்டு ஆண்டுகளுக்கு முன்புதான் என்னுடைய நண்பன் ஜார்ஜ் வாஷிங்டன் மேம்பாலத்திலிருந்து குதித்து தற்கொலை செய்துகொண் டான்.

நான் பாரீஸுக்கு 1948இல் வந்தபோது எனக்கு ஒரு வார்த்தைகூட பிரெஞ்சு தெரியாது. எனக்கு அங்கு எவரையும் தெரியாது. யாரையும் தெரிந்துகொள்ளவும் நான் விரும்பவில்லை. என்னிடம் இருந்த நாற்பது டொலர்களும் இரண்டு, மூன்று தினங்களில் தீர்ந்துவிட்டது. வாய்ப்பிருக்கும் சமயங்களில் கடன் பெற்றுக்கொண்டேன். ஒரு விடுதியிலிருந்து மற்றொரு விடுதிக்கு மாறிக்கொண்டிருந்தேன். அப்போது நான் நோய்வாய்ப்பட்டேன். அதிர்ஷ்டவசமாக நான் விடுதியிலிருந்து வெளியேற்றப்படவில்லை.

ஒரு கோர்சிகா குடும்பம் (பிரான்ஸில் உள்ள ஒரு தீவு கோர்சிகா) என்னைக் கவனித்துக்கொண்டனர். அதற்கான காரணம் எனக்கு இன்னும் தெரியவில்லை. ஒரு வயதான பெண்மணி எனக்கு சிகிச்சை அளித்தாள். நாட்டுப்புற மருத்துவம். ஒவ்வொரு நாள் காலையிலும் மாடிக்கு ஏறிவந்து, நான் உயிரோடு இருக்கிறேனா என்று உறுதிசெய்து எனக்கு சிகிச்சை அளிப்பாள். இந்தக் காலகட்டத்தில் நான் பெரும் தனிமையில் இருந்தேன். அந்தத் தனிமையைத்தான் நானும் விரும்பினேன்.

**உங்கள் நண்பரை அந்த நகரம்தான் கொன்றது என்கிறீர்களா?**

ஆம். அமெரிக்காவில் நீங்கள் வாழ இடம் தேடும்போது, வேலை தேடும்போது நீங்கள் உங்கள் முடிவை சந்தேகப்படத் தொடங்குவீர்கள். படிப்படியாக நீங்கள் எல்லாவற்றையும் சந்தேகப்படத் தொடங்குவீர்கள். நீங்கள் தெளிவற்ற நபராக மாறுவீர்கள். அது அப்படித்தான் தொடங்கும். அதன் பிறகு நீங்கள் தாக்கப்படுவீர்கள். அது திட்டமிடலுடன் நடக்கும். ஒட்டுமொத்த அமெரிக்கச் சமூகம் உங்களை ஒன்றுமில்லாதவராக ஆக்க முடிவுசெய்துவிட்டது. அம்மக்களுக்கு தாங்கள் ஒடுக்குமுறைகளை மேற்கொள்கிறோம் என்பதுகூட தெரியாது.

**அப்படியான சூழலில், எழுத்து எப்படி உங்களுக்கு மீட்சியாக அமைந்தது?**

நான் எதிலிருந்தாவது தப்பித்தேனா என்று எனக்கு உறுதியாக தெரியவில்லை. ஒருவர் இப்போதும் அந்த ஒடுக்குமுறையின் கீழ்தான் வாழ்ந்துகொண்டிருக்கிறார். ஒடுக்குமுறை இப்போது எனக்கு முந்தைய வடிவில் நிகழ்வில்லை. ஏனென்றால், நான் இப்போது ஜேம்ஸ் பால்ட்வின். நான் இப்போது சுரங்கப்பாதையில் தங்குவதில்லை. வாழ்வதற்கு இடம் தேடி அலைவதில்லை. ஆனாலும், இன்னும் ஒடுக்குமுறை நடக்கிறது. ஆக, மீட்சி என்பது இந்த இடத்துக்கு பொருத்தமான வார்த்தை இல்லை என்று நினைக்கிறேன். என்னுடைய சூழலை விவரிப்பதன் மூலம் இந்த ஒடுக்குமுறைகளுக்கு ஊடாக வாழக் கற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயம் எனக்கு ஏற்பட்டது.

நான் இப்போது சுரங்கப்பாதையில் தங்குவதில்லை. வாழ்வதற்கு இடம் தேடி அலைவதில்லை. ஆனாலும், இன்னும் ஒடுக்குமுறை நடக்கிறது. ஆக, மீட்சி என்பது இந்த இடத்துக்கு பொருத்தமான வார்த்தை இல்லை என்று நினைக்கிறேன்

**நீங்கள் எழுத்தாளராகத்தான் ஆகப்போகிறீர்கள் என்பதை எப்போது உணர்ந்தீர்கள்?**

என்னுடைய தந்தை இறந்தபோது. என் தந்தை இறப்பதற்கு முன்புவரையில் நான் வேறு ஏதாவது ஒன்றுதான் செய்வேன் என்று நினைத்துக்கொண்டிருந்தேன். இசைக் கலைஞனாக வேண்டும், ஓவியராக வேண்டும், நடிகராக வேண்டும் என்று நினைத்திருக்கிறேன். இவையெல்லாம் என்னுடைய 19 வயதுக்கு முன்னால்.

நான் வெள்ளையின வரையறைகளை எதிர்ப்பவன் என்று என்னைப் பற்றி என் தந்தை ஒருமுறை கூறினார். அது உண்மைதான். அதேசமயம், எது வெள்ளையின

வரையறைகள் என்பதை என் தந்தையிடமிருந்தான் நான் தெரிந்துகொண்டேன். அவர் இறைபக்தி உடையவர். சில விஷயங்களில் அழகான மனிதர். சில விஷயங்களில் கொடூரமான மனிதர். அவருக்கு கடைசி குழந்தை பிறந்த போது அவர் இறந்துவிட்டார். நான் அடுத்த கட்டத்தக்கு சென்றாக வேண்டிய தருணத்தில் இருப்பதை உணர்ந்தேன். நான் மூன்று ஆண்டுகள் - 14 வயதிலிருந்து 17 வயது வரையில் - மதப் பரப்புரையாளனாக இருந்தேன். அந்த மூன்று ஆண்டுகள்தான் என்னை எழுத்தாளனாக உருப் பெறச் செய்தது.

**நீங்கள் எழுதும்போது வாசகனை மனிதில் கொண்டிருப் பீர்களா?**

இல்லை. நீங்கள் அப்படி கொண்டிருக்க முடியாது.

**ஆக, எழுதுவது என்பது பரப்புரை செய்வது போல் இல்லை?**

அவை இரண்டும் தனித்தனியானவை. நீங்கள் பரப்புரை மேடையில் நின்றுகொண்டிருக்கும்போது, நீங்கள் என்ன பேசப்போகிறீர்கள் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கவேண்டும். ஆனால், எழுத்தைப் பொறுத்த வரையில், நீங்கள் அறிந்திராத ஒன்றை அறியவே எழுதுகிறீர்கள். என்னைப் பொறுத்தவரையில் எழுத்துச் செயல்பாடு என்பது நீங்கள் அறிந்திராத ஒன்றை, அறிய விரும்பாத ஒன்றை, வேறுவழியின்றி நீங்கள் அறிய முயலும் பயணம் தான்.



**நீங்கள் எழுத்தாளராக ஆனதற்கு இதுவும் காரணம்தான் இல்லையா? அதாவது உங்களை அறிந்துகொள்ள!**

ம்ம்ம்... நான் அவ்வாறாக முடிவெடுத்தாக சொல்லிவிட முடியாது. நான் எழுத்தாளனாக ஆகியே தீர வேண்டும் இல்லையென்றால், ஒன்றுமில்லாதகவனாக ஆகிவிடுவேன் என்கிற நிலையில் இருந்தேன். நான்தான் என் குடும்பத்தில் மூத்தவன் என்பதால், தந்தைப் பொறுப்பில் இருந்தேன். எனக்கு எது வும் நடந்துவிடக் கூடாது என்பதில் மிகவும் கவனமாக இருந்தேன். ஏனென் றால், எனக்கு ஏதேனும் நடந்தால், என் குடும்பத்தினர்கள் என்ன செய்வார்கள் என்ற எண்ணம் எனக்கு இருந்து கொண்டே இருந்தது. நியூயார்க்கில் - நான் பயணித்த சாலைகளில், நான் ஓடிய தெருக்களில் - என்னைப் போன்ற பையன்களுக்கு என்ன வேண்டுமானாலும் நடந்திருக்கலாம். வீட்டுக் கூரையின் மீதும், சுரங்கப்பாதைகளிலும் தூங்கி இருக்கிறேன். இன்னும் எனக்கும் பொதுக் கழிப்பிடம் அச்சமூட்டக்கூடியதாகவே இருக்கிறது. என் தந்தை இறந்த போது, இனி நான் என்ன செய்ய வேண்டும் என்று அமர்ந்து சிந்திந்தேன்.


**யாராவது உங்களை வழிநடத்தினார்களா?**

ஒருமுறை கறுப்பின ஓவியர் பியூஃபோர்ட் டெலானி (Beauford Delaney) உடன் ஒரு தெரு முனையில் சாலையைக் கடந்து செல்ல சிக்னலில் விளக்கு மாறுவதற்காகக் காத்திருந்தேன். அவர் கீழே தரையைக் காட்டி 'பார்' என்றார். பார்த்தேன். தண்ணீர் இருந்தது. அவர் சொன்னார் 'மீண்டும் பார்'. நானும் பார்த்தேன். அந்தத் தண்ணீரில் எண்ணெய் கலந்து இருந்தது. அந்த நகரம் அதில் பிரதிபலித்தது. அது எனக்கு மிகப் பெரும் திறப்பாக அமைந்தது. அதை என்னால் விவரிக்க முடியவில்லை. எப்படி பார்க்க வேண்டும் என்று அவர் எனக்கு கற்பித்தார். நான் பார்ப்பதை நம்புவதற்கும் எனக்கு கற்பித்தார். எப்படி பார்க்க வேண்டும் என்பதை எழுத்தாளர்களுக்கு ஓவியர்கள் அவ்வவப்போது கற்றுத்தந்துள்ளனர். ஒரு முறை நீங்கள் அந்த அனுபவத்தை அடைந்தால், அதன் பிறகு உலகை வேறு விதமாகவே பார்ப்பீர்கள்.

**வளர்ந்துவரும் எழுத்தாளருக்குப் பிற எழுத்தாளர்களைவிட ஓவியர்கள் உதவுவார்கள் என்று நினைக்கிறீர்களா? நீங்கள் நிறைய வாசித்தீர்களா?**

நான் எல்லாவற்றையும் வாசித்தேன். ஹார்லெமில் உள்ள இரண்டு நூலகங்களில் நான் படிப்பேன். அப்போது எனக்கு பதிமூன்று வயது இருக்கும். ஒருவர் இப்படியாகத்தான் எழுத்தைப் பற்றி தெரிந்து கொள்ள முடியும் என்று நினைக்கிறேன். முதலில், நீங்கள் எவ்வளவு குறைவாகத் தெரிந்து வைத்திருக்கிறீர்கள் என்பதை நீங்கள் கற்பீர்கள். நான் இப்போது வரையில் எப்படி எழுத வேண்டும் என்று கற்றுக்கொண்டிருக்கிறேன். எனக்கு அதன் தொழில்நுட்பம் இன்னும் தெரியவில்லை.

எனக்கு தெரிந்ததெல்லாம், வாசகனைப் பார்க்கச் செய்ய வேண்டும். அதாவது, வாசகனுக்கு நாம் ஓர் உலகைக் காட்ட வேண்டும். இதை நான் தஸ்தோவஸ்கியிடமிருந்தும் பல்ஸாக்கிடமிருந்தும் கற்றுக்கொண்டேன். நான் பல்ஸாக்கை அறிந்திருக்காவிட்டால், பிரான்ஸில் என் வாழ்க்கை நிச்சயம் வேறு விதமாகவே இருந்திருக்கும். எல்லா பிரெஞ்சு அமைப்புகளும் ஆளுமைகளும் வரவேற்புத்தன்மையைக் கொண்டிருப்பதாக நான் புரிந்து




கொள்கிறேன். அதன் அடிப்படையிலேயே அந்த நாடும் அந்தச் சமூகமும் இயங்குகின்றன. அமெரிக்காவில் எனக்குக் கிடைக்காத உணர்வை பிரான்ஸ் எனக்கு வழங்கியது: 'என்னால் ஒன்றைச் செய்ய முடிந்தால், நான் அதைச் செய்யலாம்.' நான் பொதுமைப்படுத்தவில்லை. அமெரிக்காவில் நான் வளர்ந்த காலகட்டத்தில் என்னால் அப்படி இருக்க முடியவில்லை. நான் அங்கு ஏற்கனவே வரையறுக்கப்பட்டுவிட்டேன்.

**நீங்கள் எழுதுவதற்கான நடைமுறை என்ன?**

என்னைப் பற்றி எனக்குச் சொல்லப்பட்டதிலிருந்து விடுபட்டு நான் யார், நான் என்ன செய்துகொண்டிருக்கிறேன் என்பதை உணர்வதற்கு முதலில் நான் அனைத்திலிருந்தும் விலகி தனிமைக்குள் செல்லவேண்டும். 1950இல் நான் ஒருவகையான உணர்வை அடைந்தேன். என் தோல் உதிர்ந்து நிர்வாணமான உணர்வு. அதன் பிறகு என்னால் என்னை இலகுவாகவும் இன்னும் துல்லியமாகவும் உணர முடிந்தது. அதன் பிறகே என்னால் எழுத முடிந்தது.

**நீங்கள் 1945 முதல் 1956 வரையில் எழுதுவதற்கென்று நான்கு முறை உதவித்தொகை பெற்றீர்கள். அவை எந்த அளவுக்கு உங்களுக்கு உதவியது?**

என்னுடைய 22ஆம் வயதில் கிடைத்த ஸாக்ஸ்டன் பெலோசிப் அப்போதைய என் மனநிலைக்கு மிகவும் முக்கியமானது. அப்போதுதான் நான் பதிப்பு உலகுக்கு அறிமுகமானேன். அதன் தொடர்ச்சியாகவே 'நியூ லீடர்' இதழுக்கு பன்னிரண்டு டொலருக்கு புத்தக மதிப்புரை எழுதத் தொடங்கினேன்.

அதற்காக எப்போதும் நான் படித்துக்கொண்டிருக்க வேண்டும். தொடர்ந்து எழுதிக்கொண்டிருக்க வேண்டும். அது எழுத்தைக் கற்றுக்கொள்ள எனக்கு உதவியாக இருந்தது. நான் சேர்ந்து பணியாற்றியவர்களில் பெரும்பான்மையினர் இடதுசாரிகள், சோஷலிஸ்ட்டுகள். அந்த வகையில் நானும் இளம் சோஷலிஸ்ட்டாக இருந்தேன். அந்தச் சூழல் எனக்கு மிகவும் நன்றாக இருந்தது. அந்தச் சூழல்தான் என்னை விரக்தியிலிருந்து காப்பாற்றியது.

**நீங்கள் எழுத நினைத்ததைத் துல்லியமாக எழுதிவிட்டீர்கள் என்று எப்போது உங்களுக்குத் தெரியவரும்?**

நான் பல முறை திருத்தி எழுதுவேன். அது வலி மிகுந்தது. அதற்கு மேலே திருத்தி எழுத ஒன்றும் இல்லை என்று நீங்கள் உணரும்போது நீங்கள் அதை முடித்துவிட்டதாக அர்த்தம். அது நீங்கள் எதிர்பார்த்ததுபோல் வரவில்லை என்றபோதிலும்.

**ஒரு புத்தகத்தை எப்போது தொடங்குவீர்கள்?**

ஏதாவது ஒன்று உங்களை விட்டு விலகாமல் உங்களைத் தொந்தரவு செய்துகொண்டிருக்கும். அது பெரும் வேதனை. இந்தப் புத்தகத்தை எழுத வேண்டும், இல்லையென்றால் செத்துப்போய்விட வேண்டும் என்று தோன்றும். நீங்கள் அதிலிருந்து தப்பிக்க முடியாது.

**பொதுவாக கட்டுரைகள் எழுதுவது என்பது சற்று எளிமையானது, இல்லையா? உங்களை கோபமூட்டிய விஷயத்தைப் பற்றி அதில் எழுதுவீர்கள்?**

கட்டுரை என்பது பார்ப்பதற்கு எளிமையானதாகத் தோன்றலாம். ஆனால், கட்டுரை எழுதுவதென்பது எளிமையானது அல்ல. கட்டுரை என்பது ஒரு விவாதம். கட்டுரையில் எழுத்தாளரின் தரப்பு தெளிவாக இருந்தாக வேண்டும். கட்டுரை எழுதுபவர், ஒன்றைச் சொல்லி வாசகனைத் தன் தரப்பை நோக்கி மாற்ற முயற்சிப்பார். நாவலைப் பொறுத்தவரையில், வாசகனுக்கு ஒன்றைக் காட்ட முயற்சிப்பார். இரண்டிலும் சிக்கலான விஷயங்கள் உள்ளன.

**எழுதுவது தொடர்பான உங்கள் அனுபவம் பெருகும் போது, அறிவும் அதிகரிக்கும் என்று நினைக்கிறீர்களா?**

நீங்கள் எவ்வளவு குறைவாக அறிந்திருக்கிறீர்கள் என்பதை நீங்கள் தெரிந்துகொள்வீர்கள். போகப்போக எழுவது என்பது கடினமானதாக ஆகும். ஏனென்றால், எளிமைதான் உலகில் மிகவும் கடினமான விஷயம். அச்சமூட்டும் விஷயமும்கூட. நீங்கள் அணிந்திருக்கும் வேடங்கள் அனைத்தையும் கழற்ற வேண்டும். அவற்றில் சில உங்களிடம் இருக்கிறது என்பதுகூட உங்களுக்குத் தெரியாது. உங்கள் வார்த்தைகள் எலும்பைப் போல் சுத்தமாக இருக்க வேண்டும். அதுதான் இலக்கு.

**எப்படி எழுத்தாளன் ஆவது என்று ஆலோசனைக் கேட்டு உங்களைத் தேடிவரும் இளம் தலைமுறையினருக்கு நீங்கள் சொல்ல விரும்புவது என்ன?**

எழுதுங்கள். வாழவும் எழுதவும் ஒரு வழியைக் கண்டுபிடியுங்கள். நீங்கள் உண்மையில் எழுத்தாளனாக ஆகப்போகிறீர்கள் என்றால், உங்களை எவராலும் தடுக்க முடியாது. அதேபோல் நீங்கள் எழுத்தாளனாகப் போவதில்லையென்றால், யாராலும் உங்களுக்கு உதவி செய்ய முடியாது. உங்கள் பயணத்தின் ஆரம்பத்தில் உங்களுக்குத் தேவைப்படுவது எழுதுவதற்குக் கடின உழைப்புத் தேவை என்று யாராவது உங்களிடம் தெரிவிப்பதுதான்.

**ஒருவரிடம் இருக்கும் திறமையை உங்களால் கண்டறிய முடியுமா?**


திறமை பெரிய விஷயம் இல்லை. திறமையைவிட மேம்பட்ட பல விஷயங்கள் இருக்கின்றன: ஒழுக்கம், அன்பு, அதிர்ஷ்டம். எல்லாவற்றுக்கும் மேலாக, அனைத்தையும் தாங்கி தாக்குப்பிடித்து நிற்பதற்கான சக்தி!

# ஏன்...? அப்படி...?

நட்சத்திரா

23

# மோட்டார் வண்டி மீற்றர்களில் 'எக்கொனமி'' (economy)




எரிபொருள் பற்றாக்குறை பெரும் பிரச்சினையாகவுள்ளது. முன்னைய காலங்களில் எரிபொருள் நெருக்கடிகள் ஏற்பட்டிருந்தாலும் தற்போதையதைப்போல பெருந்தாக்கத்தை அவை ஏற்படுத்தவில்லை. இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. முன்னைய காலத்தில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டிருந் தாலும் அன்றைக்கு மோட்டார் வண்டிகளின் தொகை மிகக் குறைவாகவே இருந்தது. மோட் டார் வண்டிகளை ஆங்காங்கே ஒரு சிலரே வைத்திருந்தார்கள். ஆனால் இன்றைக்கு நிலமை அப்படியில்லை. ஒரு வீட்டுக்கு ஐந்தாறு என்ற கணக்கில் வீட்டிலுள்ள அனைவருக்கும் ஆளுக்கு ஒன்று அல்லது இரண்டு என்ற கணக்கிலாவது மோட்டார் வாகனங்கள் குவிந்துகிடக்கின்றன.

அதுமட்டுமன்றி மோட்டார் வாகன வாழ்க்கைக்கு இசைவாக்கமடைந்துவிட்ட மனிதர்களே இப்போது அதிகம். இதனால் எரிபொருளில் பலரது வாழ்க்கையும் தங்கிவிட்டது என்றும் சொல்லலாம். இதனால்தான் தற்கால எரிபொருள் பற்றாக்குறை பலரையும் வெகுவாகப் பாதித்திருக்கிறது.

இந்த நிலைமையில் எரிபொருளை எவ்வாறு மிச்சப்படுத்துவது என்று பலரும் யோசிக்கத் தொடங்கியிருக்கின்றனர். மெதுவாக வாகனத்தைச் செலுத்தினால் வாகனம் எரிபொருளைக் குறைந்தளவில் செலவு செய்யும் என்றும் வேகமாகச் சென்று அதைக் குறைந்தநேரம் செயலில் இருத்தினால் எரிபொருளை மிச்சப்படுத்தலாம் என்றும் பலருக்கும் பலவிதமான யோசனைகள் இருக்கின்றன. இவை சரியானவையா என்று தேடிப்பார்த்தால், இவையிரண்டுமே தவறு என்பது தெரியவரும்.

மோட்டார் வாகனத்தை மெதுவாகச் செலுத்தினாலும், அதை விரைவாகச் செலுத்தினாலும் அது அதிக எரிபொருள் நுகர்வைக் கொண்டிருக்கும். ஆனால் மோட்டார் வண்டிகளின் மீற்றர் பகுதியில் ஆங்கில எழுத்துகளால் எக்கொனமி - 'ECONOMY' என்று குறிப்பிபிடப்பட்டிருக்கின்ற வேக வரையறைக்குள் செலுத்தினால் எரிபொருளை மிச்சப்படுத்தலாம். மீற்றர் பகுதியில் ஏன் அவ்வாறு குறிக்கப்பட்டிருக்கிறது? அந்த வேகத்தில் மோட்டார் வண்டியைச் செலுத்தினால் ஏன் அப்படி எரிபொருளை மிச்சப்படுத்த முடியும்...? எக்கொனமி என்றால் என்ன...?

மோட்டார் வண்டிகளின் இயந்திர வலு மற்றும் அவற்றின் செயற்றிறனுக்கு ஏற்ப அவற்றின் எக்கொனமி நிலைகள் மாறுபடும். எக்கொனமி நிலை என்பது இயந்திர வலுவும் அது உள்ளெடுக்கும் எரிபொருளும் சராசரியாக அதன் இயங்குதலில் உள்வாங்கப்படும் சீரான நிலையைக் குறிக்கும்.



# பெற்றோல் விநியோகம் தடுமாறும் அதிகாரிகள்

**கமாஸ்**

பால்மா, எரிவாயு, சீனி, மாவு, சவர்க்காரம் எனத் தொடர்ந்த வரிசையில் எரிபொருளும் இடம்பிடித்திருக்கிறது. நாட்டில் எரிபொருள் நெருக்கடி தலைவிரித்தாடுகிறது. எரிபொருளுக்காக நிரப்பு நிலையங்களில் மக்கள் இரவு பகலாகக் காத்துக் கிடப்பதும் தவிப்பதும் வெயில் காய்வதும் எனப் பல இன்னல்களுக்கு முகம்கொடுத்து வருகிறார்கள். அதற்குள் அவர்களுக்குள் வாதப்பிரதிவாதங்கள், கை கலப்புகள், கலகங்கள் எனப் பலதும் அதிகரித்துச் செல்கின்றன. எரிபொருளுக்கெனக் கள்ளச் சந்தை, தனியான வர்த்தக வலைப்பின்னல் என அது சார்ந்த தீங்குகள் நீள்கின்றன. இதனால் பலர் காயப்படவும் இறக்கவும் செய்திருக்கிறார்கள்.

பொருளாதார நெருக்கடி காரணமாக எரிபொருளை இறக்குமதி செய்ய முடியாமல் போயிருப்பதே தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதற்கு முக்கி காரணம். மூல காரணமான பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதன் மூலமே இதற்கெல்லாம் முடிவு கட்ட முடியும். ஆனாலும் தற்காலிகமாக மக்களின் நெருக்கடிகளைச் சமாளிக்கும் உத்திகள், திட்டங்களையாவது சம்பந்தப்பட்ட தரப்பினர் உடனடியாகத் தீட்டியிருக்கவேண்டும். அசமந்தமாகவே செயற்படுகின்ற வழமையைக்கொண்ட அரச தரப்பினர் இந்த விடயத்திலும் அவ்வாறே இருப்பதால் இப்போதுவரைக்கும் எரிபொருள் நெருக்கடி நிலை தொடரவே செய்கிறது.

மாறுபட்ட நேரங்களில் நிரப்பு நிலையங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக எவ்வித நேர ஒழுங்குமின்றித் தாம் நினைத்த நேரத்தில் (அதிகமாக மதிய வெயிலுக்குள்) எரிபொருளை விநியோகிப்பதால் மக்கள் அங்கே குழுமி நெரிசலை ஏற்படுத்துகிறார்கள். இருக்கின்ற எரிபொருளை நிலையங்களுக்குக் கொண்டுசேர்த்ததும் ஒரே நேரத்தில் அனைத்து நிலையங்களிலும் விநியோகம் செய்யும் திறனில் நிர்வாக நடைமுறை இல்லை. வெயிலுக்குள் மக்களை நிறுத்தி வைக்காமல் மாலை தொடர்ந்து இரவில் வழங்கவும் சிந்திக்கவில்லை. வெயிலில் நின்று பல உபாதைக்குள்ளாகும் அவலம் தொடர்கிறது.

நிரப்பு நிலையம் நோக்கி நுகர்வோரை சரியான - நேர்த்தியான வரிசையில் ஒழுங்குபடுத்துவதும் இல்லை. மக்களும் வீதிகளை மறித்து மற்றவர்களுக்கு இடையூறில்லாமல் எரிபொருளைப்பெறுவோம் என்று சிந்திப்பதில்லை. தேர்தல் காலத்திலும் தமக்குத் தேவை ஏற்படும்போதும் மக்களை நாடுகின்ற அரசியல் புலத்தினர் இந்த இடர்காலத்தில் மக்களுக்கு உதவிக் கரம் நீட்டியதாகத் தெரியவில்லை. மாறாகத் தமது செல்வாக்கை எரிபொருள் நிரப்பு நிலையம் வரை நீட்டி எரிபொருளைப் பதுக்கும், உடமையாக்கும் வேலைகளையே செய்வதாகத் தெரிகிறது.

இதுவரைகாலமும் அரசியல்வாதிகளாலும் அரச தரப்பினராலும் மக்களின் உழைப்புச் சுரண்டப்பட்டு வீணடிக்கப்பட்டமையும், மக்களின் உழைப்பைச் சரியான முறையில் கையாளத் தெரியாத நிர்வாகத் திறனுமே இந்த நெருக்கடிக்குக் காரணம் ஆனாலும் இந்த நெருக்கடியிலிருந்து தம்மை ஓரளவுக்குத் தற்காத்து மக்களை முழுமையாகப் பாதிக்கச் செய்யும் வேலைகளிலேயே அனைவரும் ஈடுபடுகிறார்கள்.

அதைவிடக் குறைந்த வேகத்தில் செல்லும்போது உள்ளெடுக்கும் எரிபொருள் இயந்திரத்தின் இயங்குநிலையைவிட அதிகமாக இருக்கும். வேகமாகச் செல்லும்போதும் அவ்வாறே இருக்கும். இதனால்தான் எக்கொனமி என்கிற குறிப்பு மீற்றர்களில் உள்ளது. பொதுவாக 30 தொடக்கம் 50 வரையான வேகமே இந்த எக்கொனமி நிலைக்குள் அடங்கியிருக்கும். ஆனாலும் இயந்திரங்களைப் பொறுத்து அது மாறுபடும். மீற்றர்களில் பச்சை அல்லது நீல நிறத்தில் இந்த வேக நிலைகள் குறிக்கப் பட்டிருப்பதுடன் சில வாகனங்களில் அவ்வாறில்லாமல் ஆங்கிலத்தில் ECONOMY என்றும் குறிக்கப்பட்டிருக்கும். பிந்தைய வாகனங்களில் இந்தக் குறிப்பு எதுவும் இல்லாமல் சிறிய சமிக்ஞை ஒளி மீற்றர் பகுதியில் பொருத்தப்பட்டிருக்கும். அது எக்கொனமி தரத்தில் செயற்படும்போது பச்சை நிறத்திலும் அவ்வாறில்லாத சந்தர்ப்பங்களில் செம்மஞ்சள் நிறத்திலும் காண்பித்து அதிக எரிபொருள் நுகரப்படுவதைத் தெரியப்படுத்தும். இதுவே மோட்டார் வாகனங்களின் மீற்றர் பகுதியிலுள்ள எக்கொனமி என்கிற குறிப்புப் பற்றித் தேடியபோது கிடைத்த விளக்கம். தெளிவில்லாவிடில் நீங்களும் ஏன்...? அப்படி? என்று தேடிப்பார்க்கலாம்.

இது அரச இயந்திரத்தை மேலும் சிக்கலுக்குள்ளாக்கும் என்கிற துளி அறிவுமின்றி.

தமது செயற்பாட்டை நிறுத்தினால் மக்களுக்கான சேவைகள் முடங்கும் என்று காரணம் சொல்லும் அரச ஊழியர்கள் மக்கள் முடங்கினால் முழு நாடும் முடங்கும் என்பதைச் சிந்திப்பதாக இல்லை. மருத்துவருக்கு முன்னுரிமையளித்து எரிபொருளை வழங்கி அவர் மருத்துவமனைக்குச் செல்ல வழி வகுத்திருப்பதாகத் திட்டம் தீட்டியிருக்கின்ற தரப்பினர் மருத்துவமனைக்கு நோயாளர்கள் எவ்வாறு செல்வார்கள் என்று சிந்திக்கவில்லை. நோயாளர்கள் செல்லாத மருத்துவமனைக்கு மருத்துவரை அனுப்பி என்ன பயன் என்று சிந்திக்கவில்லை.

அரச இயந்திரம் தொடர்ந்து இயங்குவதற்கு மக்கள் இயங்கு நிலையில் இருக்கவேண்டும் என்பதை முதலில் புரிந்துகொள்ள வேண்டும்.

எரிபொருள் நெருக்கடியே தற்போதைய முதன்மைப் பிரச்சினை. அதனால் அது தொடங்கப்போகிறது என்று உணர்ந்த உடனேயே அதற்குத் தீர்வுகளைக் கண்டிருக்கவேண்டும். ஆனால் இன்றுவரை எந்தத் தீர்வும் இன்றி எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மக்கள் அல்லாடுகிறார்கள்.

மாவட்டச்செயலர் தரப்பிலிருந்து பல அறிக்கைகள், திட்டங்கள் வெளிவருகின்றன. அதில் பல மேலும் நெருக்கீட்டை அதிகப்படுத்துபனவாகவும், சில நடைமுறைச் சாத்தியமற்றவையாகவும் இருக்கின்றன. இதனால் நாள்தோறும் அறிக்கையும் திட்டமும் வெளிவரும் நிலையே நீடிக்கிறது. மருத்துவத் தரப்பினருக்கு முன்னுரிமை அளித்து அவர்களை மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டு நோயாளர்களை வீட்டுக்குள் முடங்கியிருக்கச் செய்யும் உத்திபோலவே இவர்களின் திட்டங்கள் பலவும் இருக்கின்றன. சில பிரதேச செயலர்கள் தமது பகுதி மக்களுக்கும், ஊழியர்களுக்கும் எரிபொருளைப் பகிர்வது என்று திட்டமிட்டிருக்கிறார்கள். எதேனும் ஒரு தரப்புக்கு முன்னுரிமையளிக்காமல் இருக்கின்ற எரிபொருளைப் பகிர்ந்தளிப்பதே தற்போதைய தேவை. நாள் கணக்காக இரவு பகலாக அடி மட்ட மக்களை எரிபொருள் நிரப்பு நிலையங்களில் காத்துக் கிடக்க வைத்துக்கொண்டு அரச ஊழியர்களுக்குச் சலுகை அளித்து எரிபொருள் வழங்குவது முறையற்றது. கிடைக்கின்ற எரிபொருளை அனைவருக்குமாக எவ்வாறு பகிர்வது, அதில் சிக்கல்கள் எழாமல் எவ்வாறு நடைமுறைப்படுத்துவது, அல்லது தொடர்வது என்பது தொடர்பான எவ்வித திட்டங்களும் இதுவரை நடைமுறைக்கிடப்படவில்லை. இதனால் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் முறைகேடுகளும், சண்டைகளும் நிரம்பிவழிகின்றன.

ஒரே நபர் பல வாகனங்களில் எரிபொருளைப் பெறுதல், எரிபொருளைத் தேவைக்கு அதிகமாகவோ தனக்குத் தேவையில்லாமலிருக்கையிலோ பெற்று அதிக விலைக்கு விற்றல், வாகனச் சாரதிகள் - மோட்டார் சைக்கிள் இளைஞர் குழுக்களின் அடாவடித்தனம், நிரப்பு நிலைய ஊழியர்களின் கள்ளச் சந்தை எனப் பல விவகாரங்களுக்கு வித்திட்டிருப்பதும் அதை வளர்த்து வருவதும் உரிய தரப்பினரின் இந்த அசமந்தமே. எரிபொருளைப் பகிர்ந்தளிக்கும் திட்டத்தைச் சரிவரத் தீட்டாமலும் நடைமுறைப்படுத்த முடியாமலும் இருக்கின்ற அதிகாரிகளின் திறனின்மையே இந்த நெருக்கீடுகளுக்குக் காரணம். அரசால் நாட்டு மக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய இயலாமல் இருக்க, அரச அதிகாரிகளால் தமது பகுதி மக்களின் நிலமையைச் சமாளிக்க முடியாமலிருப்பதையே இது காட்டுகிறது.

# பெற்றோல் மானியம்!



ரவீந்திரன்

'கோத்தா கோ ஹோம்' போராட்டமானது அரசை மாற்றவும் ராஜபக்ச குடும்பத்தை அரசியலில் இருந்து ஓரம் கட்டுவதற்காகவும் முன்னெடுக்கப்பட்டது. அந்தப் போராட்டங்களில் கலந்துகொண்டவர்கள், பலர் இருந்த இடம் தெரியாமல் போய்விட்ட நிலையில் அந்தப் போராட்டம் ஓரளவுக்கு நீர்த்துப்போய்விட்டது. தற்போது எரிபொருள் பங்கீட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி அரச ஊழியர்களின் அத்துமீறலாக மாறியிருக்கிறது. மக்களின் சினம் அரசின் பக்கத்திலிருந்து அரச ஊழியர்களின் பக்கம் திரும்பியிருக்கிறது. எரிபொருள் பெறுவதற்காக நீண்ட வரிசையில் நின்ற மக்கள் மாவட்டச் செயலர், பிரதேச செயலர்களின் நடவடிக்கைகளால் கிளர்ந்தெழுந்திருக்கிறார்கள்.

வரிசையில் காத்து நிற்கின்ற மக்களில் **15** பேருக்கு எரிபொருள் நிரப்பிய பின்னர் ஓர்



அரச ஊழியரை எரிபொருள் நிரப்ப அனுமதிக்குமாறு கேட்டிருக்கின்றனர். இந்த முரண்பாட்டால் பல இடங்களில் எரிபொருள் இருந்தும் வழங்கமுடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

**அரச ஊழியர்களுக்கு முன்னுரிமை**

அரச ஊழியர்களை அலுவலகங்களுக்கு வரவேண்டாம் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வருமாறு அரசு கூறியிருக்கும் நிலையில் அரச ஊழியர்களுக்கு எரிபொருள் வழங்கவேண்டும் என்று பிரதேச செயலர்கள் எடுத்த தீர்மானம் நிலமையைச் சிக்கலாக்கியது. எரிபொருளைப் பெறுவதற்காக அரச ஊழியர்களின் வரிசையில் அவர்கள் ஆடையணிந்திருப்பதைப்போல நீளக் கை மேற்சட்டை, சப்பாத்து என அதே பாணியில் ஆடை அணிந்து நின்று எரிபொருளைப் பெற்ற நபர் அரச ஊழியர் பட்டியலில் எரிபொருள் பெற்ற சிறிது நேரத்தில் ரீசேர்ட் அணிந்துகொண்டு செருப்புடன் பொதுமக்கள் மத்தியில் எரிபொருளுக்கு நிற்பதைப் பலர் அவதானித்துள்ளனர்.

முள்ளியவளை ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கணினிகளில் பெற்றோல் நிரப்புகின்ற மோட்டார் சைக்கிள்களின் இலக்கங்களை உள்ளீடு செய்து பெற்றோலை விநியோகித்தபோது ஏற்கனவே எரிபொருள் நிரப்பிச் சென்ற வங்கி முகாமையாளர் ஒருவர் இரண்டாவது தடவையாகவும் நிரப்பச் சென்றார் என்கிறார்கள். நீயும் ஒரு மனுசனா? என்று வரிசையில் நின்றவர்களால் அவர் விரட்டியடிக்கப்பட்டிருக்கிறார். இவ்வாறான பல விதி மீறல்களை அரச ஊழியர்களே செய்திருக்கின்றனர். எல்லோருமல்லர் என்கிற போதும், பொதுமக்களிலும் சிலர் இவ்வாறான மீறல்களில் ஈடுபடுவதைக் காரணம் காட்டியே தங்களுக்கு முன்னுரிமை அல்லது தனியுரிமை வேண்டும் என்று அரச ஊழிர்கள் வாதிடுவதால் அவர்கள் பக்கத்திலும் இத்தகைய சில புல்லுருவிகள் இருக்கின்றனர் என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டியிருக்கிறது. இதைவிடச் செல்வாக்குள்ள நபர்கள் எரிபொருள் பவுசர்களை இடைவழியில் மறித்துக் கலன்களில் பெற்றோல் வாங்கிய சம்பவங்களும் நடந்தன.

**யாழ்ப்பாணத்தில் ஜூலை முதலாம் திகதியிலிருந்து குடும்ப அட்டைப் பதிவின்படி எரிபொருள் வழங்கப்படும் என்று கூறப்பட்டு மக்கள் கிராம அலுவலரிடம் தமது விவரங்களைப் பதிந்துள்ளனர்**

**சமமான பங்கீடு இல்லை**

யாழ்ப்பாணத்தில் ஜூலை முதலாம் திகதியிலிருந்து குடும்ப அட்டைப் பதிவின்படி எரிபொருள் வழங்கப்படும் என்று கூறப்பட்டு மக்கள் கிராம அலுவலரிடம் தமது விவரங்களைப் பதிந்துள்ளனர். தற்போது வாகன இலக்கத்தகட்டின் இறுதி இலக்கத்தின் அடிப்படையில் எரிபொருள் வழங்கப்படவிருக்கிறது என்று ஒரு செய்தி அடிபடுகிறது. அதன்படி எரிபொருளை விநியோகித்தால் ஒரே வாகனம் பல எரிபொருள் நிலையங்களில் எரிபொருளைப் பெற வாய்ப்புண்டு. அதேவேளைஇலக்கத் தகடுகளை மாற்றும், புதிதாகத் தயாரிக்கும் தில்லுமுல்லுகளுக்கும் இந்த நடைமுறை வித்திடும். இது தற்போதுள்ள நிலமையை மேலும் சிக்கலாக்கவும் கள்ளச் சந்தையில் அதிக விலைக்கு எரிபொருளை விற்கவுமே வாய்ப்பை ஏற்படுத்தும்.



# நாங்கள் ரெடி நீங்கள் ரெடியா?

தமிழ் அரசியவல்வாதிகள் தமிழ் மக்களை ஏமாற்றுவதிலும் சிங்கள அரசியல்வாதிகள் சிங்கள மக்களை ஏமாற்றுவதிலும் வல்லவர்களாகி விட்டனர். என்ன கதைக்கிறோம்? ஏன் கதைக்கிறோம்? என்று தெரியாத ஆனால் பெறுமதி மிக்க நாடாளுமன்றம் என்ற இடத்தில் ஆற்றுகின்ற உரையைப் பட்டிமன்றமாக்கி வைத்திருக்கிறார்கள். வெள்ளையாய் இருக்கிறவன் பொய் சொல்லமாட்டான் எனக் கூறுவதைப்போல வெள்ளை உடை அணிந்தவன் பொய் சொல்ல மாட்டான் என இந்த அரசியல்வாதிகளை நம்பும் மக்கள் கூட்டமாகவே தமிழ்நாட்டுத் தமிழரும் ஈழத் தமிழரும் இருக்கின்றனர். தாம் சொல்வதை நம்பவேண்டும் என்று அரசியல்வாதிகளும் எதிர்பார்க்கின்றனர். இதில் ஒன்றுதான் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் கூறிய கருத்தும். இலங்கை தற்போது எதிர்நோக்கும் நெருக்கடியைப் புலம்பபெயர் தமிழர்களால் தீர்த்து வைக்க முடியும். தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை முன் வைக்க முடியுமா? எனச் சவால் விட்டிருக்கிறார் அவர்.

**விதுரன்**

**புலம்பெயர் தமிழரில் யாரெல்லாம் பணம் வழங்குவார்கள்...?**

புலம்பெயர் தமிழரை 4 பிரிவுகளாகப் பிரிக்கலாம். 1983ஆம் ஆண்டில் இனக்கலவரத்தைக் காரணம் காட்டிப் புலம்பெயர்ந்தவர்கள் முதற் தரப்பினர். பின்னாட்களில், 2009வரை நீடித்த போரில் தமது பிள்ளைகளை இழக்காதவர்கள் இவர்கள். இலங்கையிலிருந்தபோதே படித்துப் பதவியிலிருந்தவர்கள்.

1986இல் விடுதலைப் புலிகள் மாற்று இயக்கங்களை அழித்தபோது அதிலிருந்து புலம்பெயர்ந்தவர்கள் இரண்டாவது தரப்பினர்.

விடுதலைப் புலிகளின் முகவர்களாக வெளிநாடுகளில் செயற்பட்டு 2009 மேயில் புலிகள் அழிக்கப்பட்ட பின்னர் புலிகளின் சொத்துக்களைத் தமதாக்கிக் கொண்டவர்கள் மூன்றாவது தரப்பினர். வெளிநாடுகளில் பல முதலீடுகளை மேற்கொண்டு தொழில் அதிபர் பகளாக இருப்பவர்கள் நான்காவது தரப்பி னர்.

இந்த நான்கு பிரிவுகளில் உள்ளவர்களே நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் கூறும் புலம்பெயர் தமிழர்கள்.

இலங்கை அரசின் நெருக்கடிக்குப் பணம் கொடுத்து இங்கு வாழ்கின்ற தமிழருக்குச் சுபீட்சமான வாழ்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என இவர்களில் எவரும் ஒரு போதும் நினைக்கப்போவதில்லை. இலங்கையின் தற்போதைய நெருக்கடியை வைத்துக் காத்துவாக்கில் விடப்பட்ட கதையே சிறிதரனின் பேச்சு. இந்த நான்கு புலம்பபெயர் பிரிவுகளில் முதல் பிரிவில் உள்ள வர்கள் தமது



**டிப்பர்கள், முச்சக்கர வண்டிகள்**

பல டிப்பர் வாகனங்கள் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக ஓடுவதில்லை. பயணச் செலவு அதிகம் என்பதால் மக்கள் அவற்றை வாடகைக்கு அமர்த்துவதில்லை. இவ்வாறு ஓட்டமில்லாத டிப்பர்களை எரிபொருள் வரிசையில் நிறுத்தி அவற்றுக்குள் டீசல் அடித்து அதைப் பின்னர் குழாய் மூலம் இழுத்து வெளியே எடுத்து விற்பனை செய்கிறார்கள். முச்சக்கர வண்டிகளின் சேவைக்கான கட்டணம் அதிகம் என்பதால் மக்கள் வாடகைக்கு அமர்த்தும் நிலை மிகக் குறைந்துவிட்டது. அதனால் டிப்பர்களைப்போல முச்சக்கர வண்டிகளும் இவ்வாறு பெற்றோல் வியாபாரம் செய்யும் வேலையில் ஈடுபடுகின்றன.

**பெண்களுக்குத் தனி வரிசை**

எந்தவொரு எரிபொருள் நிரப்பு நிலையத்திலும் இதுவரையில் பெண்களுக்கென்று தனி வரிசை எதுவும் பேணப்படவில்லை. இதனால் பெண்கள் மிகவும் அவஸ்தைப்படுகின்றனர். தமது இயற்கைத் தேவைகளைக்கூட நிறைவு செய்ய முடியாமல் தவிக்கிறார்கள். இது விடயத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களோ, மாவட்டச் செயலர்களோ, பிரதேச செயலர்களோ, காவல்துறை நிர்வாகமோ, மகளிர் அமைப்புகளோ கவனம் செலுத்தவில்லை. எரிபொருள் தட்டுப்பாடு இருக்கும் நிலையில் கிடைக்கின்ற எரிபொருளைப் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பகிர்ந்து வழங்குவதற்கான ஒரு பொறிமுறையை ஒழுங்குபடுத்தவேண்டிய அரச ஊழியர்கள் தாம் எரிபொருள் நிரப்புவதற்கு முண்டியடிப்பதால் மக்களின் கோபம் அரசின் மீது அல்லாமல் அரச ஊழியர்கள் மீது திரும்பியிருக்கிறது.

# பெரிய கப்பல்களை ஆயுதக் களஞ்சியங்களாகப் பாவித்த புலிகள்

கமலநாதன்



கப்டன் கீர்த்தி பஸ்நாயக்க பண்டாரவளையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கடற்படையில் பணியாற்றிய இவர் பன்னாட்டுக் கடலில் சேவையிலீடுபட்ட புலிகளின் ஆயுதக் கப்பல்களைத் தாக்குவதில் ஈடுபட்டவர். கப்பல் கப்டனாக இருந்தபோதிலும் பூநகரித் தாக்குதலின்போது தரைப்படை மற்றும் கொடாண்டோப் படைகளுடன் இணைந்து செயற்பட்டார். இவர் தனது அனுபவங்களை வெனச யூரியூப்பில் கீழ்வருமாறு பகிர்ந்தார்.

1990ஆம் ஆண்டு கடற்படையில் இணைந்தேன். தொடக்கப் பயிற்சியை தியத்தலாவ, கொத்தலாவல பயிற்சி மையங்களில் பெற்றேன். அதன் பின்னர் 'நாரா' நிறுவனத்தில் இணைக்கப்பட்டேன். வடக்கில் காரைநகர், மண்டைதீவு, ஊர்காவற்றுறை, பூநகரி, நாகதேவன் துறை, சுண்டிக்குளம் ஆகிய பகுதிகளில் பணியாற்றினேன். எனது முதன்மைப் பணி கடற்பாதுகாப்பு என்பதாக இருந்தது. இதில் கடற்படையைச் சேர்ந்த 150 பேர் வரை பணியாற்றினோம்.

**பூநகரித் தாக்குதல்**

1993 நவம்பர் 10ஆம் திகதியன்று இரவு பூநகரி படை முகாம் மீது புலிகள் சராமாரியான தாக்குதலை தொடனங்கினார்கள். சற்றும் எதிர்பாராத வகையில் இரவு 10, 11 மணியளவில் தாக்குதல் தொடங்கப்பட்டது. பூநகரி முகாமில் கடற்படை, தரைப்படைச் சிப்பாய்களாக ஆயிரம் பேர் வரையில் இருந்தோம். புலிகளில் 5 ஆயிரம்பேர் வரை இந்தத் தாக்குதலில் ஈடுபட்டிருக்க வாய்ப்புண்டு. புலனாய்வுத் தகவல்களின்படி புலிகளில் பலர் கறுப்பு ஆடை அணிந்தவாறும் வேறு ஆடைகளை அணிந்தவாறும் உலாவினர் என்று அறிந்தோம். இவ்வளவு பெரிய தாக்குதலை எம் மீது தொடுப்பார்கள் என எதிர்பார்க்கவில்லை.

அந்தச் சூழலில் எமக்கிருந்த ஒரே தெரிவு தந்திரமாகப் பூநகரியை விட்டு வெளியேறுவது என்று முடிவெடுக்கப்பட்டபோதிலும் படிப்படியாகப் பின்வாங்கலை மேற்கொள்ளத் தொடங்கினோம். எனினும் புலிகளின்

பிள்ளைகளைப் படிப்பித்து நல்ல பதவியில் நிலைநிறுத்துவதிலும் வெளிநாடுகளில் சொத்துச் சேர்ப்பதிலும் அதிக கவனம் செலுத்துகின்றனர். பல வருடங்களுக்கு முன்னர் புலம்பெயர்ந்ததால் தமது நோக்கத்தை நிறைவேற்றுகின்றனர். அவர்கள் ஒருபோதும் இலங்கைத் தமிழருக்கு உதவப் போவதில்லை. இந்த வர்க்கத்தினருக்கு இலங்கையில் மத்திய வகுப்புக் காணிகள், சொத்துகள் இருந்தாலும் யாருக்கும் ஒரு துண்டுக் காணியையும் கொடுக்கவில்லை. தமது சகோதரர்களிலேயே இவர்களுக்கு அக்கறையிருக்கவில்லை.

இரண்டாவது பிரிவினரான புலிகளல்லாத இயக்கங்களில் இருந்தவர்கள் ஒருபோதும் கூட்டமைப்பின் கதையைக் கேட்கப் போவதில்லை. இலங்கை அரசைப் பொருளாதார நெருக்கடியிலிருந்து காப்பாற்றினால் தமிழருக்குத் தீர்வு கிடைத்துவிடும் என்று அவர்களுக்கு நம்பிக்கையில்லை.

மூன்றாவது பிரிவினாரான புலிகளின் பணத்தை வைத்திருப்பவர்கள் போரால் பாதிக்கப்பட்டவர்களுக்குக்கூட உதவி செய்ய முன்வரவில்லை. அவர்களைப் பொறுத்தவரை வடக்குக் கிழக்கில் ஒருபோதும் வாழப்போவதில்லை. தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு கிடைக்கவேண்டும் என விரும்புபவர்களோ எதிர்பார்ப்பவர்களோ அல்ல.

நான்காவது பிரிவினரான முதலீட்டாளர்கள் எப்போதும் தமது முதலீடுகளிலும் வியாபார முயற்சிகளிலும் மிகவும் கவனமாக இருப்பவர்கள். அந்த நிலைக்கு முன்னேறுவதற்குப் பல்வேறு கஸ்ரங்களையும் சிரமங்களையும் எதிர்கொண்டவர்கள் இலங்கையில் வந்து முதலீடு செய்வதற்கு ஒன்றுக்குப் பல தடவைகள் சிந்திப்பவர்கள்.

இந்த நான்கு பிரிவுகளைச் சேர்ந்தவர்களைவிட இலங்கை அரசுக்கு உதவ 'நாங்கள் ரெடி' என்று சிறிதரன் கூறும் தமிழர்கள் யார் என்பதைத் தமிழ் மக்கள்தான் கண்டுபிடிக்கவேண்டும். இலங்கையின் பொருளாதாரப் பிரச்சினைக்கு உதவ முன்வந்தாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நம்பிப் புலம்பெயர் தமிழர்கள் களமிறங்குவார்களா என்பது சந்தேகமே.

கடும் தாக்குதலால் படைத்தரப்பு அதிக இழப்புகளைச் சந்தித்தது. காயப் பட்டவர்களை டிரக்ரரில் ஏற்றிக்கொண்டு சங்குப்பிட்டியூடாக யாழ்ப் பாணம் செல்ல முற்பட்டோம். நாம் பின்வாங்க வாய்ப்புண்டு என் பதை எதிர்பார்த்துப் புலிகள் மற்றுமோர் தாக்குதலை மேற்கொள்ள சங்குப்பிட்டிப் பகுதியல் தயாராக இருந்தார்கள். இதனால் வீதி யால் செல்ல முடியவில்லை. எல்லா இடமும் பரந்து நின்ற படையினர் காட்டுப் பாதைகளுக்கூடாகப் பூநகரி முகாமுக்குள் முடங்கவேண்டிய சூழல் ஏற்பட்டது. மேலதிக துருப்புகள் வரும் வரை 200 சிப்பாய்கள் அங்கு 4 நாள்களாக அகப்பட்டி ருந்தோம்.

நாம் பின்வாங்க வாய்ப்புண்டு என்பதை எதிர்பார்த்துப் புலிகள் மற்றுமோர் தாக்குதலை மேற்கொள்ள சங்குப்பிட்டிப் பகுதியல் தயாராக இருந்தார்கள். இதனால் வீதியால் செல்ல முடியவில்லை. எல்லா இடமும் பரந்து நின்ற படையினர் காட்டுப் பாதைகளுக்கூடாகப் பூநகரி முகாமுக்குள் முடங்கவேண்டிய சூழல் ஏற்பட்டது

**கொமாண்டோக்கள் தரையிறக்கம்**

ஜெனரல் தழுவத்த என்பவர் உலங்கு வானூர்தி மூலம் பல இடங்களில் கொமாண்டோக்களை இறக்கினார். முகாமுக்குள் முடங் கியிருந்த எமக்கு உணவுப் பிரச்சினை ஏற்பட்டது. ஆகாய மார்க்கமாக உணவுப்பொதிகளைப் போட்டபோதிலும் சில பொதிகளே எமக்குக் கிடைத்தன. நாங்கள் ஒரு வாயில் பகுதியில் மறைந்திருந்தபோது உலங்கு வானூர்தி ஒன்று எமக்கருகில் தரையிறங்கியது. அந்த வானூர்தியைச் செலுத்தி வந்தவர் முதலாம் வகுப்புத் தொடக்கம் க.பொ.த உயர் தரம் வரை பண்டாரவள புனித தோமஸ் கல்லூரியில் என்னுடன் ஒன்றாகப் படித்த புஷார சல்காது. நான் எழுந்து வானூர்தியை நோக்கிச் சென்றபோது என்னை அவர் அடையாளம் காண முடியாத அளவுக்கு நான் மாறியிருந்தேன். எனக்கு அவரைக் கண்டதும் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

உணவு எதுவும் அவரிடம் இருக்கவில்லை. சொக்லோட் டுகள், தன்னிடமிருந்த ஆடைகள் சிலவற்றை எனக்குத் தந்தார். அந்த இக்கட்டான நிலையில் அவரது உதவி மிகப்பெரியது. ஒரு கடதாசியில் எனது வீட்டுத் தொலை பேசி இலக்கத்தை எழுதிக் கொடுத்து நான் உயிருடன் இருப்பதை வீட்டுக்குத் தெரிவிக்குமாறு அவரிடம் கேட்டுக்கொண்டேன் (இந்த விடயத்தை வானோடி துஷார சலுகாதுவும் குறிப்பிட்டிருக்கிறார்). அவர் தந்த ஆடைகளை நான் பயன்படுத்திவிட்டுப் பூநகரியிலிருந்து புறப்படும்போது இன்னோர் சிப்பாயிடம் கொடுத்தேன். அவரைப் பின்னர் சந்தித்தபோது நான் கொடுத்த வான்படை அங்கியைத் தான் இரண்டு மாதங்கள் வரை பயன்படுத்தினேன் என்றார்.

**வெற்றிலைக்கேணித் தாக்குதல்**

1994 நவம்பர் மாதம் பூநகரியிலிருந்து மாற்றப்பட்டு வெற்றிலைக்கேணி, ஆணை யிறவை அண்மித்த கடற்பரப்பில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டேன். அப்போது ரண விஜய கப்பலுக்குக் கப்டனாக இருந்தேன். ஆணையி றவுத் தளத்தைப் பலப்படுத்துவதற் காகப் புல்டோசர், பைக்கோ போன்ற கனரக வாகனங்களைக் கப்பலில் கொண்டுசென்று தரையிறக்க வேண்டியிருந்தது.

எங்கள் கப்பலின் நகர்வுகளை அவதானித்த கடற்புலிகள் எமது கப்பல் மீது தாக்குதலைத் தொடங் கினார்கள். இரவு நேரம் 2 பரல்களு டன் ஒருவர் நீந்தி வருவதைக் கண்டேன். உடனடியாகச் சுட்டோம். அந்த இரண்டு பரல்களும் வெடித்து எரிந்தன. அவ்வாறு சுடாதிருந்தால் கப்பலுக்குக் கீழாக வந்து வெடித்து



கப்பலை நிர்மூலமாக்கியிருப்பார்கள். கனரக வாகனங்களை இறக்கியபோது எமது கப்பல் கடற்கரை மண்ணில் இறுகி விட்டது. படைத்தரப்பைச் சேர்ந்த லெப்ரினன் உப்புல் விஜயசேகர மிக வும் துணிவாகச் செயற்பட்டுக் கனரக வாகனங்கள் மூலம் எமது கப்பலைத் தண்ணீருக்குள் தள்ளி அங்கிருந்து பாதுகாப்பாகச் செல்ல உதவினார்.

**புலிகளின் இரண்டு கப்பல்களை அழித்தோம்**

2 ஆயிரமாம் ஆண்டு மாசி 21ஆம் திகதியன்று எமது 492இலக்கக் கப்பலில் நடவடிக்கையில் ஈடுபட்டி ருந்தபோது புலிகளின் இரண்டு கப்பல் கள் ஆயுதங்கள் ஏற்றி வருவதை உறு திப்படுத்தினோம். உடனடியாகத் தாக் கினோம். நான்கு மணிநேரத் தாக்குத லின் பின்பு அந்தக் கப்பல்களை அழித்தோம். திருகோணமலையிலி ருந்து வந்த இரண்டு கப்பல்கள் இதில் பங்கெடுத்தன. புலிகளின் சிறிய படகு களைத் தாக்கியழித்த பின்னரே பெரிய கப்பல்களை நெருங்க முடிந்தது.

**பன்னாட்டுக் கடற்பரப்பில் ஆயுதக் களஞ்சியம்**

2007, 2008 காலப்பகுதியில் கிழக் குக் கரையிலிருந்து 1500 கிலோ மீற் றர்வரை சென்று புலிகளின் கப்பல்க ளைக் கண்காணித்துத் தாக்கினோம். புலிகள் தமது பெரிய கப்பல்களை வணி கக் கப்பல்களாகப் பதிவு செய்திருந் தார்கள். அதனால் அந்தக் கப்பல்களில் எதிர்ப்பு ஆயுதங்களைப் பொருத்த முடி யாது. சிறிய ஆயதங்களை வைத்துக் கடற்படைக் கப்பல்களைத் தாக்கினார் கள். அவர்களின் செய்யோ என்ற பெயர் குறிப்பிட்ட கப்பலை அவதா னித்தோம். இந்தக் கப்பலில் 20 கடற் புலிகள் வரை இருந்திருக்க வாய்ப் புண்டு. அந்தக் கப்பலை முற்றாக அழித்தோம். புலிகளின் பெரிய ஆயுதக் கப்பல்கள் பல பன்னாட்டுக் கடற்பரப்பில் தரித்து நின்றன. அந்தக் கப்பல்களையே ஆயுதக் களஞ்சியங்களாக வைத்திருந் தார்கள். அவற்றில் வெளிநாட்டு ஆயு தங்கள், வெடிபொருள்களை நிரப்பி யிருந்தார்கள். தாக்குதலுக்குத் தேவை யான ஆயுதங்களை மாத்திரம் சிறிய படகுகளில் இறக்கி அவ்வப்போது ஆயுத வழங்கலை மேற்கொண்டார்கள்.

புலிகளின் 8 கப்பல்களைக் கட லுக்குள் தாக்கியழித்தோம். சந்தேகத் துக்கிடமான கப்பல்களைக் கண்டதும் அவற்றுடன் தொடர்பை ஏற்படுத்தி நாங்கள் யார் என்று தெரியப்படுத்திக் கப்பலில் உள்ளவர்களைப் பதிலளிக்கச் செய்வோம். புலிகளின் கப்பல்களுக்குத் தொடர்பை ஏற்படுத்தினால் அவர்கள் பதிலளிப்பதில்லை. நாம் கதைக்கும் போது இலங்கைக் கடற்படை என்ற வகையில் அந்தக் கப்பலின் ஐ.எம்.ஓ. இலக்கம், பதிவுசெய்யப்பட்ட துறை முகம் ஆகிய தகவல்களைப் பெற்று எமது கடற்படைத் தலைமையகத்துக்கு அறிவிப்போம் குறிப்பிட்ட கப்பல் பதிவுசெய்யப்பட்ட நிறுவனத்துடன் கதைப்பார்கள். அவ்வாறு கதைக்கும் போது அந்த நிறுவனங்கள் தம்மிடம் பதிவுசெய்யப்படவில்லை. அவ்வா றான கப்பல் கடற்பரப்பில் இல்லை எனப் பதில் கிடைத்தால் அந்தக் கப் பலை நாங்கள் தாக்க முடியும். அவ் வாறு தாக்கும்போது கப்பலில் இருப் பவர்கள் தற்கொலை செய்வார்கள். அவ்வாறு நடந்தவற்றை அருகில் சென்று பார்த்திருக்கிறேன்.

இவ்வாறான சந்தேகத்துக்கிடமான கப்பல்கள் தொடர்பில் இந்திய உளவுத் துறையினர் எமக்குப் பல்வேறு சந்தர்ப் பங்களில் உதவினர். நான் கப்டனாக இருந்து இலங்கைக் கடற்படைக்கு அதிகம் சேவையற்றியதில் மகிழ்ச்சிய டைகிறேன். 2018 ஜூன் மாதம் ஓய்வு பெற்றேன்.

## மண்ணெண்ணெய்...

குறைபடுகிறார்கள் மக்கள். மலையகப் பகுதிகளில் பெரும் பாலான இடங்களில் ஒரேயொரு எரிபொருள் நிரப்பு நிலை யம்தான் இருக்கிறது என்பதால் தாம் நீண்ட நாள்களாக வரிசைகளில் காத்திருக்கவேண்டியிருப்பதாக மக்கள் தெரி விக்கின்றனர்.

மஸ்கெலியாவில் இருந்து அடுத்த நிரப்பு நிலையம் 10 கிலோ மீற்றர் தள்ளி நோர்வூட்டிலும் 19 கிலோ மீற்றர் தள்ளி நல்லதண்ணியிலும் இருக்கின்றன. அவையும் அங்குள்ள பெருந்தோட்டங்களையொட்டியே இருப்பதால் அந்தப் பகுதி மக்களுக்கும் இதே நெருக்கடி நிலையே இருப்பதா கவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

எரிபொருளைப் பெறுவதற்காக நீண்ட வரிசையில் நீண்ட நாள்களாக வாகனங்களில் காத்திருக்கின்றனர் என்று மக் கள் தெரிவித்தனர். தங்களில் பலர் பல நாட்களாக வீடு களுக்கே செல்லவில்லை என்றும் தெரிவித்தனர். வரி சையில் நின்ற பின்னர் எரிபொருள் கிடைக்கவில்லை என்று வீடுகளுக்குச் சென்று வருவதற்கு நிறைய எரிபொருள் செலவாகும் என்பதால் வரிசையில் தொடர்ந்து காத்திருக்கி றார்கள் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

வீடுகளில் சமையலுக்கு மண்ணெண்ணெய் தேவை என்ப




தால் அதனைப் பெறுவதற்காக ஒரு நேரச் சாப்பாட்டோடு தாங்கள் எரிபொருள் பவுசர்களுக்காக காத்திருக்கிறார்கள் என்றும் அவர்கள் கூறினர்.

இதைவிடக் கொடுமை மண்ணெண்ணெய் வாங்குவதற்காக காத்திருந்தபோது வீடுகளுக்கான மின்சாரக் கட்டணத்தைச் செலுத்திவிட்டதற்கான சாட்சியத்தைக் காட்டினால்தான் மண்ணெண்ணெய் வழங்கப்படும் என்றும் அதனை எடுத்து வந்த தாங்கிய சாரதி தெரிவித்தார் என்றும் மக்கள் குற்றஞ் சாட்டினர். தமக்கான பங்கீட்டு மண்ணெண்ணெய்யைப் பெற்றுக்கொள்வதற்காக தாங்கள் மின்சாரக் கட்டணம் செலுத்தப்பட்ட சிட்டையை வீட்டுக்குச் சென்று எடுத்துவர வேண்டியிருக்கிறது என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

தங்கள் வாகனங்களை வரிசையில் விட்டுவிட்டுச் சென் றால் அதனை யாரும் சேதமாக்கி விடுவார்களோ என்கிற அச் சம் காரணமாக தோட்ட வேலைக்கும் செல்லாமல் காத்திருக் கும் அவலம் தொடர்வதாக மக்கள் கவலை தெரிவித்தனர்.

## அவசர...

ஏற்படவுள்ளதாகவும் அது எதிர்வுகூறியுள்ளது.

அறுவைச் சிகிச்சைக்களுக்குத் தேவையான 2,700 அத் தியாவசிய பொருள்கள் மற்றும் ஆய்வுகூடங்களுக் கான நாளாந்தப் பாவனைப் பொருட்கள் 250 என்பனவும் இருப் பில் இல்லை என்று அந்த அறிக்கை கூறுகின்றது.

இலங்கையின் பொருளாதாரக் குழப்ப நிலை அந்த நாட் டுக்கு முழு அளவிலான மனிதாபிமான உதவிகளின் தேவையை ஏற்படுத்தியுள்ளது என்றும் அறிக்கை வலியு றுத்தியுள்ளது.கொழும்பு அரசின் வேண்டுகோளையடுத்து ஐ.நா. 47.2 மில்லியன் டொலர் பெறுமதியான திட்டத்தை ஆனி (ஜூன்) முதல் ஐப்பசி (செப்டெம்பர்) வரையான காலப் பகுதிக்கு தொடங்கியுள்ளது.

# வீட்ல விசேஷம்: கலகலப்புக்குக் குறைவில்லை!

70 வயதில் பாட்டி குழந்தை பெற்றாள் என்கிற செய்தியை ஆச்சரியமாக வாசித்து, சிலாகித்துக் கடந்து செல்லும் தமிழ்ச் சமூகம் அதுவே தன அயல் வீட்டுக்காரி 50 வயதில் கர்ப்பமானால் எப்படி நடந்துகொள்ளும் என்பதையும் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பதையும் கலகலப்பாக ரசிக்கும்படி சொல்லி வைத்திருக்கும் திரைப்படம் வீட்ல விசேஷம்.

ரயில்வேயில் ரிக்கெட் பரிசோதகராக (ரிரிஆர்) பணியாற்றும் ஓய்வை நெருங்கிவிட்ட மனிதர் சத்யராஜ். அவர் மனைவி ஊர்வசி. இந்தத் தம்பதியினருக்கு திருமண வயதில் ஒரு மகனும், உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் ஒரு மகனும் உள்ளனர். இவர்களுடன் சத்யராஜின் அம்மாவும் இவர்களுடனேயே சிறிய வீட்டில் வாழ்கிறார்.




இந்த நிலையில் ஒருநாள் உடல்நிலை சரியில்லை என்று மருத்துவரிடம் போன ஊர்வசி கர்ப்பமாக இருக்கிறார் என்று தெரிகிறது. மொத்தக் குடும்பத்தையும் சூறாவளியாகக் குலைத்துப் போடுகிறது இந்தச் செய்தி. இந்த வயதில் குழந்தையா என்பதையும் தாண்டி இந்த வயதிலும் பாலுறவா (செக்ஸ்) என்கிற சமூகத்தின் கேள்விதான் இங்கு பிரச்சினையின் அடிநாதம் என்கிறது திரைப்படம்.

திருமணமாகி குழந்தைகள் பெற்றுக்கொண்டு அவர்களும் வளர்ந்துவிட்டால் கணவன் மனைவிக்கிடையில் பாலுறவு என்பது பாவம் என்று கற்பிதம் உருவாக்கி வைத்துள்ளது இந்தச் சமூகம். நடுத்தர வயதில் கர்ப்பம் என்பது இந்தப் பாலுறவின் அப்பட்டமான அடையாளமாகி விடுகிறது என்பதுதான் இந்தச் சமூகத்தின் பிரச்சினை என்று குட்டு வைக்கிறது படம்.

வளர்ந்து திருமண வயதை அடைந்துவிட்ட தன் மகனிடமும் தாளாத நோய்களுடன் இறுதிக் காலத்தைக் கடத்தும் தன் தாயிடமும் இந்த விடயத்தைக் கூற சத்தியராஜ் படும்பாடு பார்வையாளர்களுக்கு நகைச்சுவையாக இருக்கிறது. அந்தக் கட்டங்களில் திரை அரங்கு குலுங்கிக் குலுங்கிச் சிரிக்கிறது. சிரிக்கும் ஒவ்வொருவரும் இந்தச் சமூகத்தின் பொதுப்புத்திக்குள் ஊறிப் போயிருப்பவர்களாக அடையாளப்படுத்தப் படுவது குறித்துக் கவலைப்படாமல் வெடித்துச் சிரிக்கிறார்கள் சத்தியராஜின் அவலத்தைக் கண்டு.

2018ஆம் ஆண்டு ஆயுஷ்மான் குர்ரானா நடிப்பில் வெளியான 'பதாய் ஹோ' படத்தின் மீள் தயாரிப்புத்தான் இந்தப் படம்.

தான் படித்த தனியார் பாடசாலையிலேயே ஆசிரியராகி அந்தப் பாடசாலை நிர்வாகியின் மகளையே காதலிக்கும் இளைஞன் பாத்திரம் ஆர்.ஜே.பாலாஜிக்கு. நகைச்சுவை காட்சிகள் நன்றாகவே பொருந்தி வருகின்றன. ஆனால் உணர்ச்சிகளை வெளிப்படுத்த வேண்டிய இடங்களிலும் முகத்தை ஒரு வகையில் தட்டையாகவே வைத்திருப்பது உறுத்துகிறது. காதல் காட்சிகளி

லும் நடிப்பில் வறட்சி தெரிகிறது. கூடுதல் உணர்வு வெளிப் படுத்தல்களின் தேவையை காட்சிகள் உறுதி செய்கின்றன. அதேசமயம் சில காட்சிகளில் மட்டுமே தலைகாட்டும் அபர்ணா பாலமுரளியின் நடிப்பும் பெரிய அளவில் ஈர்க்க வில்லை. சூரரைப் போற்று படத்தில் அட்டகாசமான நடி ப்பை வெளிப்படுத்திய ஒரு நடிகையை இப்படி வீணடித் திருக்கத் தேவையில்லை இயக்குநர். அப்பாவி தந்தை யாகவும், அம்மா - மனைவியுடன் சிக்கித்தவிக்கும் ஆணா கவும், குறிப்பாக உச்சக் காட்சிகளில் நம்மை சிரிக்க வைத்து கலகலப்பூட்டுகிறார் சத்யராஜ். ஆனால் அவரது நடிப்பில் ஒரே விதமான பாணி தொடர்வது நெருடலாக இருக்கிறது. ஒரு மூத்த நடிகனுக்கு இது அழ கல்ல.

ஊர்வசி நடிப்பில் மிரட்டுகி றார். ஒரு நகைச்சுவை நடிகை என்கிற தடத்தைக் கடந்து உணர்ச்சிகளை உற்றெடுக்க வைத்து அசத்தியிருக்கிறார். ஒரு பேட்டியில் அவரே சொன் னதைப் போல அவருக்கு வரலாற் றில் பெயர் சொல்லக் கிடைத்தி ருக்கக்கூடிய ஒரு சிறப்பான பாத்திரம் அவருக்கு அமைந்தி ருக்கிறது. தாய்மையைப் புனி தப்படுத்தும் காட்சிகளில், 'ஆம் பள தடியா' என மிரட்டிப் பேசு வது, சங்கடமான சூழல்களை எதிர்கொள்வது, கர்ப்பத்தால் உண்டான ஒருவித சோர்வை முகத்தில் சுமந்திருப்பது என நடிப்பில் உச்சம் தொடுகிறார். உச்சக் காட்சிகள் முழுவதையுமே அவர்தான் ஆக்கிரமித்திருக் கிறார்.

படம் சொல்ல முயலும் கருத்து முக்கியமானது. "ஒரு பொண்ணு 25 வயசுக்கு முன் குழந்தை பெற் றுக்கொள்ளவில்லை என்றாலும் இந்தச் சமூகம் தவறாகப் பேசும். 50 வயதுக்கு பின்னால் குழந்தை பெற்றுக்கொண்டாலும் தவறாகப் பேசும், '50 வயசுல மனைவிய கர்ப்பமாக்கின ஆண்களை ஆம்பள சிங்கம் என்றும், பெண் களை உனக்கு அறிவில்லையா, குடும்ப கௌரவம் என்னாவது என்றும் திட்டும். இப்படித்தான் இந்தப் பொதுசமூகம் பேசும் என்ற ஊர்வசியின் வசனங் கள்தான் படத்தின் மையக்கரு. படத்தின் முதல் பாதி நகைச் சுவையாகவும், இரண்டாம் பாதி உணர்ச்சிவசமானதாகவும் நகர்த்திருக்கிறது. பெரும்பாலான நகைச்சுவைக் காட்சிகள் பொதுப் பார்வையாளர்களை ரசிக்க வைத் திருக்கின்றன. ரசிக்க வைப்பதற் காகவே எடுக்கப்படுகின்றன.

திரைக் கதை விறுவிறுப்பான தாகவே வேகமான திருப்பங்கள் நிறைந்ததாகவோ இல்லாமல் ஒரு மென் நகைச்சுவை நாடகமாக நகர்வது ஒரு பலவீனம். ஊர்வசியைவிட மற்றவர்கள் நடிப்புக்கு வார்த்தைகளையே அதிகம் நம்பியிருப்பதும் படத்திற்குப் பின்னடைவு. பின்னணி இசையும் மெச்சிக்கொள்ளும்படி இல்லை. இருந்தாலும் பொழுது போக்காக ஒரு தடவை பார்க்கக்கூடிய படம்.

இந்தப் படத்தின் மூலமான 'பதாய் ஹோ' படத்தைப் பார்த்தவர்களில் பலரும் சத்யராஜின் தாய் கதாபாத்திரத்தின் நிறம் மாறும்போது அவர் பேசும் வசனம் நெஞ்சைத் தொடும் வகையில் அமைந்திருக்கும் என்றும் ஆனால், அதன் மீள் தயாரிப்பான இந்தப் அந்த காட்சிகள் ஒரு சின்னத் திரைத் தொடரைப் பார்ப்பது போன்ற உணர்வைக் கடத்துவதையும் தவிர்க்க முடிய வில்லை என்கிற குற்றச்சாட்டுக்க ளும் உண்டு. அடிப்படையில் இரண்டு படங்களையும் ஒப்பீடு செய்வது பொருத்தமானதில்லை என்றாலும், வசனம் முதற்கொண்டு அப்படியே மீள் தயாரிப்பு செய்தி ருக்கும் வேளையில் தமிழ் பார்வை யாளர்களுக்கு ஏற்றார்போல வச னங்களையும், காட்சிகளையும் மாற்றியிருந்தால் கூடுதல் கவனம் பெற்றிருக்கும். இந்த பிரச்சினை 'பதாய் ஹோ' படத்தைப் பார்த்து விட்டு அதே மைண்ட் செட்டில் திரையரங்குகளுக்குள் நுழைபவர் களுக்குத்தான். அந்தப் படத்தை பார்க்காமல், புதிதாக 'வீட்ல விசே ஷம்' படத்தை பார்ப்பவர்களுக்கு அது சிறப்பான அனுபவத்தையே கொடுக்கும்.

தவிர, படம் போகிற போக்கில் விஷத்தை நகைச்சுவை பாணியில் விதைக்க முயற்சித்திருப்பது ஆபத் தானது. குறிப்பாக, ஊர்வசி குழந் தையை பெற்றெடுக்கும் காட்சியில்,

**திருமணமாகி குழந்தைகள் பெற்றுக்கொண்டு அவர்களும் வளர்ந்துவிட்டால் கணவன் மனைவிக்கிடையில் பாலுறவு என்பது பாவம் என்று கற்பிதம் உருவாக்கி வைத்துள்ளது இந்தச் சமூ கம். நடுத்தர வயதில் கர்ப்பம் என்பது இந்தப் பாலுறவின் அப்பட்டமான அடையாளமாகி விடுகிறது என்பதுதான் இந்தச் சமூகத்தின் பிரச்சினை என்று குட்டு வைக்கிறது படம்**



மருத்துவமனையில் பிரசவ வலியால் துடித்துகொண்டிருக்கும்போது, கடவுளே என ஓரிடத்தில் சொல்வார். அப்போது அருகிலிருக்கும் தாதி ஒருவர், 'அப்படித்தான் மேடம், 'ஏசப்பா'ன்னு சொல்லுங்க சீக்கிரம் நல்லபடியாக குழந்தை பொறக்கும். 'ஏசப்பா' சொல்லுங்க' என கூறும்போது, அவருக்கு எதிர்புறமாக நின்றிருக்கும் சத்யராஜ், 'முருகன் சொல்லு முருகா முருகா' என கூறும் வகையில் அந்தக் காட்சி அமைக்கப்பட்டிருக்கும். இது ஆபத்தான காட்சியும் கூட. தேவையில்லாத இந்த ஆணியை சேர்த்திருப்பது ஏன் என தெரியவில்லை. அதை பார்வையாளர்கள் எப்படி உள்வாங்குவார்கள் என்பதை இயக்குநர்கள் உணர்வதில்லை.

மருத்துவமனையில் பிரசவ வலியில் துடித்துக் கொண்டிருக்கும் ஒரு சூழலில், இதுபோன்ற மத மோதல்களை ஏற்படுத்தும் வகையிலான காட்சிகள் தேவைதானா என்பதை ஆர்ஜே பாலாஜிதான் விளக்க வேண்டும். அதுவும், அந்தச் சூழலிலும் கூட கிறிஸ்துவர்கள் மத மாற்றத்தில் ஈடுபடுவார்கள் என்ற நுண்ணரசியலை பேசும் தேவையற்ற காட்சிகள் முகச்சுளிப்பையே ஏற்படுத்துகின்றன.

# நல்ல களத்தை வீணடித்த ‘ஓ2’

உயிர் வாழ்வதற்கான கடைசிச் சில மணி நேரங்களில் கூட இருப்பவர்கள் எண்ணிக்கை குறைந்தால் தான் இன்னும் சில மணி நேரம் அதிகமாக உயிர் வாழலாம் என்கிற சூழலில் மனிதர்கள் எப்படி நடந்துகொள்வார்கள் என்பதுதான் உயிர் வாயு என்று பொருள் படும் ‘ஓ2’ படத்தின் கதை.

இந்தக் கூட்டத்திற்கு நடுவே சாதாரண மனிதர் களைவிட சுவாசிப்பதற்கு அதிகளவு உயிர்வாயு தேவைப்படும் தன் மகனின் உயிரைக் காப் பாற்றத் துடிக்கும் ஒரு தாயின் நீக்கமற்ற போராட்டக் களத்தில் நயன்தாரா மிகச் சிறப்பான வாய்ப்பைப் பெற்றிருக்கிறார். ஆனால் கோலமாவு கோகிலா படத்தில் காட்டியது போன்றே இந்த உணர்ச்சி வெளிப்பாடுகளைக் காட்டி சொதப்பி வைத்திருக்கிறார்.

சூழலியல் சார்ந்த கனமான கருத்தை விதைக்கும் முயற்சிதான் 'ஓ2' படம். இருந்தாலும் அது கையாளப்பட்ட விதம் மற்றும் பாத்திரங்கள் அழுத்தமாக வடிவமைக்கப்படாத காரணத்தால் தன் முயற்சியில் சறுக்கியிருக்கிறது. படம் டிஸ்னி பிளஸ் ஹாட்ஸ்டார் ஓடிடி தளத்தில் வெளியாகியிருக்கிறது.

நுரையீரல் பாதிப்பால் உயிர் வாயு (ஒக்ஸிஜன்) சிலிண்டரின் உதவியின்றி சுவாசிக்க முடியாமல் தவிக்கும் தன் மகனை அழைத்துக்கொண்டு மேல்சிகிச்சைக்காக கொச்சின் செல்லும் தாய் (நயன்தாரா). தந்தையோடு கொச்சினுக்குப் பயணப்படும் தன் காதலியை இடைநடுவில் அழைத்துக்கொண்டு ஓடிவிடும் நோக்கத்தோடு அதே பேருந்தில் ஏறிக் கொள்ளும் காதலன், போதைப் பொருளை கடத்திச் செல்லும் காவல் அதிகாரி, இழந்த செல்வாக்கை மீட்கச் செல்லும் ஒரு அரசியல்வாதி உட்பட பலரையும் ஏற்றிக்கொண்டு, கோவையிலிருந்து கேரளா புறப்படுகிறது அந்த சொகுசு பேருந்து.



வழியில் ஏற்படும் விபத்து காரணமாக பாலக்காடு ஒரு விபத்தில் சிக்கிக்கொள்ள பேருந்துக்குள் அகப்பட்டுக்கொண்டவர்கள் சில மணி நேரங்களுக்கு மட்டுமே உயிரோடு இருக்க முடியும் என்கிற நிலை. அந்த பேருந்துக்குள் வெளியிலிருந்து காற்று வரவும் முடியாது உள்ளேயிருந்து காற்று வெளியேறவும் முடியாது என்கிற நெருக்கடிக்குள் போராடும் அவர்களின் நிலை என்ன வானது? எப்படி மீண்டார்கள் என்பதுதான் 'ஓ2' படத்தின் திரைக்கதை.

ஒட்டுமொத்த படத்திற்கும் அச்சாணியான பாத்திரம் நயன்தாராவுக்குரியது. மகனுக்காக எந்த எல்லைக்கும் செல்லும் துணிவு, சமயோஜித யோசனை, குற்ற உணர்ச்சி, பாசம், பயம், பதற்றம் என அத்தனை உணர்ச்சிகளையும் கச்சிதமாக கடத்த வேண்டியதொரு பாத்திரம். சிறப்பாகச் செய்திருந்தால் குறைந்தது இந்தியத் தேசி விருதாவது கட்டாயம் கிடைத்திருக்கும். ஆனால், கோலமாவு கோகிலா பாத்திரத்தில் காட்டியதைப் போன்ற கண்களை உருட்டி உருட்டி உணர்ச்சிகளைக் காட்டுவதை மட்டுமே இங்கும் செய்கிறார் நயன்தாரா. தான் ஒரு மிகச் சிறப்பான நடிகை என்பதை வெளிப்படுத்தவேண்டிய சிறப்பான வாய்பை நழுவ விட்டிருக்கிறார்.

இத்தனை வருட அனுபவத்தின் பின்னரும் இந்தச் சுமையை சுமக்க முடியாமல் நயன்தாரா திண்டாடியிருப்பது அவர் தனது நடிப்பை மீள் வாசிப்புக்கு உட்படுத்தவேண்டியதன் அவசித்தை வலியுறுத்துகிறது.

**இயற்கைக்கு நீங்கள் செய்யும் உதவிக்காக இயற்கை மீண்டும் உங்களுக்கு கைமாறு செய்யும் என்பதை விஜய், அஜித் படப் பாணியில் தர்க்க நியாயங்களுக்கு அப்பாற்பட்டு காட்சிப்படுத்தி யிருப்பது இயக்குநரின் கற்பனை வறட்சியைக் காட்டுகிறது**



அடுத்தாக வீரா கதாபாத்திரத்தில் நடித்திருக்கும் 'யூடியூப்' புகழ் சிறுவன் ரித்விக்கிற்கு இது முதல் படம். அவர் இன்னும் பயணிக்க வேண்டிய தூரம் நிறைய இருக்கிறது. அதன் ஒரு தொடக்கப்புள்ளியான இந்தப் படத்தில் அவரையும் வேலை வாங்கத் தவறியிருக்கிறார் இயக்குநர். காவல் அதிகாரியாக வரும் பரத் நீலகண்டன் வில்லனாக மிகை நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார். இந்தக் களத்தில் அது அந்நியத்தனமாக வெளிப்படுகிறது. 'ஆடுகளம்' முருகதாஸ், ஆர்என்ஆர் மனோகர், ஷாரா, ஜாஃபர் இடுக்கி, சிபி புவன சந்திரன் உள்ளிட்டோரின் நடிப்பு படத்துக்கு பலம்.

அறிமுக இயக்குநர் ஜி.எஸ்.விக்னேஷ் இந்தப் படத்தை எழுதி இயக்கியிருக்கிறார். அடிப்படையில் ஒரு நல்ல திரைக்கதை என்பது, திரைக்கும் பார்வையாளனுக்குமான இடைவெளியை குறைப்பதுதான். வரையறுக்கப்பட்ட நேரத்திற்குள் ஒரு பார்வையாளனை படம் முழுமையாக அதனோடு ஒன்றித்திருக்கச் செய்யவேண்டும். அப்படிப்பார்க்கும்போது 'ஓ2' உங்களை திரையிலிருந்து விலக்கச் செய்யாது என்பது மட்டும் உறுதி. படம் தொடங்கியதும் எந்தவித சமரச காட்சிகளுக்கும் இடமளிக்காமல், நேரடியாக கதைக்குள் சென்றுவிடுகிறது. ஆனால், கதையின் மையப் புள்ளிக்குள் நுழைவதற்கு அதிக நேரத்தை எடுத்துக்கொள்கிறது. எடிட்டர் அதில் தாராளமாகக் கத்திரி வைத்திருக்கலாம்.

சூழலியல் ஆபத்துகளையும், இயற்கையை வேட்டையாடும் மனிதனை, இயற்கை வேட்டையாடாமல் விடாது என்பதையும், அதற்கான உதாரணத்தை தொடக்கக் காட்சியில் சொன்ன விதம் எல்லாம் சரிதான். ஆனால் அதேநேரம் மக்களை எவ்வளவு முடியுமோ அவ்வளவுக்கு கவர முடிந்தால்தானே எடுத்துக்கொண்ட நோக்கமும் வெற்றிபெறும். திரைப்படம் என்பது வெறும் விழிப்புணர்வூட்டும் ஆவணப்படமல்லவே.

இயற்கைக்கு நீங்கள் செய்யும் உதவிக்காக இயற்கை மீண்டும் உங்களுக்கு கைமாறு செய்யும் என்பதை விஜய், அஜித் படப் பாணியில் தர்க்க நியாயங்களுக்கு அப்பாற்பட்டு காட்சிப்படுத்தி யிருப்பது இயக்குநரின் கற்பனை வறட்சியைக் காட்டுகிறது.

மற்றொருபுறம் மகன்களை மீட்கும் தாய்கள். நயன்தாரா - ரித்விக் மட்டுமல்லாமல், மற்றொரு கதாபாத்திரமும் தன் தாயின் போராட்டத்தால் மீட்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் அவற்றையெல்லாம் அழுத்தமாகச் சொல்வதற்கும் அப்படிச் சொல்லப்படுபவற்றை போதியளவுக்கு நியாயப்படுத்துவதற்கும் படம் தவறிவிடுகிறது.

நுணுக்கமாக ஆராய்ந்தால் மனிதன் அடிப்படையில் ஒரு சுயநலவாதி. தன் தேவைக்காக எந்த எல்லைக்கும் செல்லக்கூடியவன் என்பதை படம் நியாயமான தர்க்கங்களுடன் காட்சிப்படுத்தியிருக்க வேண்டும். அந்த நோக்கத்தோடு களமிறங்கியிருந்தாலும் இயக்குநர் கடுமையாகத் தடுமாறியிருக்கிறார். பேருந்தில் உள்ளவர்கள் உயிர்வாயுவுக்காகப் போராடும் காட்சிகள் எதிர்காலத்தில் இப்பூவுலகில் நிகழப்போகும் அபாயங்களின் குறியீடு. அதை அவ்வளவு அழுத்தமாகப் பார்வையாளர்களிடம் பதித்திருக்க வேண்டிய இயக்குநர் மேலோட்டமாக காட்சிகளை வடிவமைத்த விதத்தாலும் அழுத்தமாக அவற்றைச் சொல்லத் தவறியதாலும் சறுக்குகிறார்.

தவிர, படத்தில் நயன்தாராவின் கலையாத மேக்கப்பும், ஆங்காங்கே ரத்தக்கறை எனச் சொல்லிக்கொள்ள ஒட்டியிருக்கும் இரண்டு ஸ்டிக்கர்களும் உறுத்துகிறது. படம் யதார்த்தத்தோடு நெருக்கத் தவறுகின்றது என்பதற்கான சிறந்த உதாரணமாக்க இவையே போதும். அவ்வளவு பெரிய நிலச்சரிவில் சிக்கிய பேருந்துக்குள் இருக்கும் நயன்தாராவுக்கு அடிகள் எதுவுமில்லாமல், சொல்லப்போனால் பயணிகள் 8 பேருக்கும் பெரிய பாதிப்பில்லாமல் இருப்பது நம்பும்படியாக இல்லை. கிராஃபிக்ஸ் காட்சிகள் செயற்கைத் தனத்தை உரித்து காட்டுகிறது.

பல முக்கியமான விஷயங்களை பேச முயன்றிருக்கும் படத்திற்கு தமிழ் அழகனின் ஒளிப்பதிவு கூடுதல் பலம் சேர்க்க முயல்கிறது. ஒரே பேருந்துக்குள் பயணிக்க வேண்டிய கதை என்பதால், தனது கேமிரா கோணங்களால் முடிந்த அளவுக்கு வித்தியாசமான திரையனுபவத்தை கொடுக்க முயற்சித்திருக்கிறார். மின்சாரம் துண்டிக்கப்படும் காட்சிகளில் ஒற்றை டார்ச் மட்டும் வைத்துக்கொண்டு காட்சிபடுத்தியிருந்த விதம் சிறப்பு.

'அறம்' படத்தையொட்டிய உணர்வை கொடுக்கும் இப்படத்தில், லீட் கேரக்டரில் நயன்தாராவையும், பேரிடர் மீட்புகுழுவை தலைமைதாங்கும் அதிகாரியாக பெண் ஒருவரையும் கொண்டு கதையை நகர்த்தியிருப்பது சமகால சினிமாவில் ஆடல் பாடல்களுக்காவும், காதலுக்காவும் பெண்கள் பயன்படுத்தப்படும் போக்கிலிருந்து தனித்து நிற்கிறது.

அழுத்தமான ஒரு கதையை அநியாயமாக வீணடித்து விட்டார்கள் என்பதுதான் கவலை. படத்தைப் பார்த்தால் நீங்களே புரிந்துகொள்வீர்கள்.


---

# அழுத்தமான செய்தியை விறுவிறுப்பாகச் சொல்லும் படம் சுழல்

சமூகத்தில் ஓய்வில்லாமல் தொடர்ந்து சுழன்று கொண்டேயிருக்கும் ஓர் அவலத்தை அழுத்தமான த்ரில்லர் கதையின் மூலம் சொல்லவரும் படைப்புதான் 'சுழல்'.

சிறுவர் பாலியல் கொடுமைகள் பெரும்பாலும் அவர்களின் நெருங்கிய உறவினர்களாலேயே மேற்கொள்ளப்படுகின்றன. குற்றவாளிகளை வெளியில் தேடிக்கொண்டிருக்காதீர்கள் அத்தகைய கொடுமைகள் குழந்தைகள் பெரிதாகி வளர்ந்த பின்னரும் ஆழ்ந்த உளத் தாக்கங்களை அவர்களிடம் ஏற்படுத்தி விடுகின்றன என்கிற செய்தியை மிக ஆழமாகப் பதிவு செய்திருக்கின்றது சுழல்.

திடீர் திருப்பங்கள், குற்றவாளியை யார் என்று ஊகிக்க முடியாத வகையில் திரைக் கதையின் போக்கிலேயே ஒவ்வொருவரையும் சந்தேகப்பட வைப்பது என்று விறுவிறுப்பான இணையத் தொடராக வெளிவந்திருக்கிறது இந்த சுழல். அமேசான் பிரைம் இணையத் தளத்தில் வெளியாகி உள்ள இந்தத் தொடர் 8 பாகங்களைக் கொண்டது. விக்ரம் -வேதா திரைப்படம் புகழ் புஷ்கர் - காயத்ரி இணை திரைக் கதை எழுத பிரம்மா மற்றும் அனுசரண் ஆகிய இருவரும் இயக்கி வெளியாகி இருக்கிறது.



**திடீர் திருப்பங்கள், குற்றவாளியை யார் என்று ஊகிக்க முடியாத வகையில் திரைக் கதையின் போக்கிலேயே ஒவ்வொரு வரையும் சந்தேகப்பட வைப்பது என்று விறுவிறுப்பான இணையத் தொடராக வெளி வந்திருக்கிறது இந்த சுழல்**

கோவைக்கு அருகிலுள்ள சாம்பலூர் கிராமத்தில் சிமென்ட் தொழிற்சாலை ஒன்று இயங்கி வருகிறது. இந்த தொழிற் சாலையின் தொழிலாளர் சங்கத் தலைவரான சண்முகம் (பார்த்தி பன்) தலைமையில் தொழிலா ளர்கள் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். வழக்கம் போல ஆலை முதலாளி தொழி லாளர்களை எடுத்தெறிந்து பேசுகிறார். அதனால் கோபம டையும் சங்கத் தலைவர் நீ அதைச் செய்தால் ஆலை பற்றிக் கொண்டு எரியும் என்று கத்துகி றார். மறுநாள் தொழிற்சாலைக்கு தீ வைக்கப்படுகிறது. அது பற்றி எரிந்து எல்லாமும் நாசமாகிறது. அன்றிரவே தொழிற்சங்கத் தலைவரான பார்த்தீபனின் மகள் காணாமற்போகிறார்.

இந்த இரு சம்பவங்கள் தொடர்பாக அந்த ஊரின் காவல் ஆய்வாளர் ரெஜினா தாமஸூம் (ஸ்ரீயா ரெட்டி), உதவி காவல் ஆய்வாளர் சக்ரவர்த்தியும் (கதிர்) விசாரணையை தொடங்குகி றார்கள். இந்த விசாரணை சில திருப்பங்கள், பல குழப்பங்கள் என நீண்டுகொண்டே செல்ல, இறுதியில் இதற்கெல்லாம் யார் காரணம்? எப் படி நடந்தது? ஏன் நடந்தது? என பல கேள்விகளுக்கு விடை சொல்கிறது 'சுழல்' இணையத் தொடர்.

காவல் ஆய்வாளர் ரெஜினா தாம ஸாக ஸ்ரீயா ரெட்டி. காவல் அதிகா ரியாக கம்பீரமாகவும், தாயாக பாசத் துடனும், அதிகாரம் மிக்க மனைவி யாக எடுத்தெறிந்தும் கவனம் பெறு கிறார். அழுகை, சிரிப்பு, கோபம், என அனைத்து உணர்ச்சிகளையும் கச்சிதமாக கடத்துகிறார். உதவி ஆய் வாளராக கதிர். கதைக்கு தேவையான சிறப்பான நடிப்பை வழங்கியிருக் கிறார். சித்தாந்தவாதியாக, தொழி ளார்களுக்காக போராடும் யூனியர் லீடராக, அப்பாவாக, கண்ணாடியை மாட்டிக்கொண்டு அழுத்தமான நடிப் பால் ஈர்க்கிறார் பார்த்திபன்.

படத்தின் உச்சக் காட்சியை நோக்கி நகர்த்தி பிரச்சினைகளுக்கு முடிவை எழுதும் முக்கியமான பாத் திரம் நந்தினி. காக்கா முட்டை ஐஸ் வர்யா ராஜேஷ் அதில் நடித்துள்ளார். சிறுவயதில் பாதிக்கப்பட்டபோதும் அதை வெளிக்காட்டிக்கொள்ளாமல் ஆழ் மனதிற்குள்ளேயே அழுத்திப் பூட்டி வைத்திருப்பதால் மன அழுத்தத்துக்கு உள்ளான ஒரு பெண்ணின் இயல்பை வெளிப் படுத்துவதில் முழுவதுமாகப் பாத்திரத்திற்கு நியாயம் செய் தார் என்று கூறிவிடமுடியாது. அதற்கு முயற்சிசெய்திருப்பதற் காக அவரைப் பாராட்டலாம். எந்த இடத்திலும் அவர் மிகை நடிப்பை வெளிபடுத்தவில்லை. கோபிகா ரமேஷின் நடிப்பு அந்த கதாபாத்திரத்திற்கு சிறப் பாகப் பொருந்தி போகிறது. ஹரீஷ் உத்தமன், இளங்கோ குமாரவேல், லதா ராவ், பிர சன்னா பாலச்சந்திரன், சந்தான பாரதி என்று பலரும் சிறப் பாகவே நடித்திருக்கிறார்கள்.

'சுழல்' வெப் சீரிஸை பல திருப்பங்களுடன் தன் எழுத்தில் சுழல விட்டிருக்கிறார்கள் புஷ்கர் - காயத்ரி. தொடரின் 4ஆவது எபிசோட்டில் கதை முடிவுக்கு வந்துவிடுகிறது. இதற்கு பிறகு கதையை எப்படி நகர்த்தப்போகிறார்கள் என ஆர்வத்தை தூண்டி, அதையொட்டி கதையை இழுத்துச் சென்ற விதம்,



# மண்ணள்ளிப்போடுதல்

செம்மஞ்சள் கோடுகள் மின்னி
அடிவான்கனவுகள் நிரம்பி வழிந்து கிடந்த
நமது குழந்தை இளநீலப்பெருவெளியை
பருந்துகள் ஆக்ரமித்தன, ஒவ்வொன்றாக.
பின், பாட்டம் பாட்டமாக அவற்றின்
குட்டியும் குருமானும், செழித்துக்கிடந்த நமது
முழு பச்சை எதிர்காலத்தையும் புடுங்கியெடுத்தன.
போதாதற்கு, மிஞ்சிக்கிடந்த நமது நிலத்தை
விற்றுத்தீர்த்து,
பெருஏப்பம் விட்டு
நமது வரும் யுகத்தின் வேர்களில் துப்பியது, கழுகுக்கும்பல்.
துப்பியதும், ஆயுள்கொல்லும் நூற்றாண்டு விஷம் விசிறிற்று.
அடியோடு அத்தனையையும்
பொசுக்கி சாம்பலாக்கிற்று.
கலைந்து கிடக்கும் சாம்பலையாச்சும்
கொண்டு வீச, சொட்டு நிலமோ,
ஒரு துண்டு வாவியோ, ஓடும் ஆறோ,
இதம் தரும் கடலோ
கண் எட்டும் தொலைவில் இல்லை.
'நாசமத்துப்போ'
என முதிர்ந்த மூத்தம்மாக்கள்
கடைசி வார்த்தையை பருந்துகளின்
விழுங்கும் கண்களில் வீசிவிட்டு,
கிழிந்த முந்தானையால்
சுட்டெரித்து, புதிதாய் உருவான
கொழுந்துவிட்டெரிக்கும் வெயிலை போர்த்திக்கொள்கின்றனர்.
அவர் வாழ்வில் காணாத் தூரமும் அனுபவிக்காத் துயரமும்
வடிந்து, முகம் விட்டு விழுந்து
சுடும் நிலத்தை நனைக்கிறது.

அந்தக்கொதிஈரலிப்பில்,
கால் மாறிக்கால் வைத்து நிச்சயமில்லாத பொழுதை
பெருமூச்சோடு கடக்கிறோம்.

கே. முனாஸ்

ஒவ்வொரு முடிச்சாக அவிழ்க்கும் விதம், தொடரை தொடர்ந்து பார்க்க தூண்டுகிறது. புஷ்கரும் - காயத்ரியும் இணைந்து ஒரு உலகத்தை கட்டமைக்கிறார்கள். அந்த உலகத்தில் மாந்தர்களை அறிமுகப்படுத்துகிறார்கள். பின் நம்மை கைபிடித்து அவர்களின் உலகிற்குள் அழைத்துச் செல்கிறார்கள்.

அதனால் அந்தக் கதையோடு நம்மால் எளிதாக ஒன்ற முடிகிறது. பல்வேறு விஷயங்கள் குறித்து பேசும் இந்தத் தொடர், மனிதர்களை அவர்களின் இனம், மதம், மொழி, தோற்றங்களை வைத்து அவர்கள் இப்படித்தான் என முன்முடிவுக்கு வந்துவிடக்கூடாது என நெற்றிப்பொட்டில் அறைந்து கூறுகிறது. குல தெய்வ வழிபாடுடன் கதையை பொருத்திக்கொண்டு சென்ற விதம் ரசிக்க வைக்கிறது.

தமிழ்நாட்டில் வட மாநிலத்தவர்களுக்கு எதிரான உணர்வுகள் வளர்ந்து வரும் நிலையில் இந்தத் தொடரில் தொழிலதிபராக இருக்கும் வட நாட்டு சேட்டு தன் நலனை மட்டுமல்லாது தொழிலாளர்களின் நலன் குறித்தும் கரிசனைகொள்ளும் நபராக காட்சிப்படுத்தப்பட்டிருக்கிறார். 'நீ என்ன தான் பண்ணாலும், வெளிய போனா தொழிலாளர்களின் உழைப்ப உறிஞ்சுற சேட்டு' என அவரது மகன் பேசும் காட்சிகளும், அதற்கு எதிர்மாறாக அந்த சேட்டு இருப்பதும் என பாஸிட்டிவான காட்சிகள் சமூகத்தின் பொதுப் புத்திக்குச் சவால் விடுக்கின்றன. விவசாய நிலங்களில் தொழிற்சாலைகளால் ஆபத்து என பேசி வரும் அந்த ஊர்க்காரரிடம், தொழிற்சாலையால் தான் 100க்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கிறது என்ற வாதமும் முன்வைக்கப்படுகிறது. பொதுப் புத்தியின் பாற்பட்ட விமர்சனங்களாக மட்டுமல்லாது அது பற்றிய மறுபக்கமும் பார்வையாளர்களின் பார்வைக்கு முன்வைக்கப்படுகின்றது.

மற்ற கதாபாத்திரத்துக்கான எழுத்துகள் ஆழமாகவும், சந்தான பாரதி கதாபாத்திரத்துக்கான எழுத்து மேலோட்டமாக இருப்பதாக தோன்றுகிறது. இடுகாட்டில் வரும் டாப் ஆங்கிள் ஷாட், திருவிழா காட்சிகள், கிராமம் என ஒளிப்பதிவில் மிரட்டியிருக்கிறார் முகேஷ். சாம் சிஎஸின் பின்னணி இசை தொடரின் விறுவிறுப்பை மேலும் கூட்டுகிறது.

மொத்தத்தில் குற்றப் பின்னணித் தொடரான 'சுழல்' பார்க்க செலவிடும் 6 மணிநேரம் வீண்போகாது என்பது மட்டும் உறுதி. ஒரு தடவை எல்லோருமே பார்த்துவிட வேண்டிய தொடரும்கூட.

**“சிங்களவன் கெட்டவன் என்பதைக் கூறிய தமிழ்த் தேசியத் தலைவர்கள் வருடத்தின் பெரும்பகுதியைச் சிங்களவர்களுடன் கழித்தார்களே தவிர தமிழர்களுடன் அல்ல”**

# எது தமிழ்த் தேசியம்?

நியூட்டன்

இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து தமிழ்த் தேசியம் பேசி வருகின்ற தலைவர்கள் வடக்குக் கிழக்கு மாகாணங்கள் தமிழர் தாயகம் என்பதையோ, அங்குள்ள வளங்கள் தமக்குரியவை என்பதையோ, தமிழ் மக்கள் இப்படித்தான் வாழவேண்டும் என்பதையோ, சாதிக்கட்டமைப்பை மாற்றி தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட என்றிருக்கின்ற சமூக ஏற்றத்தாழ்வை மாற்றுவதையோ, அனைவருக்கும் அரசியலில் சமபங்கு என்பதையோ தமிழ் மக்கள் மத்தியில் கட்டி வளர்க்கத் தவறி விட்டனர். ஆனால் சிங்களவன் கெட்டவன் என்பதை வலியுறுத்துவதில் அதிக அக்கறையுடன் செயற்படுகின்றனர். அது தமிழ்த் தேசியம் அல்ல.

சிங்களவனுக்கு அடித்தால், சிங்களவனுக்கு எதிராகக் குரல்கொடுத்தால் அது வீரத்தின் அடையாளமாகக் காட்டப்பட்டது. இது இன்றுவரை நாடாளுமன்ற அரசியலிலும் காணப்படுகின்ற தமிழர் பக்கக் குறைபாடாகும். சிங்களவன் கெட்டவன் என்பதைக் கூறிய தமிழ்த் தேசியத் தலைவர்கள் வருடத்தின் பெரும்பகுதியைச் சிங்களவர்களுடன் கழித்தார்களே தவிர தமிழர்களுடன் அல்ல.

நாடாளுமன்றம் செல்லவேண்டும், தம்மைக் கனவான்களாகக் காட்டிக்கொள்ளவேண்டும் என நினைத்த தமிழ்த் தலைவர்கள் தமக்கான வாக்குகளைத் தமிழ் மக்களிடமிருந்து தந்திரமாகப் பெறுவதிலும் தேர்தல் காலத்தில் சிங்களவருக்கு எதிராகத் தமிழ் மக்களின் மனநிலையை தூண்டிவிடுவதிலும், எழுச்சியாக எதையாவது பேசுவதிலுமே அக்கறை காட்டினர். தேசியம் பேசுகின்றபோதும் வாக்கு அரசியலை நோக்கி மட்டுமே அவர்களின் சிந்தனை இருந்தது. இருந்து வருகின்றது.

2020 தேர்தலில் பெருமளவு மாற்றத்தைத் தமிழ் இளைஞர்கள் மத்தியில் காணக்கூடியதாக இருந்தாலும் யாழ்ப்பாணத்திலிருந்து நாடாளுமன்றத்துக்குத் தெரிவான வெவ்வேறு கட்சிகளைச் சேர்ந்த 7 பிரதிநிதிகளும் ஒரே சாதியினர் என்பதைக் கவனத்தில் எடுக்கத் தவறக்கூடாது. இதன் வெளிப்பாடு என்னவென்றால், என்னதான் இருந்தாலும் யாழ்ப்பாணத்து வேளாளர்கள் சமயோசிதமாக ஏனைய சாதியினரை ஏமாற்றி வருகின்றனர் என்பதுதான் அது.

தமிழ்த் தேசிய அரசியலில் பெரும்பான்மை மக்களாகக் காணப்படும் மக்கள் கூட்டம் அரசியலில் புறக்கணிக்கப்பட்டிருப்பதையே இது காட்டுகிறது.

**வடக்குக் கிழக்கு உணர்வுபூர்வமாக இணையவில்லை**

வடக்கிலும் கிழக்கிலும் வாழ்கின்ற தமிழர்கள் தமிழர் என்ற ரீதியில் ஒரே மொழியைப் பேசுகின்றனர். பெரும்பாலானவர்கள் சைவ, இந்து மதங்களைப் பின்பற்றுகின்றனர்.

ஆனாலும் இவ்விரு மாகாணங்களைச் சேர்ந்த தமிழர்களும் தமக்குள் இணையவில்லை. சுதந்திரத்தின் பின்பான காலத்தில் தமிழ்த் தேசியத்தை வலியுறுத்திய தலைவர்கள் தமது பிள்ளைகளுக்கான திருமண உறவைக்கூட கிழக்கு மாகாணத்தைச்சேர்ந்த தமிழ்த் தலைவர்களின் குடும்பங்களுடன் ஏற்படுத்தவில்லை. விடுதலைப் புலிகளின் காலத்தில் இவ்வாறான கலப்புத் திருமணங்கள் பல நடந்தன. மட்டக்களப்பைச் சேர்ந்தோர் மந்திரக்காரர் என்பதைத் தமிழ்த் தேசியத் தலைவர்களே மறைமுகமாகப் பேணி வந்தனர். வடக்குத் தமிழருக்கும் கிழக்குத் தமிழருக்கும் தொப்புள்கொடி உறவு பேணப்படவில்லை என்பதைச் சிங்களவரோ தமிழ்நாட்டுத் தமிழரோ அறிந்திருக்கவில்லை. வடக்கையும் கிழக்கையும் இணைக்கமுடியாத தமிழ்த் தேசியமே இன்றுவரை காணப்படுகிறது.

வடக்குக்கும் மலையகத்துக்குமான உறவு என்பது மலைக்கும் மடுவுக்குமான வித்தியாசம் என்பதைத் தமிழநாட்டுத் தமிழர்கள் புரிந்துகொள்ள வேண்டும். நிலமை இவ்வாறிருக்கத் தமிழ்த் தேசியம் பேசும் தலைவர்கள் தமிழ்நாட்டுத் தமிழருக்கும் தமக்கும் இருக்கும் உறவு தொப்புள்கொடி உறவு என்று கூறுகிறார்கள். அவர்கள்கூறுவதுபோல உறவு இருந்தால் யாழ்ப்பாணத் தமிழ்த் தேசியவாதிகளிடம் இருந்து சாதிய மற்றும் பிரதேச பிரிவினைச் சொல்லாடல்கள் இருந்துவர வாய்ப்பில்லை.

**ஈழத் தமிழரின் அயலவர்கள் சிங்களவர்**

இலங்கைத் தமிழரின் பாரம்பரிய நிலம் வடக்குக் கிழக்கு என்பதில் யாருக்கும் சந்தேகம் இல்லை. அதேஅளவிற்கு இந்த மக்களின் அயலவர்கள் சிங்களவரே. இலங்கை மக்கள் அனைவரும் ஒரு தீவுக்

குள்ளானவர்கள். தீவுக்கு அப்பாலுள்ளவர்கள் தமிழ்நாட்டுத் தமிழர். இந்தப் புவியியல் ரீதியான புரிதலுடன் வடக்குக் கிழக்குத் தமிழர் மத்தியில் தமிழ்த் தேசியம் கட்டி வளர்க்கப்படவில்லை. இதன் எதிரொலியை 2020 தேர்தலில் காண முடிந்தது. சிறீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ஒரு வேட்பாளரே யாழ்ப்பாண மாவட்டத்தில் முதன்மை விருப்பு வாக்கைப் பெற்றார். தமிழ்த் தேசியம் உரிய முறையில் கட்டி வளர்க்கப்பட்டிருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்காது.

தமிழ்த் தேசிய அரசியல் என்பது சிங்களவருக்கு எதிராகத் தமிழ் மக்களின் எண்ணங்களைத் தூண்டி விட்டு வாக்கு வேட்டையாடுவதல்ல.

2005ஆம் ஆண்டுடன் விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தைவிட்டு வெளியேறிய காலத்திலிருந்து யாழ்ப்பாணத்துச் சிறுவர்களுக்குப் போர் பற்றியோ சிங்களக் காவல்துறை, படையினர் பற்றியோ கெட்டதாக எதுவும் தெரிந்திருக்கவில்லை. 2006இல் ஏ9 வீதி முகமாலையில் மூடப்பட்ட பின்னர் 2007, 2008 ஆகிய ஆண்டுகளில் நல்லூர்த் திருவிழா சுமுகமாக நடந்ததை இந்தச் சிறுவர்கள் கண்டார்கள். ஒரு சில கிலோமீற்றர்களுக் அப்பால் போரால் மக்கள் இறந்து கொண்டிருக்க இங்கு திருவிழா நடந்தது. குடாநாட்டுச் சிறுவர்களால் கொண்டாட்டத்தையே உணர்ந்தார்கள் கொடுமையை அல்ல. அதே வேளை 2009 மே மாதம் போர் முடிந்தது என்ற நிலை ஏற்பட்டபோது 1 லட்சத்து 40 ஆயிரம் தமிழர்கள் கொல்லப்பட்டார்கள் என்பதை உதட்டளவில் கூறியவர்கள் அந்த ஆண்டும் நல்லூர்த் திருவிழாவை வழமைபோல கொண்டாடினார்கள்.

இவ்வாறான தமிழ்த் தேசியவாதிகளின் செயற்பாடுகளால் இன்றைய இளைஞர் யுவதிகளைச் சிங்களவருக்கு எதிராகத் திசைதிருப்புவது சாத்தியப்படவில்லை. தற்போது தமிழ்த் தேசியவாதிகள் குறிப்பிடும் சிங்களவன் கெட்டவன் என்ற விடயத்தில் ஏன்? அப்படிச் சொல்கிறீர்கள் என்று இளைஞர்கள் கேள்வி கேட்கும் நிலையே இருக்கிறது. அந்தக் கேள்விகளுக்குத் தமிழ்த் தேசியத்தை வலியுறுத்துபவர்களிடம் எந்தப் பதிலும் இல்லை. போர் முடிந்தபின் யாழ்ப்பாணத்துக்குத் தொடருந்துச் சேவை தொடங்கியபோது வடக்கில் பணிபுரியும் படையினரும் காவல்துறையினரும் இலகுவாகப் பயணம் செய்வதற்கே இது தொடங்கப்படுகிறது என்று கூறிய தமிழ்த் தேசியவாதிகளும் அவர்களின் குடும்பங்களும் பின்பான காலத்தில் தொடருந்துகளில் நிரம்பியிருப்பதை இளைஞர்கள் கண்டார்கள். அவ்வாறானவர்களால் சிங்களவன் கெட்டவன் தமிழ் அரசியல்வாதிகள் கட்டமைக்கும் விம்பத்துக்குள் மாட்டிக்கொள்ள மாட்டார்கள்.

தமிழ்த்தேசியம் என்பது தமிழ் மக்களுக்கு நன்மையளிக்கும் வகையில் கட்டிவளர்க்கப்பட வேண்டும். அது புலிகளிடம் இருந்தது. ஆனால் இன்றை அரசியல்வாதிகளிடம் இல்லை. இதனால்தான் தமிழ்த்தேசியக்கோட்பாடு பலமிழந்துள்ளது. இங்குள்ள மூலவளங்களையே அள்ளி விற்றுப் பணமுழைக்கும் நிலைக்கு தமிழ் மக்களைக் கொண்டு வந்துவிட்டுள்ளது.

64

ஐயங்கொண்டான் சுவாமிகள்

# எமையறிதல்



பெயரை அடைதல் என்பதற்குள்ளாக இருக்கிற பெரிய ஆசைகள் மனதை அரித்துக்கொண்டேயிருக்க அதற்காக உழைக்க வேண்டிய நிர்ப்பந்தமானது உழைக்கும் இயலுமைகள் ஆளுமைகள் குறைவாக அல்லது இல்லாத ஒருவனையும் உந்தித்தள்ளுகிறது. அது ஏற்படுத்திக் கொடுக்கும் வழியானது எப்போதும் குறுகலானதாகவே இருக்கிறது. எப்படியாயினும் அடைந்தே தீரவேண்டுமெனும் வெறி ஏனைய அனைத்தையுமே பின்தள்ளுகிறது அல்லது மறக்கடிக்கிறது.

இதனைத்தான் குறுக்கு வழி என்கிறோம். இக்குறுக்கு வழியென்பது தன்னை மட்டுமே மையப்படுத்தியது. அது தனக்காக மட்டுமே வியர்வை சிந்துவதைக்கூட ஏற்றுக்கொள்வதில்லை. வியர்வை சிந்துதல் எனும் பதமானது வெறுமனே கடினமான உடலுழைப்பு மட்டுமல்ல. அதற்கான திட்டமிடலாகிய சிந்தனையுழைப்பையும் உள்ளடக்கியதே என்பதை கவனத்தில்கொள்வது அவசியமானது.

இந்தச் சிந்தனையுழைப்பானது குறித்த ஒரு விடயம் தொடர்பான முழுமையையும் உள்ளுணர்ந்திருக்க வேண்டும். அதிலுள்ள சாதகம் பாதகம், அல்லது நேர் எதிர் வகைப்பட்ட விளைவுகள் என எதிரெதிரான புள்ளிகளிடையோன அனைத்துப் புள்ளிகளையும் தனது கவனத்துக்குள் வைத்திருப்பது அவசியமானது. இங்கேயுள்ள ஒரு முக்கியமான கவனத்திலிருக்கவேண்டிய விடயம் என்னவெனில்

நாம் கவனித்துக்கொள்ள வேண்டிய அத்தனை புள்ளிகளுமே நிலையறுந்த லையும் மாயப்புள்ளிகளே என்பதுதான்.

நாம் ஏற்கனவே பேசியதுபோலவே நிலையற்ற ஒன்றை இலக்காக அமைத்து அடைய முயற்சிக்கிறோம் என்பதும் அது கிட்டவில்லை அல்லது எமது எதிர்பார்ப்பினது அளவிற்குக் கிட்டவில்லை என்பதும்தான் பிரச்சினையாகிக் கொள்கிறது. இல்லாத ஒன்றை அடைவது அதுவும் நாம் நினைத்தபடியே அடைவது என்பதையே இலக்காகக் கொண்டு அலைகிற எமது அலைவிற்கான ஓய்விடம் எது?

முடிவு என்றொன்று கிடையாது என்பதால் ஓய்விடமென்றே குறிப்பிட முடியும். குறித்த ஓய்விடத்தில் கிடைக்கத் தவறிப்போனதற்காக மனம் எதிர்பார்த்த, உழைத்த அத்தனையையும் நிரந்தர இழப்பென்றே குறித்துக் கொண்டு அலைவடையத் தொடங்குகிறது. அலையத் தொடங்குதல் என்கிற விடயம் இப்போதுதானா எழுகிறது? இல்லை. குறித்த விடயம் தனக்குத் தேவையெனக் கருதியபோதே அலைவு தொற்றிக்கொள்கிறது.

சிந்தனையுழைப்பு என்பது குறித்தவொரு விடயத்தை தெரிந்துகொண்டது முதல் குறித்த நபரது முடிவென்று கருதத்தக்க சாவு வரையாக நீள்கிறது என்கிற யதார்த்தம் உணரப்படுகிறதா? உணரத் தயங்குகிற பலவற்றுள் இதுவுமொன்று. இதில் நாம் ஏற்கனவே பல முறை கவனத்திலெடுத்த இயலுமை என்கிற விடயமானது சிந்தனையுழைப்பெனக் குறிப்பிடுகின்றவற்றுள் உள்ளடங்கிய திட்டமிடலில் செலுத்துகிற செல்வாக்கானது மிகமிக உயர்வானது.

எமக்கான சுயகணிப்பீடானது சரிவர ஆற்றப்படலினது அவசியத்தை ஆசை புறந்தள்ளி விடுகிறது. சுயகணிப்பீடற்ற இயலுமை மற்றும் ஆளுமை தொடர்பான தரவுகளினடிப்படையில் போடப்படுகிற திட்டங்களின் விளைவுகள் எப்படி எதிர்பார்ப்பை ஈடுசெய்ய முடியும்? ஆக அடைதலுக்கான திட்டமே தளம்பும்போது அதற்காக எடுக்கும் எத்தனிப்புகள் உயரிய வினைத்திறனுடனான விளைவுகளை நோக்கி நகர்த்தும் வலுவைக் கொண்டிருக்குமா?

இவ்வாறாக இருக்கும் யதார்த்தமானது திட்டமிடல், உழைப்பு என எடுத்துக்கொள்ளும் சிந்தனை மற்றும் உடல் உழைப்புகளிற்கான காலம் மற்றும் பொருளாதார விரயத்தைக் குறுக்கும் விதமான இலக்கை எப்படியாயினும் எட்டிவிடல் என்கிற விதமானதொரு குறுகிய சிந்தனையும் எழத்தயங்குவதில்லை. இச் சிந்தனையானது எனது உழைப்பு என்பதை மீதப்படுத்தவும் விளைவை உடன் அடையும் அவாவையும் கிளர்த்துகிறது.

மனம் அதனை எவ்வாறாயினும் பிறர் மூலமாக இலகுவாக அடையும் வழிகளை (மட்டும்) எண்ணத் தொடங்குகிறது. எனது எண்ணத்தை அடைவதற்கான வழியில் பிறரது முயற்சிகள் உழைப்புகள் என எல்லாமே தேவையற்றன என்கிற விதமான எண்ணம் எழத் தயங்குவதில்லை. இது பிறரது முதுகில் சவாரி செய்கிற துணிச்சலைத் தாராளமாகத் தந்துவிடுகிறது. முழுச் சுயநலமாக ஆகிவிடுகிறது.

நான் எடுக்கும் முயற்சிபோலவே பிறரும் எடுக்க வாய்ப்புகள் உள்ளன என்கிற எண்ணமானது பிறரை சந்தேகத்துடன் பார்க்கவும் அணுகவும் செய்துவிடுகிறது. தனிமை என்பதை நாமாகவே நமக்கு ஏற்படுத்தவேண்டியதாகிறது. தூக்கம்தான் வருமா? பசிதான் எடுக்குமா? எப்படி மனம் குழப்பித் தள்ளாடாமல் இருக்கும்? சிந்திப்போமா?

---

# என்னத்தைச் செய்ய?



**கதிரேசன் காத்தவராயன்**

வெள்ளிக்கிழமை பின்னேரமாய் கோயிலடிப் பக்கம் போனன். கனகர், சம்பர், தம்பர், துரையர் ஆக்கள் இருந்தினம். அவடத்துக்குப் போயிருந்துகொண்டன். 'என்னப்பா கதிரேசு? காட் பதிஞ்சு போட்டியே?'' எண்டு தொடங்கினார் துரையர். ''என்னது? காட்டோ?' எண்டு வாயைப்பிழந்தார் தம்பர்.

'என்னடா தம்பு உலகத்திலை என்ன நடக்குதெண்டு ஒண்டுந்தெரியாமலுக்கிருக்கிறாய்'' இந்த வாகனங்களை வரிசையளிலை நாட்கணக்கிலை வைச்சுக் கொண்டிருக்காமல் போன உடனை அடிக்கிறதுக் குத்தான்...'எண்டு கனகர் வாயை மூடயில்லை 'ஓஓஓ... இப்ப விளங்குது கண்டியளோ... உந்த எரிவாயுக்கு நடந்த மாதிரியோ?' எண்டார் தம்பர் எரிச்சலோடை.

கதையைக் கேட்டுக்கொண்டே வந்திருப்பார் போலை 'ஓமடாப்பா தம்பு அதுதான்... அதேதான்ரா நடக்கப் போகுதுபோலை'எண்டபடி இருந்துகொண்டார் முருகேசர். தம்பருக்கு ஒரே புழுகம் எல்லாரையும் ஒரு பார்வை பாத்தார். 'என்னப்பா சொல்லுறாய் முருகேசு... அப்ப இனி பெற்றோல், டீசல் எல்லாம் தாராளமாய் வாங்கலாமோ?' எண்டார் சம்பர்.

'என்னடா இப்ப சொன்னனான்? காஸின்ரை நிலமைதான் எண்டா விளங்கேல்லையோ? கண்ணுக்கே காணாமலில்லே ஆகிப்போச்சுதடாப்பா...'எண்டு முருகேசர் வாயை மூடயில்லை 'அட... டடட... நான் உந்தளவுக்கு விளக்கமாய் யோசிக்கயில்லை அப்பிடித்தான் நடக்கப் போகுதோ?' எண்டு குழம்பித்தான் போனார் தம்பர்.

அந்த நேரம்பாத்து வல்லியர் வந்து ஒரு புறுபுறுப்போடை இருந்துகொண்டார். 'என்னம்மான்

பிரச்சனை உங்களுக்கு?' எண்டு தம்பர் கேட்டது வல்லியம்மானின்ரை எரிச்சலை கூட்டியிருக்கவேணும்.. '--------, (தணிக்கைச் சொல்லு) லைனாம் லைன்! றோட்டை அடைச்சுப் பிடிச்சுக்கொண்டல்லே நிக்கிறாங்கள்... சனம் போறதை வாறதை தடுத்துக்கொண்டு... சீய்க்...! உந்த பெற்றோல் செற்றடியாலை வாறதுக்கிடையிலை வயித்துக்கை அடிச்சது முழுதும் எரிஞ்சு போச்சுது... பொலிசுக்காறர் நிண்டு சுழண்டு சுழண்டு வாய் பாக்கின'எண்டு புறுபுறுத்தார் வல்லியம்மான்.

'என்னம்மான்? உங்கடை அயிற்றத்துக்கும் வரிசையே? தட்டுப்பாடே?' எண்டு உண்மையான அக்கறையோடை கேட்டார் தம்பர். 'எட பேய்த் தம்பா... எங்கடையாக்கள் என்ன பண்பாடில்லாத ஆக்களே? நாங்கள் எப்ப வெண்டாலும் வரிசை பிசகினதைக் கண்டிருக்கிறியோ? ஒழுங்குதான்... ஏன் எங்கடை மனேச்சர் தங்கமான ஆளில்லே... ரை கட்டி ஓசி வாகத்திலயே திரியிறார் முட்டாள்த்தனமாச் செய்யிறதுக்கு?' எண்டு பெருமையோடை சொல்லி நிப்பாட்டினார் வல்லியம்மான்.

'ஆரப்பா அது..'எண்டு கனகர் கேட்டார். 'ஆராயிருந்தா உனக்கென்ன இப்ப? ஒருநாளாவது முடிஞ்சுது இனி நாளைக்கு வாங்கோ எண்டு சொல்லிருப்பானோ? திருப்பிப் பொறுப்பில்லாமல் துரத்தியிருப்பானோ? இல்லையெண்டால் நம்பர் தந்து எங்களைக் கேவலப்படுத்தியிருப்பானோ?' எண்டு பெருமைபாடினார் வல்லியம் மான்.

'உண்மையாத்தானோ?' எண்டு கனகர் வல்லியம்மானைக் கிண்டினார். 'பின்னையென்னடாப்பா.. உவை உங்கை என்ன செய்யிறதெண்டு விளங்காமலுக்கு பெரிய இடத்தாலை வாற கடிதங்களையும் விளங்காமலுக்கு கூத்தடிக்கிறதைப் பாத்தால் பாவங்களாயும் கிடக்குது... கோவங் கோவமாயும் வருகுது... தாங்கள் பெரிய ஆக்களெண்ட நினைப்புத்தான் உவையின்ரை பிழைப்பைக் கெடுக்குதுபோலை..' எண்டார் வல்லியர்.

'உண்மைதான் அம்மான் சொல்லுறதிலை உண்மைதான் கிடக்கு... பெற்றொல், அரிசி, காஸ் எண்டெல்லாம் உந்த சிஸ்ரங்களாலை ஏதாலும் சீருக்கு வந்திருக்கோ... உவை திட்டம் போட்டு நடைமுறைப் படுத்துறதுக்குள்ள சாமானுகள் இல்லாமல் போகுதுகள்... கண்டறியாத சிஸ்ரம்'எண்டு முருகேசர் புலம்ப 'அதுக்கொரு காலமிருந்தது... அதைத்தானே துலைச்சுப்போட்டம்'எண்டபடி வல்லியம்மான் எழும்பினார் நானும் எழும்பி வந்திட்டன்.

# ஆன்லைன் ரம்மி உலகத்தின் பின்முகம்




ஹரி

சுமித்திரா, வயது 29, கணிதப் பட்டதாரி.

தகவல் தொழில்நுட்ப (ஐரி) நிறுவனத்தில் வேலை. காதல் திருமணம், கண்களுக்கு அழகாக இரு குழந்தைகள், சுமி சுமி எனப் பாசமாக அழைக்கும் நட்பு வட்டம் என நித்தம் மகிழ்ந்திருந்தவர் வாழ்வில் பேரிடியாக வந்திறங்கியது ஆன்லைன் ரம்மி. பேருந்தில் பணிக்குச் செல்லும் நேரத்தில் சும்மா விளையாடலாம் என உள்ளே நுழைந்தவர், விளையாட்டிற்கு அடிமையாகிவிட, முதலில் ரூ.3 லட்சம் இழந்திருக்கிறார். பிறகு விட்டதைப் பிடிப்போம் என தனது 20 பவுன் நகைகளை விற்று ரூ. 7 லட்சத்தை இழந்திருக்கிறார். மொத்த கணக்கு ரூ.10 லட்சம்.

தோல்வி தந்த கடும் மன உளைச்சல் கடைசியில் அவருடைய உயிரையே விலை கேட்டது. தனது வீட்டில் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டார் சுமித்திரா. இவ்வளவும் வெறும் மூன்று மாத காலகட்டத்துக்குள் நடந்துவிட்டன. தங்கள் சுமியைப் பரத நாட்டியக் கலைஞராக, விளையாட்டு வீராங்கனையாகப் பார்த்து மகிழ்ந்த குடும்பத்தாருக்கு அவரது தற்கொலைக்கு இணையாக அதற்கான காரணம் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

**தற்கொலைகள் ஏன்?**

உலகின் பல நாடுகளிலும் கடந்த பத்து மாதங்களில் மட்டும் பல டசின் கணக்கானவர்கள் ஆன்லைன் ரம்மியால் தற்கொலை செய்துகொண்டிருக்கிறார்கள். ஒவ்வொருவரும் தலா பத்து லட்சம் ரூபாயிலிருந்து ஒரு கோடி ரூபாய் வரை இழந்திருக்கிறார்கள். கார் ஓட்டுநரில் இருந்து ஐரி துறையில் உயரிய பொறுப்பில் இருப்போர் என வாழ்வாதாரத்திலும் இவர்கள் வேறுபடுகிறார்கள். இது எப்படி சாத்தியம்?

சாமானியர்கள் தங்கள் வாழ்நாள் சேமிப்பை ஒரு மொபைல் விளையாட்டில் இழக்குமளவு ஒரு செயலியால் மூளையெங்கும் போதையை நிறைத்து ஆக்கிரமிக்க முடியுமா?

ஆம், 'மெஷின் லேர்னிங்' (Machine Learning) எனப்படும் இயந்திரக் கற்றலால் முடியும்.

தொழில்நுட்ப விளையாட்டுகள் உருவாக்கத்தின் முதல் கட்டத்தில் உளவியல் நிபுணர்களின் பங்கும் அடங்கும். விளையாட்டின் நிறம், செயல் வடிவம், எப்படி போட்டிகளை வைத்தால் மணிக்கணக்கில் தொடர்ந்து விளையாடுவார்கள் என மனித உணர்வுகளைப் பகுத்து ஆராய்ந்தே இவ்வகை விளையாட்டுகள் உருவாக்கப்படுகின்றன.

ஆன்லைன் ரம்மியைப் பொறுத்தவரை 'ஆர்என்ஜி' (ரேண்டம் நம்பர் ஜெனெரேட்டர் - RNG

Random Number Generator) எனும் அல்காரிதம்தான் அதன் உயிர்; மெஷின் லேர்னிங் எனப்படும் இயந்திரக் கற்றல்தான் அதன் மூளை.

ஆர்என்ஜியின் வேலை பொதுவாக எண்களை உருவாக்கி அனுப்புவதுதான் என்றாலும், நீங்கள் தோல்வி அடைந்ததும் எவ்வளவு துரிதமாக மற்றுமொரு ஆட்டத்தை தொடங்குகிறீர்கள், பண இருப்பு கரைந்ததும் எவ்வளவு வேகமாக மீண்டும் ரீசார்ஜ் செய்கிறீர்கள் என்பதையெல்லாம் வைத்து நீங்கள் அடிமையாகிவிட்டீர்களா, இல்லையா என்பதையும் இயந்திரக் கற்றல் கண்டுகொள்ளும்.

இந்தக் கற்றலுக்கான காலமாகத்தான் பயிற்சி ஆட்டம், அறிமுக போனஸ், விசுவாச போனஸ் எனப் பணமே வாங்காமல் தொடக்கத்தில் சில ஆட்டங்கள் உங்களுக்கு தரப்படுகின்றன. இந்த இலவச ஆட்டங்களை நீங்கள் ஆடும் விதத்தைக்



கொண்டு, 'ஆப்பொனென்ட் புரொபைலிங்' (Opponent profiling) என உங்களைப் பற்றி ஒரு தனி விவரத்தை இயந்திரக் கற்றல் உருவாக்கும்.

எந்தச் சூழ்நிலையில் ஒருவர் இந்த கார்டை விடுப்பார் அல்லது எடுப்பார்? ஒருவரது ஆட்டத் திறன் என்ன? தோல்வி அடைந்தாலும் தொடர்ந்து விளையாடும் தாங்கு திறன் என்ன? ரீசார்ஜ் செய்யும் தொகையின் மதிப்பு என்ன? இப்படி ஆட்டக்காரரின் ஒவ்வொரு நகர்வையும் கண்காணித்து, ஆட்டக்காரரின் உளவியலை உள்வாங்கிய இயந்திரக் கற்றல் இந்த விவரங்களை உருவாக்கும். நீங்கள் யார்? இதுதான் உங்கள் திறன், இந்த முடிவுதான் நீங்கள் எடுப்பீர்கள் என்ற இயந்திரக் கற்றலின் புரிதலில் தவறே இருக்காது.

**அல்காரிதத்தின் அட்டகாசம்**

இந்தப் போட்டியாளர் விவரம் தயாரான நொடியில் உண்மையான ஆட்டத்தை 'ஆரம்பிக்கலாங்களா?' என இயந்திரக் கற்றல் எழுந்து அமரும். மிக மிகக் கடினமான கார்டுகளை (எண்களை) அதன் பிறகு வழங்கும். மிகத் திறமையான ஆட்டக்காரர்களுடன் இணைத்துவிட்டு தோற்க வைக்கும். மூன்று அல்லது நான்கு தோல்விகளுக்கு இடையே ஒரு சொற்ப வெற்றியையும் கொடுக்கும்.

காரணம், இது நியாயமாகத்தான் செயல்படுகிறது, என்னுடைய கெட்ட நேரம் என்று உங்களை நம்ப வைக்கும் உத்திதான் இது. ஆனால், உண்மையில் நீங்கள் எத்தனை முறை தோல்வி அடைந்தாலும் மீண்டும் வருவீர்கள் என்பதை அது நன்கு அறியும். ஒருவேளை நீங்கள் அன்இன்ஸ்டால் செய்து தப்பித்தாலும், சரியாக மூன்று நாட்கள் கழித்து, 'போனஸ் பணத்தை க்ரெடிட் செய்திருக்கிறேன் வா!' என வலை விரிக்கும். அதன்



நோக்கம் உங்களைத் தோற்கடிப்பது கிடையாது. நீங்கள் விளையாட வேண்டும். உங்களது வேலை, வாழ்வு, குழந்தைகள், லட்சியம் என அனைத்தையும் விடுத்து 24 மணி நேரமும் நீங்கள் விளையாடிக்கொண்டே இருக்கவேண்டும். அது நிகழ்ந்துவிட்டாலே வெற்றி அவர்களுக்குத்தான்.

சரி!

இயந்திரக் கற்றல் கொண்டு நிகழ்த்தப்படும் சூது என்பதுதான் தெளிவாகத் தெரிகிறதே, இதைத் தடைசெய்வதில் என்ன சிக்கல்?

அது பற்றியெல்லாம் சிந்திப்பதற்கு எங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எங்கே நேரம்? பல சமயங்களில் இந்த ஆன்லைன் ரம்மியை வெளிநாடுகளில் அதுவும் குறிப்பாக இந்தியா போன்ற நாடுகளில் உள்ள இணையத் தளங்களில்தான் நம்மவர்கள்

அதன் நோக்கம் உங்களைத் தோற்கடிப்பது கிடையாது. நீங்கள் விளையாட வேண்டும். உங்களது வேலை, வாழ்வு, குழந்தைகள், லட்சியம் என அனைத்தையும் விடுத்து 24 மணி நேரமும் நீங்கள் விளையாடிக் கொண்டே இருக்க வேண்டும். அது நிகழ்ந்து விட்டாலே வெற்றி அவர்களுக்குத்தான்.

ஆடுகிறார்கள். இது அனுமதிக்கப் பட்டது அல்ல என்றாலும் தொடர்கிறது.

திரும்பிய பக்கமெல்லாம், 'நான் இன்று லட்சங்கள் வென்றேன்! நீங்களும் விளையாடி வெல்லுங்கள்!' எனச் சாமானியர்களைக் கொண்டு உருவாக்கப்படும் உளவியல் விளம்பரங்கள் கண்களைக் கவர்கின்றன. ஆனால், ஒரு கிளிக்கில் பணக்காரன் ஆகிவிடலாம் என்று நுழையும் எவரையும், அவர்களது இறுதிக் கையிருப்பை இழக்கும்வரை இயந்திரக் கற்றல் வெளியே அனுப்பியதில்லை. காரணம், அது விளையாடுவது நமது திறமையுடன் அல்ல, உணர்வுகளுடன்.

**இதற்கென்ன தீர்வு?**

தொழில்நுட்பத்தைத் தடை செய்வதென்பது சாத்தியமற்ற ஒன்று. அப்படியே செய்தாலும் வேறு பெயர், வேறு முகம் என மாறுவேடத்தில் மீண்டும் வந்துவிடும். ஆகவே விதிகளைக் கொண்டு அதன் கைகளை நொருக்கவேண்டும்.

'ஒரு பயனர் ஒரு நாளில் இவ்வளவு நேரம்தான் விளையாட முடியும். ஒரு பயனர் ஒரு மாதத்திற்கு இவ்வளவு பணம்தான் பெட் கட்ட முடியும். 18 வயதுக்கு மேற்பட்டோர்தான் விளையாடுகிறாரா என்பதை முகப்பு காமிரா மூலம் உறுதிசெய்த பின்பே ஒவ்வொரு ஆட்டமும் தொடங்க வேண்டும்... இப்படியெல்லாம் விதிகள் கொண்டுவரப்பட வேண்டும்.

'ஆன்லைன் சூதுக்கென தனி ஜிஎஸ்டி வரையறை இதுவரை இல்லை. சூதில் வெல்லும் பணம், நிறுவனங்கள் பெரும் லாபம் ஆகியவைக்கு உச்சபட்ச வரி விதிப்பு கொண்டுவரப்படவேண்டும்.

'ஒரு பயனர் ரூ.2 லட்சத்தை ஆன்லைன் ரம்மிக்குள் கொண்டு வருகிறார் என்றால், ரூ.1 லட்சத்தை மட்டும் தொகையாக கணக்கு காட்டும் நிறுவனங்கள், இதர 1 லட்சம் ரூபாயை போனஸ் பாயிண்டுகளாக பயனருக்குத் தருகிறார்கள். வரி ஏய்ப்பு செய்வதற்கான உத்தியே இது. இதுபோன்ற முறைகேடுகள் விசாரிக்கப்பட வேண்டும்.

'இதன் ஆர்என்ஜி அல்காரிதங்கள் முறையாகத் தான் செயல்படுகிறதா, இல்லை 'ட்வீக்' (Tweak) எனப்படும் திருகல் வேலை நிகழ்ந்துள்ளதா என வருடாந்திர ஆய்வு நடத்தப்படவேண்டும்.

'மிக அதிக நேரம் விளையாடுவோர் குறித்த இயந்திரக் கற்றல்களை அரசுக்கு சமர்ப்பிக்கவேண்டும்.

'இதில் அடிமையாகி வாழ்விழந்தோருக்கான மறுவாழ்வு மையங்களை இந்நிறுவனங்களே உருவாக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மேற்குறிப்பிட்ட அனைத்து விதிகளையும் விளையாட்டை உருவாக்கும் நிறுவனங்களுக்கு விதிக்கவேண்டும். இதை மீறும் நிறுவனங்களைத் தடை செய்யலாம்.

**விளையாடும் போது 30 நொடிகளுக்குள் கார்டை எடுப்பதா, வைப்பதா, குழு சேர்த்து அடுக்குவதா என்கிற முடிவுகளை நீங்கள் எடுத்தே ஆகவேண்டும். இல்லை தோல்வி நிச்சயம். நொடிகள் கரையும் டிக் டிக் சத்தம் கேட்க கேட்க, பதற்றத்தில் உங்களைச் சுற்றியிருக்கும் உலகமே மறந்துவிடும்**

**சுய கட்டுப்பாடு அவசியம்**

ஆன்லைன் ரம்மி போதையிலிருந்து மீள வேண்டும் என நினைப்பவர்களுக்கு, முறையான மனநல சிகிச்சையின்றி இந்த மயக்கத்திலிருந்து தப்புவது கடினம். மனதின் ஓரத்தில் இதன் மீதான ஆசை இருந்துகொண்டே இருக்கும். சில விஷயங்களை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

விளையாடும்போது 30 நொடிகளுக்குள் கார்டை எடுப்பதா, வைப்பதா, குழு சேர்த்து அடுக்குவதா என்கிற முடிவுகளை நீங்கள் எடுத்தே ஆகவேண்டும். இல்லை தோல்வி நிச்சயம். நொடிகள் கரையும் டிக் டிக் சத்தம் கேட்க கேட்க, பதற்றத்தில் உங்களைச் சுற்றியிருக்கும் உலகமே மறந்துவிடும்.

அப்போது உங்கள் மேலதிகாரி அழைக்கிறார். இல்லை உங்கள் குழந்தை பசிக்கிறது எனக் கேட்கிறது. எதோ அவசர உதவிக்காக பெற்றோர்கள் அழைக்கிறார்கள். உங்கள் மனம் ஆட்டத்தில் மட்டும்தான் கவனித்திருக்கும். 30 நொடி, 30 நொடி என நொடிகளில் கரைந்து உங்கள் வாழ்க்கை நொடிந்து போய்விடும்.

ஆகவே, போதை மருந்துக்கு இணையாக இந்த வகையான விளையாட்டுகளை மனதளவில் தடை செய்துகொள்ளுங்கள். இது உங்களைத் தேடிவரும் தொழில்நுட்ப போதை, எந்த நிறுவனமும் நீங்கள் பணம் வென்று உங்கள் வாழ்வு சிறக்க வேண்டும் என்பதற்காக தொடங்குவதில்லை. உங்களது பொன்னான நேரமும், மயக்கமும்தான் அவர்களுக்கான ஆயிரம் கோடி லாபத்தைச் சாத்தியமாக்குகிறது. உழைப்பை நம்புங்கள், உடனிருக்கும் குடும்பத்தாருடன் மகிழ்ந்திடுங்கள். உயிர் பறிக்கும் விளையாட்டுகளை அறவே தவிர்ப்பீர்!



கணேசன்

# மூட்டுவலிக்கு முழுமையான தீர்வு

இன்றைய தினம், பொது மருத்துவரிடம் சிகிச்சைக்கு வருபவர்களில் மூன்றில் ஒருவர் மூட்டுவலி காரணமாகவே வருகிறார். இலங்கையில் கணிசமான எண்ணிக்கையிலானவர்கள் ஏதாவது ஒரு மூட்டுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். மூட்டுவலி என்பது முன்பெல்லாம் முதியவர்களைப் பாதிக்கும் நோயாக இருந்தது. இப்போதோ பதின்பருவத்தினரையும் பாதிக்கிற நோயாக அது வளர்ந்து கொண்டிருக்கிறது.

**என்ன காரணம்?**

உடல் உழைப்பு குறைந்து வருவதும் உடற்பயிற்சி இல்லாததும் இதற்கு முக்கியக் காரணங்கள். நாட்டில் கணினித் துறை பெருவளர்ச்சி பெற்ற பிறகு 35% இளைஞர்கள் அதிக நேரம் அமர்ந்திருந்தே வேலை செய்கிறார்கள். இவர்களுக்கு மூட்டுத்தசை இறுகி மூட்டுவலி வந்துவிடுகிறது. மாறிவரும் உணவுமுறை மூட்டுவலியை ஏற்படுத்துகிற அடுத்த காரணம்.

இன்றைய இளைய தலைமுறையினர் தமிழ்ப் பாரம்பரிய உணவுமுறையை ஓரங்கட்டிவிட்டார்கள். மேற்கத்திய உணவுக் கலாசாரத்துக்கு மாறிவிட்டார்கள். இதனால், சிறு வயதிலேயே உடற்பருமன், ஹார்மோன் கோளாறுகள் வந்து அவதிப்படுகிறார்கள். இந்த அவதி நாளடைவில் மூட்டுவலிக்கும் வழி அமைத்துவிடுகிறது.

**முழங்கால் மூட்டு**

மூட்டுவலி என்பது உடலில் எந்த மூட்டிலும் ஏற்படக்கூடியதுதான் என்றாலும், முழங்கால் மூட்டில் ஏற்படுகிற வலியைத்தான் 'மூட்டுவலி' (Arthritis) என்று பொதுவாகச் சொல்கிறோம். தொடை எலும்பின் கீழ்ப்பகுதியும், முழங்கால் எலும்பின் மேல் பகுதியும் இணைகிற இடமே முழங்கால் மூட்டு (Knee Joint). இது உடல் எடையைத் தாங்குகின்ற முக்கியமான மூட்டு.

மூட்டுகளிலேயே முழங்கால் மூட்டின் உள்ளமைப்பு சற்று வித்தியாசமானது. மூட்டைப் பிணைக்கிற நாண்களும் (Cruciate ligaments), மெனிஸ்கஸ் (Meniscus) எனும் குஷன்களும் இந்த மூட்டில்தான் உள்ளன. அடுத்து, அசையும் மூட்டுகளில் மிகப்

பெரியதும் இதுதான். இங்குள்ள எலும்புகளின் தலைப் பகுதியை சைனோவியல் படலம் (Synovial membrane) சூழ்ந்துள்ளது. இது 'சைனோவியல் திரவம்' என்று பசை போன்ற திரவத்தைச் சுரக்கிறது. மூட்டில் இது ஒரு மசகு போல் வேலை செய்கிறது. மூட்டு எலும்புகள் உரசிக் கொள்ளாமல் அசைவதற்கு உதவுகிறது. அடுத்து, மூட்டு களைச் சுற்றி 'கார்ட்டிலேஜ்' (Cartilage) எனும் மிருதுவான குருத்தெலும்புகள் உள்ளன. இவைதான் மூட்டுகள் எளிதாக அசைய உதவுகின்றன.

**பொதுவான காரணங்கள்**

உடற்பருமன், வயது அதிகரிப்பது, மூட்டில் அடிபடுதல், காயம், மூட்டுச் சவ்வு கிழிதல், யூரிக் அமிலம் அதிகமாக உற்பத்தியாகி மூட்டுகளில் படிவது, பாக்டீரியா கிருமித் தொற்று, எலும்பு வலுவிழப்பு நோய் (Osteoporosis) ருமாட் டிக் நோய், காசநோய் போன்றவை முழங்கால் மூட்டுவலிக் குப் பொதுவான காரணங்கள்.

**மூட்டு எலும்பு வளைவு**

சிலருக்குப் பிறவியில் கால் நேராக இருந்தாலும் 30 வயதுக்கு மேல் வளையத் தொடங்கும். இவ்வாறு கால் வளைவு உள்ளவர்களில் 100இல் 90 பேருக்கு முழங்கால் மூட்டு வெளிப்பக்கமாகவும் கால் உள்பக்கமாகவும் வளை யத் தொடங்கும். இது பார்ப்பதற்கு வில் போன்று இருக் கும். இதற்கு 'ஜெனு வேரம்' (Genu varum) என்று பெயர். 100இல் 10 பேருக்கு முழங்கால் மூட்டு உள்நோக்கியும் கால் வெளிப்பக்கமாகவும் வளையத் தொடங்கும். இதை 'முட்டிக்கால்' என்று சொல்வார்கள். 'ஜெனு வல்கம்' (Genu valgum) என்று இதற்குப் பெயர்.

இவற்றின் விளைவால், முழங்கால் மூட்டின் உள்பக் கமும், முழங்கால் மூட்டுச்சில்லும் அதிகத் தேய்மானம் அடைகின்றன. காரணம், நாம் நிற்கும்போது, நடக்கும் போது உடல் எடையைத் தாங்குகின்ற விசை நேர்கோட்டில் செல்லவேண்டும். இது முழங்கால் எலும்புகள் நேராக இருந்தால் மட்டுமே சாத்தியம்; வளைவாக இருந்தால், உடல் எடையைத் தாங்க முடியாமல் முழங்கால் எலும்பு கள் விரைவில் தேய்ந்துவிடுகின்றன.

**அடிபடுதல் ஒரு காரணம்**

மூட்டில் வலி ஏற்படுவதற்கு முழங்காலில் அடிபடுவதும் ஒரு முக்கியக் காரணம்தான். அப்படி அடிபடும்போது முழங்கால் மூட்டுச் சமன் இல்லாமல் போவதால், மூட்டின் ஒரு பகுதி தாழ்ந்து போகும். இது மூட்டின் தேய்மானத்துக்கு வழி அமைக்கும். மூட்டில் அடிபடுவதைக் காலத்தோடு கவனித்துச் சிகிச்சை பெற்றுக்கொண்டால், இந்த நிலை மையைத் தவிர்க்கலாம். இல்லை என்றால் மூட்டுவலி தொல்லை கொடுக்கும்.

**மூட்டுத் தேய்மானம்**

முழங்கால் மூட்டுவலிக்கு அடிப்படைக் காரணம் அங்கு ஏற்படுகிற தேய்மானம்தான். வயதாக ஆக, குருத்தெலும்பு தேய்ந்து அழற்சி உண்டாகிறது. இதை 'முதுமை மூட்ட ழற்சி' (Osteoarthritis) என்கிறார்கள். முழங்கால் மூட்டில் உள்ள குருத்தெலும்பு வழுவழுப்பாக இருக்கும். இதற்குக் காரணம், 'கொலாஜன்' எனும் புரதப்பொருள் அதில் சுரப் பதுதான். இதுதான் இந்த வழுவழுப்புத் தன்மையைப் பாதுகாக்கிறது. குருத்தெலும்பை வலுவாக வைத்துக் கொள்கிறது. பொதுவாக, முதுமையில் கொலா ஜன் உற்பத்தி குறைந்துவிடும். குருத் தெலும்புத் திசுக்கள் தேய்ந்து மெலிதாகிவிடும். இதன் விளைவால், மசகு போட மறந்த சைக்கிள் சக்கரம் கிரீச்சிடுவது போல நமக்கு வயதாகும் போது முழங்கால் மூட்டுகள் உரசிக்கொள்ள, மூட்டுவலி ஏற்படு கிறது.

**எலும்பு முடிச்சுகள்**

நாட்கள் ஆக ஆக, அழற்சி ஏற்பட்டுள்ள குருத்தெலும் புத் திசுக்களில் சிறிதாக எலும்பு முடிச்சுகள் (Osteophytes) முளைக்கின்றன. இதனால் குருத்தெலும்பு கடினமாகிவிடு கிறது. தோலில் ஏற்பட்ட காயம் ஆறிய பின்பு அங்கு தழும்பு ஏற்படுகிறதல்லவா? அதுமாதிரிதான் இது. இதன் விளைவால், மூட்டின் முனைகளில் காணப்படுகின்ற வழு வழுப்புத்தன்மை முழுவதுமாக மறைந்து சொரசொரப்பாகி விடுகின்றன. இந்த நிலைமையில் முழங்காலை அசைத் தால், இந்தக் கடினப்பகுதிகள் உரசுகின்றன. இதனால் மூட்டுவலி கடுமையாகிறது.

**மூட்டு வீக்கம்**

மூட்டுவலி வந்துள்ள முழங்காலுக்கு அதிக வேலை கொடுத்தால், குருத்தெலும்பில் திடீரென்று அழற்சி அதிக மாகிறது. சைனோவியல் படலம் அதிக திரவத்தைச் சுரக் கத் தொடங்குகிறது. இதனால், மூட்டில் நீர் கோத்து, வீங் கிக்கொள்கிறது. இதுபோல், முழங்காலில் அடிபட்டால், கால் சறுக்கிவிட்டால், முழங்காலைத் தவறாகப் புரட்டி விட்டால்... இப்படி நீர் கோத்து வீங்கிக்கொள்வது உண்டு. அப்போது முழங்காலை அசைக்கவே முடியாத அளவுக்கு மூட்டு இறுக்கத்தன்மையை அடைகிறது. இந்த நிலைமை ஏற்பட்டவுடன், மூட்டை அசைக்க முடியாத அளவுக்குக் கடுமையான வலி ஏற்படுகிறது.

**மூட்டுத் தேய்மானத்தை எப்படி அறிவது?**

சிறிது நேரம் அமர்ந்திருந்துவிட்டு எழுந்து நில்லுங்கள். மூட்டு பிடிப்பதுபோல் இருக்கிறதா? கொஞ்ச தூரம் நடந்து செல்லுங்கள். அந்தப் பிடிப்பு விட்டது போல் இருக்கிறதா? அப்படியானால் உங்களுக்கு மூட்டுத் தேய்மானம் தொடங்கிகிவிட்டது என்று அர்த்தம்.



**என்ன பரிசோதனைகள்?**

மூட்டுகளில் வலி, வீக்கம் ஏற்பட்டால், உடனே மருத்துவரிடம் சென்று ஆலோசனை பெற வேண்டும். எக்ஸ்-ரே, சி.டி.ஸ்கேன், எம்.ஆர்.ஐ. ஸ்கேன் மற்றும் குருதிப் பரிசோதனைகள் மூலம் எந்த வகையான மூட்டுவலி என்பதைத் தெரிந்துகொண்டு அதற்கேற்ப சிகிச்சையைப் பெறவேண்டும். குடும்ப மருத்துவர் பரிந்துரைத்தால், எலும்புநல சிறப்பு மருத்துவரிடம் சிகிச்சையைத் தொடர வேண்டும்.

**மூட்டுவலிக்கு சிகிச்சை**

எலும்பு தேய்மானத்தால் மூட்டுவலி ஏற்படுபவர்களுக்கு பலதரப்பட்ட சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன. தொடக்க நிலையில் உள்ள மூட்டுவலிக்கு வலி நிவாரணிகள் மற்றும் இயன்முறை சிகிச்சை மூலம் நிவாரணம் பெற முடியும். இவற்றில் SWD, IFT சிகிச்சைகள் முக்கியமானவை. இவற்றுடன் தொடைத் தசைகளுக்குப் பயிற்சி கொடுத்தால் மூட்டுவலி குறையும். பொதுவாக, மூட்டு வலிக்கு அதிக நாட்கள் தொடர்ந்து வலி மாத்திரைகளையும் ஸ்டீராய்டு மாத்திரைகளையும் சாப்பிடக்கூடாது. இதனால், சிறுநீரகங்கள் பாதிப்படையும். எலும்புகள் பலவீனம் அடையும். இரைப்பையில் புண் வந்துவிடும். நீரிழிவு நோய் ஏற்படவும் அதிக வாய்ப்பு உண்டு.

சிலருக்கு முழங்கால் மூட்டுக்குள் ஸ்டீராய்டு ஊசியைப் போட்டால், சில மாதங்களுக்கு வலி இருக்காது. இன்னும் சிலருக்கு ‘ஆர்த்ராஸ்கோப்’ மூலம் மூட்டின் உள்பகுதி சுத்தம் (Arthroscopic lavage) செய்யப்படும். இதனால் மூட்டில் வலி ஏற்படுத்தும் பொருள்கள் வெளியேறிவிடும். இதன் பலனால், 6 மாதம் முதல் ஒரு வருடம் வரை மூட்டு வலி இல்லாமல் இருக்க முடியும்.

**கால் வளைவுக்கு சிகிச்சை**

கால் வளைவு உள்ளவர்களுக்கு அறுவை சிகிச்சைதான் தீர்வு. மூட்டுவலி தொடங்கும் முன்பே இந்த அறுவை சிகிச்சையை செய்துகொள்வது வருங்கால சிக்கல்கள் பலவற்றைத் தடுக்கும். மூட்டில் தேய்மானம் இருப்பவர்கள், நடுத்தர வயதுக்குள் இந்த அறுவை சிகிச்சையைச்செய்துகொள்வது நல்லது. இல்லையென்றால், இந்த சிகிச்சையின் முழுப் பயனையும் பெறமுடியாது.

**செயற்கை மூட்டு மாற்று சிகிச்சை**

மூட்டில் தேய்மானம் மிக அதிகமாக இருந்தால், இந்த சிகிச்சைகள் முழுப் பயன் தராது. அப்போது முழுமையான தீர்வு தருவது, ‘செயற்கை மூட்டு மாற்று சிகிச்சை’ (Total Knee Replacement) மட்டுமே. உலோகமும் பாலிஎதிலீனும் (Polyethylene) கலந்து தயாரிக்கப்படுகிற செயற்கை மூட்டைப் பொருத்தும் அறுவை சிகிச்சை இது. இந்த இடத்தில் ஒரு முக்கிய விஷயம்... ‘மூட்டு மாற்றம்’ என்றதும் முழங்கால் மூட்டு மொத்தத்தையும் அப்படியே கொத்தி எடுத்துவிட்டு, உலோக மூட்டை அங்கு பொருத்திவிடுவதாக அர்த்தம் செய்துகொள்ளக் கூடாது. மூட்டில் குருத்தெலும்பு உள்ள மேல்தளத்தை மட்டுமே இதில் மாற்றுகிறார்கள். மூட்டின் தசைகள், நரம்புகள் போன்றவற்றுக்கு பாதிப்பு இருந்தால், இந்த சிகிச்சையால் அவற்றை சரி செய்ய முடியாது.

முன்பெல்லாம் இந்தச் செயற்கை மூட்டுகள் 6 வருட காலம்தான் தாக்குபிடிக்கும். இப்போதுள்ள நவீன தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்படுகிற செயற்கை மூட்டுகள் 20 ஆண்டுகள் வரை உழைக்கின்றன. இதைப் பொருத்திக்கொண்டால், நடக்கலாம். மாடிப் படிக்கட்டுகளில் ஏறலாம். கார் ஓட்டலாம். என்ன, கால்பந்து விளையாட முடியாது.

இளைய வயதினருக்காகவே இப்போது புதிதாகப் புகுந்துள்ளது ‘ஸ்டெம் செல் குருத்தெலும்பு சிகிச்சை’ (Stem cell cartilage treatment). இதை நுண்துளை அறுவை சிகிச்சை முறையில் மேற்கொள்கின்றனர்.

**மூட்டுவலியைத் தடுப்பது எப்படி?**

இளம் வயதிலிருந்தே பால், பால் பொருள்கள், பருப்பு, பயறு வகைகளை அதிகம் சேர்த்துக்கொள்ளவேண்டும். அடர் பச்சைநிறக் காய்கறிகள், கீரைகளைச் சாப்பிடவேண்டும். இவற்றில் உள்ள புரதச்சத்து மூட்டுகளில் கொலாஜன் உற்பத்திக்கு உதவுவதால், அங்குள்ள குருத்தெலும்பு தேய்மானம் ஆகாமல் பாதுகாக்கப்படுகிறது.

தினமும் சிறிது நேரம் உடலில் சூரிய ஒளி படும்படி நிற்கவேண்டும். சூரிய ஒளி படுவதன் மூலம் தோலின் அடிப்பாகத்தில் வைட்டமின் - டி தயாராகிறது. இது எலும்புக்கு பலம் தரக்கூடியது. சிறு வயதிலிருந்தே நடைப்பயிற்சி, நீச்சல் பயிற்சி, சைக்கிள் ஓட்டுதல் போன்றவற்றில் ஈடுபட்டால் மூட்டுத் திசுக்கள் பலம் பெறும். மூட்டுத் தேய்மானம் ஆவது தள்ளிப்போகும்.

உடல் எடையை வயதுக்கு ஏற்றபடி பராமரிக்க வேண்டியது கட்டாயம். நடக்கும்போது நம் உடல் எடையைப் போல இரண்டு மடங்கு எடையை கால் மூட்டு தாங்குகிறது. உடல் எடை அதிகரித்தால், மூட்டுக்கு அதிகப்படியான வேலை உண்டாகிறது. இதனால் மூட்டு சீக்கிரமே தேய்ந்துவிடுகிறது. எனவே, உடல் எடை சரியாக இருந்தால் மட்டுமே மூட்டுவலியைத் தவிர்க்க முடியும். தவிர, முழங்கால் மூட்டுக்கு வலிமை தருகின்ற யோகாசனங்களும் இருக்கின்றன. அவற்றை முறைப்படி செய்துவந்தால் மூட்டுவலியைத் தள்ளிப்போட முடியும்.



இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.06.2022 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781